24 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் ™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

REALTY STUDIO
சென்னை, கொடைக்கானல் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நிலம், மனை, வீடு, விற்க, வாங்குவதற்கான தொடர்புகளுக்கு
416.315.9397
realtystudio24@gmail.com

நதி 24 | பாலம் 01 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JANUARY 01, 2014

# பனிப்புயலின் கோரத்தாண்டவம்

இவ்வருட கிறிஸ்மஸ் தினம் பனிப்புயலினால் ஏற்பட்ட மிகப்பெரிய சேதங்களுடன் கொண்டாடப்பட்டது. ரொறன்ரோவில் ஒரு கட்டத்தில் 3 லட்சம் பாவனையாளர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப் பட்டிருந்தது. நியூபிறொன்ஸ்விக் மாகாணத்தில் 45,000 பாவனையாளர்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்பட்டது. டிசம்பர் 30, 2013 காலை வரை ரொறன்ரோவில் 2500 பாவனையாளர்களுக்கு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டே இருந்தது. ரொறன்ரோ மேயர் றொப் ஃபோர்ட்டின் தகவலின் படி ரொறன்ரோ மின்சாரசபைக்கு மட்டுமே $10மில்லியன் செலவு இப்பனிப்புயலால் ஏற்பட்டிருக்கலாம்.






கனடாவின் கிழக்கு கரையோர மாகாணங்கள் இப் பனிப்புயலால் பாதிக்கப்பட்டிருந்தன. பல இடங்களில் மரக்கொப்புகள் முறிந்து விழுந்து வீடுகளுக்கும், வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டிருந்தன. மின்சார துண்டிப்பினால் பல இடங்களில் நீர்க்குழாய்கள் வெடித்தும், குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்பட்ட உணவுகள் பழுதாகியும், சேதங்கள் ஏற்பட்டிருந்தன. இது தவிர பொதுப் போக்குவரத்து சேவைகள் சில பகுதிகளில் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தும் காணப்பட்டது. பல விமான சேவைகள் ரத்து செய்யப்பட்ட நிலையில் ரொறன்ரோ, ஒட்டாவா மற்றும் மொன்றியல் விமான நிலையங்களில் ஏராளமான பயணிகள் தமது பயணத்தை தொடர முடியாத நிலையில் சிரமத்திற்கு உள்ளாகியிருந்தனர்.

பலர் ரொறன்ரோ மேயர் றொப் ஃபோர்ட்டிடம் அவசரகால நிலைமையை ரொறன்ரோவில் பிரகடனப்படுத்துமாறு கேட்டிருந்தனர். ஆனால் றொப் ஃபோர்ட் ரொறன்ரோவில் ஒரு கட்டத்தில் 3 லட்சம் மின்சாரப் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருந்ததால் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்த மறுத்துவிட்டார். மேயரின் இந்த நிலையை (Denzil Minnen- Wong) உட்பட பலர் ஆதரித்தனர்.

ஒன்றாறியோவின் தென்பகுதி, கியூபெக் மாகாணம் மற்றும் ஊடகவியளாலர்களின் கணிப்பின்படி இந்தப் புயலால் ஏற்பட்ட சேதங்கள் 1998இல் கியூபெக் மற்றும் ஒன்றாறியோ மாகாணத்தில் ஏற்பட்ட பனிப்புயலால் வந்த சேதங்களுக்கு பின்னர் நடைபெற்றவற்றில் மிகப்பெரியது இதுவாகும். 1998 இல் காப்புறுதி நிறுவனங்கள் பனிப்புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு மட்டுமே $1.6 மில்லியன் செலவழித்திருந்தனர். இதுவரை இம்முறை வந்த பனிப்புயலால் ஏற்பட்ட சேத விபரங்கள் கணிக்கப்படவில்லை.

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc.

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

துரித பணமாற்றுச் சேவை
• 56 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 23 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# மீண்டும் பேச்சுப் பொறி! நழுவும் தமிழ் கூட்டமைப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், வடக்கை அபிவிருத்தி செய்வதற்கும், தம்முடன் இணைந்து பணியாற்ற முன் வருமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் நிறைவில் பதிலுரை ஆற்றியபோதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார். கூடவே இன்னொரு விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வைத்து ஐ.தே.கவும் ஜே.வி.பியும் புறக்கணித்தன.

இதனால், நாடாளுமன்றத் தெரிவுக்குழு பயனற்ற ஒன்றாக இன்றும் பெயரளவுக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசாங்கம் மிரட்டிக் கூடப் பார்த்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வராமல் போனால், அரசதரப்பு பிரதிநிதிகளே கூடி ஆராய்ந்து ஒரு முடிவை எடுப்பார்கள் என்று அரசாங்கம் மிரட்டிய போதிலும் அதற்கு கூட்டமைப்பு மசியவில்லை. அதேவேளை,



வெளிநாடுகளிடம் தீர்வைத் தேடித் திரிய வேண்டாம் என்றும், உள்நாட்டில் தீர்வைப் பெறுவதற்கு முன்வருமாறும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதுபோன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், அவரது அரசாங்கமும் அழைப்பு விடுப்பது ஒன்றும் இதுதான் முதன் முறையல்ல. ஆனால், இதற்கு முந்திய அழைப்புகள் விடுக்கப்பட்ட காலச் சூழலுக்கும் தற்போதைய சூழலுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. 2014ம் ஆண்டு இலங்கைக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆண்டாக அமையும் என்று கருதப்படுகிறது. இந்த நிலையில் அரசாங்கத்திடம் இருந்து வந்துள்ள பேச்சுக்கான அழைப்புக் குறித்து, பல்வேறு சந்தேகங்களும், கேள்விகளும் எழுந்துள்ளன. ஏனென்றால், இதுவரை அரசாங்கம் தமிழர் பிரச்சினையை நியாயமாகத் தீர்க்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் செயற்படவோ, அதற்கான முயற்சிகளில் ஈடுபடவோ இல்லை.

விடுதலைப் புலிகளை அழிக்கும் வரை, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைத் தருவதாக கூறிவந்த மஹிந்த ராஜபக்ச அரசாங்கம், விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டது. 2011ம் ஆண்டு வரை இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு தம்மிடம் உள்ளதாகக் கூறிவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, பின்னர், தன்னிடம் தீர்வு ஏதுமில்லை என்று கையை விரித்தது மட்டுமன்றி, தெரிவுக்குழுவே தீர்வைத் தேட வேண்டும் என்றும் அறிவித்தார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணப் போவதாக அரசாங்கம் அறிவித்த போதிலும், அது உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை என்பதைப் புரிந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் இணைந்து கொள்ளவில்லை. அதையே காரணமாக

அரசாங்கமும் தனியாக தெரிவுக்குழுவைக் கூட்டி ஒரு தீர்வை எட்டத் தயாராகவும் இருக்கவில்லை. ஏனென்றால், அவ்வாறு அரசாங்கம் ஒருதலைப்பட்சமான முடிவுகளை எடுத்தால், அதன் விளைவுகள் அரசாங்கத்தையே பாதிக்கும். எனவேதான், தெரிவுக்குழுவை கைவிடவும் முடியாமல், அதனைச் செயற்படுத்தவும் முடியாமல் இக்கட்டில் சிக்கியிருக்கிறது.

இந்த நிலையில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், அரசாங்கம் அடுத்த ஆண்டில் பலத்த சவால்களை எதிர் கொள்வதற்கு வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசுக்கு எதிரான அடுத்தகட்ட நகர்வுகளில் மேற்குலக நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. வரும் மார்ச் மாத அமர்வில் இலங்கையை எப்படியாவது ஒரு வழிக்குக் கொண்டு வந்து விடுவதில் மேற்கு நாடுகள் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது. எனவே, மார்ச் மாதத்துக்கு முன்னதாக எதையாவது செய்து, ஜெனீவாவில் தம்மைக் காப்பாற்ற முனைகிறது அரசாங்கம். இது ஒரு காரணம்.

இரண்டாவது காரணம், அடுத்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத் தேர்தலை நடத்தும் திட்டத்தை அரசாங்கம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஜனாதிபதி அல்லது நாடாளுமன்றத் தேர்தலை இனிமேல் அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முன்னிறுத்தி எதிர்கொள்ள முடியாது. அந்த மாயை மெல்ல மெல்ல உடையத் தொடங்கி விட்ட நிலையில், அரசாங்கத்துக்கு புதிய உபாயம் ஒன்றைத் தேடவேண்டிய சிக்கல் உள்ளது. ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதானால், தமிழ் வாக்குகளை கவர எதையாவது செய்தாக வேண்டிய நெருக்கடி அரசாங்கத்துக்கு உள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவாக தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், கடந்த






தேர்தல்களில் தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் அதனை தெளிவாகவே எடுத்துக் காட்டியுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ்மக்களுக்கு அள்ளி வீசிய வாக்குறுதிகள் பல இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அல்லது மீள் குடியமர்வு போன்ற பல வாக்குறுதிகள், குறிக்கப்பட்ட கால எல்லைகளுக்கு அப்பால் நீண்ட இழுபறிகளின் பின்னரே நிறைவேற்றப்பட்டன.

இத்தகைய கட்டத்தில், அரசாங்கத்துக்கு எதிரான அலை தமிழ் மக்களிடம் தொடர்ந்து நீடித்து வருவதை, வடக்கு மாகாண சபைத் தேர்தல் எடுத்துக் காட்டியுள்ளது. எனவே, அடுத்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதை அரசாங்கம் உறுதிப்படுத்தினால், தமிழர்களின் வாக்குகளை கவர வேண்டிய தேவை நிச்சயம் உள்ளது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவை பெறுவது தான் ஒரே வழி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதன் மூலம் அதற்கான கதவுகளை மெல்லத் திறக்கலாம். இப்படிப் பல தேவைகள் அரசாங்கத்துக்கு உள்ள நிலையில் தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த அழைப்பு விடுத்துள்ளது அரசாங்கம். ஆனால், இந்த அழைப்பு தமிழ் மக்களுக்கு நம்பகத்துக்குரியதொன்றாக இருக்கவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் தமிழர்களை அரசாங்கம் தமது தேவைகளுக்கே பயன்படுத்தி வந்துள்ளது. எனவே, இந்த அழைப்பில் தமிழர் தரப்பு சந்தேகம் கொள்வதில் ஆச்சரியம் ஏதுமில்லை. அதனால் தான், மிக அவதானமாக, ஆக்கபூர்வமாக அரசாங்கம்

பேச முன்வந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம் என்று சம்பந்தன் கூறியுள்ளார். அவர் அவ்வாறு கூறியிருந்தாலும், இலகுவாக அவரோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அரசாங்கத்தின் பொறிக்குள் சிக்கிக் கொள்ளமாட்டார்கள் என்றே நம்பலாம். ஏனென்றால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஒரு தீர்வைப் பெறுவதற்கு விருப்பம் கொண்டிருப்பாரேயானால், அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்த பல வழிகள் உள்ளன.

ஆனால், அவர் அப்படி நடந்து கொள்ளவில்லை. குறிப்பாக, வடக்கு மாகாண சபையை அவரோ, அவரது கட்டுப்பாட்டில் உள்ள ஆளுநரோ சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கவில்லை. இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதற்கு முன்னர், வடக்கு மாகாணசபை மீது செலுத்தும் ஆதிக்கத்தை குறைத்து, ஆளுநரை மாற்றி சுமுகமானதொரு சூழலை அவரால் உருவாக்க முடியும். அத்தகையதொரு நிலையை ஏற்படுத்தாமல், வெறும் பேச்சுப் பொறி ஒன்றை வைத்து அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விழுத்தலாம் என்று கனவு காண்கிறது அரசாங்கம்.

ஏற்கனவே இதுபோன்ற பொறியில் சிக்கியே வெளிவந்தது என்பதால் அவ்வளவு இலகுவாக இதில் கூட்டமைப்பு விழுந்து விடாது. வவுனியாவில் நடந்த கூட்டமைப்புத் தலைவர்களின் கூட்டத்தில், எதிர்வரும் ஜெனீவா கூட்டத்தொடருக்கு முன்னதாக, அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதில்லை என்று எடுக்கப்பட்டுள்ள முடிவு இதனை நன்றாகவே உறுதிப்படுத்துகிறது.

விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
   www.tamilvanakkam.com

# கனடிய வரலாற்றில் இனவாரி நடவடிக்கை

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## அரசாங்கம் குடிவரவாளர்களைப் பட்டயத்தின்படி நடத்த வேண்டியுள்ளதா?

குடிவரவுச் சட்டத்தின்படி அரசாங்கம் குடியுரிமை அற்றவர்களுக்கு வேறு நியமங்களைக் கையாள்வதற்கு அனுமதி உண்டு. எனினும் அதேகுடிவரவுச் சட்டம்கூடப் பட்டயத்துக்கு அமைந்ததாய் விளங்க வேண்டும். பாதுகாப்புச் சான்றிதழ் மூலம் பெற்ற அதிகாரத்தைக் கொண்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டோருக்கு, அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் தெரிவிக்கப்படாதபடியால், பட்டயத்தின் விதிமுறைச் செவ்வை மற்றும் அடிப்படை நீதி சார்ந்த ஏற்பாடுகளை (அதாவது பட்டயத்தின் 7ம் பிரிவின் மூலம் பாதுகாக்கப்படும் ஏற்பாடுகளை) பாதுகாப்புச் சான்றிதழ் தொடர்பான பிரிவு மீறுவதாகக் கனடிய உச்ச நீதிமன்று அண்மையில் தீர்ப்பளித்தது. அதாவது தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எவை என்பதை முழுமையாக அறியாத நிலையிலேயே, அக்குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையாக அமைந்த தகவலைப் பார்க்க இயலாத நிலையிலேயே அவற்றை எதிர்கொள்வதற்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

## பட்டயத்தின்படி எனது பிற அடிப்படை உரிமைகள் எவை?

பட்டயத்தின் 2ம் பிரிவின்படி கனடாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் தமது கருத்தை (அரசாங்கத்தின் தலையீடின்றி) சுதந்திரமாக எடுத்துரைப்பதற்கும், பிறருடன் சேர்ந்து சட்டபூர்வமான குறிக்கோள்களை எய்துவதற்கும் உரிமை உண்டு. அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதும் கண்டனம் தெரிவிப்பதும் அவ்வாறு கருத்துரைப்பதற்கும், கூட்டுச்சேர்வதற்கும் உட்பட்டதே. அதாவது ஏனைய கனடியச் சட்டங்களை மீறாத முறையில் (அதாவது மற்றவர்களை ஊறுபடுத்தாது, உடைமைகளைச் சேதப்படுத்தாது, குழப்பம் விளைவிக்காது) ஆர்ப்பாட்டம் செய்வதைத் தடுக்கும் உரிமை அரசாங்கத்துக்கு கிடையாது. பட்டயத்தின் பாதுகாப்புக்கு உட்பட்ட பண்பாட்டு, சமய மற்றும் பிற அம்சங்களையும் பேச்சுச் சுதந்திரம் மதிக்க வேண்டும். ஒரு குழுமத்தவரைக் குறித்து இன, தாயக, இனத்துவ, நிற, சமய, பால், வயது, உள அல்லது உடல் வலுக்குறைவு (அல்லது அத்தகைய வேறோர் அம்சத்தின்) அடிப்படையில் கண்டனம் தெரிவிப்பது காழ்ப்புணர்வுப் பேச்சு என்று கொள்ளப்படுகிறது. காழ்ப்புணர்வுப் பேச்சு, கனடிய மனித உரிமைச் சட்டத்துக்கு (Canadian Human Rights Act) முரணானது. கனடாவில் அது ஒரு குற்றம் ஆகும். அதற்கு இரண்டு ஆண்டுகள்வரை சிறைத் தண்டனை விதிக்கலாம்.

ஒருவர் தனது கருத்தை எடுத்துரைக்கும் சுதந்திரத்தை மாத்திரமன்றி, சமயச் சுதந்திரத்தையும் தான் விரும்பும் சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரத்தையும் பட்டயத்தின் 2ம் பிரிவு அளிக்கிறது. அதேவேளை, ஒருவர் தனது கருத்தை எடுத்துரைக்கும் சுதந்திரம் வேறொருவரின் உரிமைகளை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளில் அல்லது வேறொரு சட்டத்துடன் முரண்படும் சூழ்நிலைகளில் அதனை மட்டுப்படுத்தலாம். அரசாங்கம் நியாயமின்றி உங்கள் வாகனத்தை தேடுதல் போடுவது உட்பட உங்கள் ஆதனத்தை தேடுதல் போடுவது அல்லது கைப்பற்றுவது பட்டயத்தின் (8ம் பிரிவின்)படி சட்டவிரோதமாகும். அதாவது ஒரு நீதிபதியின் அனுமதியுடன் கூடிய விசேட ஆணையின்றி உங்களை உளவுபார்க்கவோ, கண்காணிப்புக்கு உள்ளாக்கவோ, உங்கள் அந்தரங்கத்தை மீறவோ அரசாங்கத்துக்கு உரிமை இல்லை.

காரணமின்றி தடுப்புக் காவலில் வைக்கப்படாவாறும் பட்டயம் (9ம் பிரிவு) திட்டவட்டமாக உங்களைப் பாதுகாக்கிறது. தடுப்புக் காவலில் வைக்கப்படும் காரணத்தை அறியும் உரிமையையும், கைதுசெய்யப்படும்பொழுது ஒரு சட்டவாளருடன் தொடர்புகொள்ளும் உரிமையையும் இப்பட்டயம் (10ம் பிரிவு) கனடாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் அளிக்கிறது. பட்டயம் மீறப்படுவது கண்டறியப்பட்டால் என்ன நடக்கும்?

மக்களாட்சி-நெறிநிற்கும் ஒரு சுதந்திர சமூகத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு பட்டயம் மீறப்பட்டால் மாத்திரமே, அது மீறப்படுவதை அரசாங்கத்தால் சில சூழ்நிலைகளில் நியாயப்படுத்த முடியும். சர்ச்சைக்குரிய நடவடிக்கையை அல்லது சட்டத்தை நாடுவதற்கு ஓர் அவசர நோக்கம் உண்டா, அந்நடவடிக்கை அல்லது ஏற்பாடு அந்நோக்கத்துடன் தொடர்புடையதா, நாடப்படும் நடவடிக்கை அல்லது நடைமுறை உங்கள் உரிமைகளை இயன்றவரை குறைந்தளவு மட்டுப்படுத்துகிறதா என்பவற்றைக் கருத்தில் கொண்டே நீதிமன்றுகள் அந்த விடயத்தில் தீர்ப்பளிக்கும். ஈற்றில், ஒருவரின் உரிமைக்கும் அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் இடையே சம்பந்தப்படும் நலன்களைப் பொறுத்தவரை ஒரு சமன்பாடு கருத்தில் கொள்ளப்படும். இத்தகைய ஆய்வில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நியாயப்படுத்த முடியாவிட்டால், அதன் நடவடிக்கை சட்டவிரோதமானது என்றே கொள்ளப்படும்.

## பட்டயம் மீறப்பட்டால் எனக்குப் பரிகாரம் பெறும் உரித்துண்டா?



பட்டயம் மீறப்பட்டமை கண்டறியப்பட்டால், மக்களாட்சிநெறி நிற்கும் ஒரு சுதந்திர சமூகத்தில் அதனை நியாயப்படுத்த முடியாவிட்டால், உங்களுக்குப் பரிகாரம் பெறும் உரித்துண்டு. நீங்கள் ஆட்சேபிக்கும் சட்டம் 'நிராகரிக்கப்படும்' (அது செல்லாது அல்லது சட்டவிரோதமானது என்று தீர்ப்பளிக்கப்படும்). நீங்கள் ஆட்சேபிப்பது அரசாங்கத்தின் நடவடிக்கையை என்றால், நீங்கள் ஆட்சேபிக்கும் அந்நடவடிக்கை சட்டவிரோதமானது என்று தீர்ப்பளிக்கப்படலாம். அதாவது நீங்கள் சட்டவிரோதமான தடுப்புக் காவலுக்கோ, தேடுதலுக்கோ, கைதுக்கோ உள்ளாக்கப்பட்டிருந்தால், அவ்வாறு உள்ளாக்கப்படுவது கூடச் சட்டவிரோதமான செயலாகக் கொள்ளப்படும். அச்செயல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள், கூற்றுகள் எவையுமே நீதிமன்றில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. மேலும், நீங்கள் சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டாலோ, தேடுதல் போடப்பட்டாலோ, கைதுசெய்யப் பட்டாலோ, அரசாங்கம் புரிந்த தவறுக்காக நீங்கள் நட்டஈட்டுப் பணம் பெறும் உரித்துடையவராகலாம்.

பட்டயம் மீறப்படுவதற்குப் பரிகாரமாகப் பெருந்தொகைப் பணம் கிடைப்பது மிகவும் அபூர்வம். எனினும், உங்களுக்கு இழைக்கப்பட்ட தவறின் தன்மைக்கு ஏற்புடைய தொகை கிடைக்கும். அண்மையில் மேகர் அரார் (Maher Arar) விடயத்திலேயே நீதிமன்ற விசாரணையின்றி அவருக்கு மிகப்பெரிய தொகை வழங்குவதற்கு அரசாங்கத்துடன் இணக்கம் காணப்பட்டது. அதில் பட்டயம் மீறப்பட்ட விடயங்களை மட்டுமன்றி, ஒரு குடிமகன் என்ற வகையில் தனக்கு இழைக்கப்பட்ட வேறு தவறுகளையும் அவர் கிளப்பியிருந்தார். கனடிய அதிகாரிகள் (அவர் ஏதாவது தவறிழைத்திருந்தால், அதற்கான திட்டவட்டமான சான்றை நாடுவதை விடுத்து) அவருடைய சமயத்தையும் பின்புலத்தையும் கருத்தில் கொண்டு, முன்கூட்டியே முடிவுகட்டி, இனவாரி நடவடிக்கை எடுத்ததற்கு எண்ணிறந்த சான்றுகள் உள்ளன. அதன் விளைவாக அவர் சிரியாவில் சிறைவைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார். ஈற்றில், அவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே கனடிய அரசாங்கம் அவருடைய சட்டவாளர்களுடன் மாதக் கணக்கா பேச்சுவார்த்தை நடத்தி $1 கோடிக்கு ($10 million) மேற்பட்ட தொகையை அவருக்கு வழங்கியது.

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# நீங்கள் உண்மையான நண்பாரா?



சத்குரு வாசுதேவ்

உணர்வுகளை இதயம் மாற்றி நண்பனுக்காக தோள்கொடுத்து தூது சென்று அடி வாங்கி உங்கள் நண்பர்களை எப்படி தேர்ந்தெடுக்கிறீர்கள். பெருவாரியான மக்களைப் போல் நீங்களும் இருந்தால் உங்கள் எண்ணங்களுக்கு உங்கள் உணர்வுகளுக்கு நீங்கள் புரிந்து கொள்ளும் விதத்திற்கு உங்கள் விருப்பு வெறுப்புக் களுக்கு ஒத்துப்போகிறவராய் பார்த்து உங்கள் நண்பராய் தேர்ந்தெடுப்பீர்கள். இதை மற்றொரு விதத்தில் பார்த்தால் உங்கள் குழறுபடிகளை ஒத்துக் கொண்டு ஆதரிப்பவர்களையே நண்பர்களாக ஆக்கிக் கொள்கிறீர்கள்.

இங்கேதான் ஒரு குரு வேறுபடுகிறார். அவர் உங்கள் நண்பராக இருக்கும் சமயத்தில் உங்கள் ஈகோவையும் தன் காலடியில் போட்டு நசுக்குவார். பொதுவாக உங்கள் நண்பரே உங்கள் ஈகோவை தொட்டாலும் அவர் உங்களுக்கு விரோதியாகி விடுவார். ஆனால் ஒரு குருவிற்குமட்டும் உங்கள் ஈகோவை உடைத்து அதே சமயத்தில் உங்களுடன் நண்பராக இருக்கும் அந்த பெருமையும் உண்டு.

நீங்கள் யாரோ ஒருவருடைய நண்பராக இருக்கும்போது அந்த மனிதரை அவருடைய குற்றம் குறைகளை சொல்லி சதாசர்வகாலமும் நச்சரித்து கொண்டே இருக்கமாட்டீர்கள். அதேசமயம் உங்கள் நண்பரிடம் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லும் நேர்த்தியும் உங்களுக்கு இருக்க வேண்டும். அனைவரும் நம்மை விரும்ப வேண்டும் என்ற நம் தாகத்தால் முட்டாள் தனமான செய்கைகளை நாம் செய்யத் தொடங்கி விடுகிறோம். உங்களைச் சுற்றி இனிமையான சூழ்நிலைகளை உருவாக்கு வதற்காக உங்களுக்குள் நீங்கள் உருவாக்கும் இனிமையற்ற சூழ்நிலையை பாருங்கள். மனம் ஒரு வழமையான நிலம். அதில் நீங்கள் விதைக்கும் உணர்வுகளுக்கு நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். மிகவும் இனிமையற்ற விடயங்களை நீங்கள் உங்களுக்குள் புதைத்தால் வளரும் கனிகள் கசப்பாக தான் இருக்கும்.

உங்கள் நட்பின் உறுதியை நீங்கள் பரிசோதிக்க விரும்பினால் உங்கள் நண்பரிடம் நல்ல பேரை எடுக்கும் எண்ணத்தை தளர்த்த முயற்சி செய்ய பாருங்கள். அதைச் செய்வதற்கு உங்களுக்கு துணிவு இருக்கிறதா? தற்சமயம் உங்கள் நட்பு உடன்படிக்கை



களின் பேரிலும் விருப்பு வெறுப்பின் பேரிலும் நடைபெறுகிறது. ஆனால் உண்மையான நண்பன் என்றால் உங்கள் தவறுகளை சுட்டிக் காட்டும் அதேசமயத்தில் உங்களிடம் அதே அன்பையும் அரவணைப்பையும் வழங்குவார்.

என்ன புரியவில்லையா? ஒரு கதை சொல்கிறேன்...

அமெரிக்க போர் தளபதிகள் ஒரு நாள் கூடினார்கள். தங்கள் போர் படைகளுடன் உடற்பயிற்சிக்காகவும் களிப்பிற்காகவும் கிரான் கன்யான் என்னும் பள்ளத்தாக்கிற்கு பயணப்பட்டார்கள். வெகு சீக்கிரத்திலேயே படைத்தளபதிகள் தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்ள துவங்கினர்.

முதல் தளபதி என் படைவீரர்களைப் போல் துணிவும் கட்டளைக்கு பணிந்து போகும் திறனும் வேறு ஒருவருக்கு வராது என்று தன் படைவீரர்களின் திறத்தை மெச்சத் துவங்கினார். நான் நிரூபித்துக் காட்டுகிறேன் என்று ஏ! பீற்றர், அங்கொரு இளம் படை வீரர் ஓடி வந்தார். “உனக்குப் பின்னால் அந்தப் பிரமாண்ட பள்ளத்தாக்கை பார்க்கிறாயே? அதை நீ இப்பொழுதே தாவி மறு பக்கத்திற்கு செல்ல வேண்டும்!” அந்த வீரன் தன்னால் எவ்வளவு வேகத்தில் ஓடிக் குதிக்க முடியுமோ ஓடிக் குதித்தான். அவனால் அவ்வளவு பெரிய பள்ளத்தாக்கை தாண்ட முடியுமா என்ன? பாறையில் விழுந்து மண்டை உடைந்து செத்துப் போனான்.

தற்போது இரண்டாவது படைத்தளபதியின் சந்தர்ப்பம். இரண்டாவது தலைவன் இலக்காரமாக சிரித்து “என்னை பார் என்றான். “ஹிகின்ஸ்”என்று அழைத்தார். ஒரு வீரன் வந்தான். “தற்போது ஒரு அவசர நிலை. நீ இந்தப் பள்ளத்தாக்கை கடந்து பறந்து சென்று மறுமுனையில் இருக்கும் நம் ஆபீசருக்கு தகவல் சொல்லி விட்டு வா” என்றார். அந்த மனிதர் தன் கைகளை அசைத்துக் கொண்டு வேறென்ன நிகழ்ந்திருக்கும் பள்ளத்தாக்கில் தொப்பென விழுந்தார்.

மூன்றாவது படைத்தளபதி மிக அமைதியாகி விட்டார். ஆனால் பிற தளபதிகள் அவரை விடுவதாய் இல்லை. வெளியே சென்று மூன்றாம் அவரின் போர்வீரன் ஒருவனை அழைத்து “அதோ கீழே உள்ள அந்த ஓட்டையை உன்னால் பார்க்க முடிகிறதா?” அந்த வீரன் தலை அசைத்தான் அந்த ஓடை மிகப் பெரிய அருவி ஒன்றில் இருந்து 200 மீற்றர் தொலைவிலேயே இருந்தது. அந்த படைவீரனிடம் ஒரு கடிதத்தை கொடுத்து “நீ அந்த ஓடைக்குள் குதித்து அதை நீந்திக் கடந்து, இந்தத் தகவலை தலைமையகத்தில் கொண்டு சேர்க்க வேண்டும்” என்று சொன்னார். குழம்பிய நிலையில் தளபதியை பார்த்த அந்த வீரன் “சார், நீங்க ரெம்ப குடித்திட்டீங்கள் என்று நினைக்கிறேன். இது மாதிரி முட்டாள் தனமான விடயத்தை செய்ய மாட்டனே,” என்றான். மூன்றாவது தளபதி அதிர்ச்சியில் உறைந்து போயிருந்த பிற தளபதிகளை பார்த்து “இதுதான் உண்மையான தைரியம்!” என்றார்.

உங்கள் நட்பில் தைரியமாய் இருங்கள். உங்கள் மனதில் உள்ளதை வெளிப்படை யாய் பேசுவது உங்கள் நண்பரை இழக்கச் செய்தால் பிரிவதற்கு தயாராய் இருங்கள்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**:
www.innerengineering.org

# கனடிய...

சட்டவிரோதமான செயல் ஒன்று நிகழ்ந்துள்ளது என்பதை மெய்ப்பிக்கக்கூடியவராக ஒருவர் விளங்க வேண்டும். அதற்கு ஏதாவது வழக்காறு அல்லது நியமப் படிமுறை மூலம் அரசாங்கத்தால் விளக்கமளிக்க முடியாதிருக்க வேண்டும். அது மாபெரும் கெடுதியை விளைவித்த சட்டவிரோதமான செயலாக இருக்க வேண்டும். அது ஏதோ ஒரு விதத்தில் மெய்ப்பிக்கக்கூடிய செயலாக இருக்க வேண்டும். எனவே இனவாரி நடவடிக்கை எடுத்ததற்குப் பரிகாரமாகப் பணம் பெறுவது மிகவும் கடினம் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

எனினும், மக்களாட்சி-நெறிநிற்கும் ஒரு சுதந்திர சமூகத்தில் நியாயப்படுத்த முடியாத ஒரு தவறினை அரசாங்கம் இழைத்துள்ளது என்பதை உங்களால் மெய்ப்பிக்கமுடியும் என்றால், அது தனித்தே ஒரு வெற்றி ஆகலாம். ஒரு குறிப்பிட்ட செயல் அல்லது நடவடிக்கை சட்டவிரோதமான செயலாக அல்லது நடவடிக்கையாகக் கொள்ளப்பட லாம். உங்கள் உரிமைகளையும், அவற்றை அரசாங்கம் மீறிய விபரத்தையும் விளம்பும் ‘பிரகடனம்’ ஒன்றை நீதிமன்றிடம் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். எத்தகைய நடத்தை யை அரசாங்கம் தவிர்க்கவேண்டுமோ அத்தகைய நடத்தைக்கு ஓர் எடுத்துக் காட்டாக அப்பிரகடனம் அமையும். அது வருங்கால நடவடிக்கைகளுக்கு உதவும்.

## நான் பட்டயத்துக்கமைய ஒரு முறைப்பாட்டை முன்வைப்பது எப்படி?

ஒரு சட்டவாளருடன் தொடர்புகொண்டு, பட்டயத்துக்கமைய ஒரு முறைப்பாட்டை முன்வைப்பதே புத்தி. உங்களைப் பொறுத்தவரை ஒரு குறித்த விடயத்தில் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைக்கு நீங்கள் ஆட்சேபம் தெரிவிக்க முயன்றாலோ, அல்லது (குடிவரவு-அகதிப் பாதுகாப்புச் சட்ட பாதுகாப்புச் சான்றிதழ் ஏற்பாடுகள் போன்றவை தொடர்பான) ஒரு சட்டத்துக்கு நீங்கள் ஆட்சேபம் தெரிவிக்க முயன்றாலோ, உங்கள் சமூகத்தின் அல்லது இச்சிற்றேட்டின் இறுதியில் நிரலிட்ட வேறு அமைப்புகளின் ஆதரவை ஈட்டிக்கொள்ளும் வாய்ப்பினைக் கருத்தில் கொள்ளவும். பாதுகாப்புச் சான்றி தழுக்குத் தெரிவிக்கப்படும் ஆட்சேபத்தைப் போலவே, இதற்குத் தெரிவிக்கும் ஆட்சேபத் தை வலுப்படுத்துவதில் பொதுமக்களின் ஆதரவும், விடாப்பிடியான ஊடக முழக்கங்களும் முக்கிய பங்கு வகிக்கும்.

- தமிழாக்கம்: மணி வேலுப்பிள்ளை



# மோட்கேஜ்-கிளினிக்

வோக் -இன் **சனிக்கிழமை** தோறும் 9.00am -5.00 pm வரை

உங்கள் அனைவருக்கும் சென்ட்ரம் ரப்பிட் மோட்கேஜின்

## இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்

மலரும் புத்தாண்டு மோட்கேஜ் தொடர்பான உங்கள் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வினை பெற்றுத்தரும் ஆண்டாக அமையட்டும்.

தீர்வினை பெற்றுக்கொள்ள அழையுங்கள்!!



**416-644-3555**

**CENTUM Rapid Mortgages Inc.**
FSCO LIC # 10156
Office: T.P: 416-644-3555 Fax: 888-644-3556
211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. 416-259-2002 **"Rapid Response; Rapid Results"**

# விளையாட்டுத் தகவல்கள் 354

## இங்கிலாந்துக்கு மிக வருத்தமான கிறிஸ்மஸ் பண்டிகை! ஆஷிஸ் தொடரை கைப்பற்றியது அவுஸ்ரேலியா!

பெர்த் டெஸ்ட் போட்டியின் 5ஆம் நாளான இங்கிலாந்து தனது 2வது இன்னிங்ஸைத் தொடர்ந்து விளையாடி 353 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதன் மூலம் அவுஸ்ரேலியா 150 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஆஷிஸ் தொடரை 3- 0 என்று கைப்பற்றியது. மிட்செல் ஜான்சன் மீண்டும் அபாரமாக வீசி 4 விக்கெட்டுகளையும் நேதன் லயன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இங்கிலாந்தின் ஒரே ஆறுதல் இங்கிலாந்தின் புதிய ஆல் ரவுண்டர் பென் ஸ்டோக்ஸ் 120 ரன்கள் எடுத்ததே. 251/5 என்று துவங்கிய இங்கிலாந்து மேட் பிரையர் இரண்டு அபார பவுண்டரிகளை ஹேரிஸ் பந்தில் அடித்தார். பென் ஸ்டோக்ஸ் நேதன் லயன் பந்தை மேலேறி வந்து இரண்டு பவுண்டரி ஒரு சிக்சரை அடித்தார். மைக்கேல் கிளார்க் புருவம் உயர்ந்தது. பந்துகள் மட்டையை உரசிச் சென்றது ஆனால் அவுட் ஆக்க முடியவில்லை. இந்த நிலையில் 26 ரன்கள் எடுத்த பிரையர் சிறிது நேரம் நிற்பார் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்த்திருப்பார்கள் இங்கிலாந்தில். ஆனால் பிரையர் ஜான்சன் வீசிய வைடு பந்தை தொட்டு வெளியேறினார்.

பிறகு பென் ஸ்டோக்ஸ் தனது முதல் சதத்தை உடையும் பெர்த் பிட்சில் எட்டினார். அவரும் பிரெஸ்னனும் இணைந்து ஸ்கோரை 336 ரன்களுக்கு உயர்த்தினர். 120 ரன்கள் எடுத்த ஸ்டோக்ஸ் லயன் பந்தை ஆ∴ப் ஸ்டம்பிலிருந்து ஸ்வீப் செய்ய முயன்றார். பந்து மட்டையின் அடி விளிம்பில் பட்டு ஹேடினின் நல்ல கேட்சாக முடிந்தது. கிரேம் ஸ்வான் லயனின் பந்தை ஷாட் லெக் திசையில் கேட்ச் கொடுத்து 4 ரன்களில் வெளியேறினார். வேகமாக வீசிய ஜான்சன் பிரஸ்னனுக்கு ஒருபந்தை மெதுவாக வீச அவர் அதை மிட் ஆனில் கேட்ச் கொடுத்தார். ரோஜர்ஸ் டைவ் அடித்து பிடித்தார் அந்தக் கேட்சை கடைசியாக ஜேம்ஸ் ஆண்டர்சனுக்கு ஒரு ஷாட் பிட்ச் பந்தை வீசி ஜான்சன் வெற்றி விக்கெட்டை வீழ்த்தினர். 2009 இற்குப் பிறகு அவுஸ்ரேலியா ஆஷிஸ் தொடரை மீண்டும் தன் சொந்த மண்ணில் கைப்பற்றியது. ஜான்சன் இந்தத் தொடரில் இதுவரை 23 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். கிறிஸ்மஸ் பண்டிகையை அவுஸ்ரேலியா மகிழ்ச்சியாகக் கொண்டாட இங்கிலாந்துக்கு மிக வருத்தமான கிறிஸ்மஸ் பண்டிகையாக இது அமைந்துள்ளது. ஆட்ட நாயகனாக பெர்த் பிட்சில் முதல் நாள் சதம் அடித்த ஸ்டிவ் ஸ்மித் தேர்வு செய்யப்பட்டார். ஆஸ்ரேலிய வீரர்கள் கண்களில் கண்ணீர் பெருகியது. கிளார்க் அந்தக் கணத்தை இவ்வாறு கூறினார்: 10க்கு10 இதைவிட சிறப்பாக விளையாட முடியாது. இங்கிலாந்தில் இங்கிலாந்து எப்படி உணர்ந்ததோ அதே போல் நாங்கள் உணர்கிறோம். 3 போட்டிகளாக செய்த கடின உழைப்புக்கு பலன் கிடைத்துள்ளது. மிட்செல் ஜான்சன் அபாரம்! இந்த வெற்றியின் திரைக்குப் பின்னால் நிறைய பேர் உள்ளனர். அவர்களுக்கு அணியின் சார்பாக நன்றி. இவ்வாறு கூறினார் கிளார்க்.

## ஐசிசி விருது! சிறந்த துடுப்பாட்ட வீரராக சங்கக்கார தெரிவு



இலங்கை அணி வீரர் குமார் சங்கக்கார சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை (ODI Cricketer of the year Award) வென்றுள்ளார். இந்த விருதுக்காக பாகிஸ்தான் சுழல் பந்துவீச்சாளர் ஷகீட் அஜ்மல், இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் தோனி மற்றும் ஷிகார் தவான் உள்ளிட்ட வீரர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தன. அத்துடன் இலங்கை அணியின் மற்றுமொரு வீரரான மஹேல ஜெயவர்த்தன துடிப்பு மிக்க கிரிக்கெட் வீரருக்கான விருதை (Spirit of Cricket Award) தனதாக்கியுள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி டெஸ்ட் போட்டிகளின் சிறந்த வீரருக்கான விருதை அவுஸ்ரேலிய வீரர் மைக்கள் கிளார்க் வென்றுள்ளார். பெண்களுக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் சிறந்த வீராங்கனைக்கான விருதை சுசி பேட்ஸ் (Suzie Bates) தனதாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐசிசி தரவரிசை: முதலிடத்தில் இலங்கை இரண்டாமிடத்தில் இந்தியா!

ஐ.சி.சி இருபதுக்கு - 20 ஓவர் கிரிக்கெட் தரவரிசையில் இலங்கை முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டது. சர்வதேச இருபது ஓவர் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெள்ளிக்கிழமை வெளியிட்டது. சமீபத்தில் முடிவடைந்த இலங்கை- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இருபது ஓவர் கிரிக்கெட் தொடர் முடிவடைந்த பின் இந்த அறிவிப்பு வெளியானது. கடைசி ஒருநாள் ஆட்டம் தொடங்கும் முன், இலங்கை முதல் இடத்தில் நீடிக்க வேண்டுமானால், அந்த ஆட்டத்தில் கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற நிலை இருந்தது. அதன்படி கடைசி ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற்று தரவரிசையில் முதலிடத்தை உறுதி செய்தது. இரண்டாம் இடத்தில் இந்தியாவும், மூன்றாமிடத்தில் தென் ஆப்ரிக்க அணியும் நான்காமிடத்தில் பாகிஸ்தான் அணியும், ஐந்தாமிடத்தில் மேற்கிந்திய தீவுகள் அணிகள் அங்கம் வகிக்கின்றன.






## புதியசாதனை நிகழ்த்திய ரொனால்டோ

சாம்பியன்ஸ் லீக் போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ புதியசாதனை படைத்துள்ளார். கோபன்ஹேகனில் நடந்த சாம்பியன்ஸ் லீக் போட்டியில் ரியல் மாட்ரிட் ஸ்டிரைக்கர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, தனது அணியை 2-0 என்ற விகிதத்தில் வெற்றி பெறச்செய்தார். இவரது கோல் தான் ரியல் மாட்ரிட் அணியை வெற்றி பெறச் செய்தது. இதன் மூலம் போட்டியில் அதிக கோல் அடித்த நபர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தி உள்ளார். இந்த சீசனில் அவர் 9 கோல்கள் அடித்து உள்ளார், இதற்கு முன் சீசனில் 8 கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. இதுகுறித்து அவர் கூறுகையில், நான் எனது கோல்கள் கணக்கின் மூலம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். அணியின் வெற்றிக்கு உதவ முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். நான் அதிக கோல்கள் அடிக்க விரும்பினேன், அது சாதனையாக அமைந்தது. ஆனால் நான் சாதனைகளை முறியடிக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். காற்பந்து உலக கிண்ணத்தை வெல்லப்போவது யார்? மெர்ஸியின் நம்பிக்கை அர்ஜென்டினாவின் முன்னணி காற்பந்து வீரரான லயோனல் மெஸ்சி பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். சமீபத்தில் நடந்த ஐரோப்பிய கால்பந்து போட்டியில் அதிக கோல்கள் அடித்தற்காக மெஸ்சிக்கு தங்க காலணி பரிசாக வழங்கப்பட்டது. இந்நிலையில் காற்பந்து உலக கிண்ணம் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட மெர்ஸி, அடுத்த வருடம் பிரேசிலில் நடக்கும் உலகக்கோப்பை காற்பந்து தொடரில் சாம்பியன் பட்டத்தை ஜெர்மனி, பிரேசில், ஸ்பெயின், பிரான்ஸ் அல்லது அர்ஜென்டினா அணிகள் வெல்ல வாய்ப்புள்ளது எனத் தெரிவித்தார். "கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட காயம் வரும் ஜனவரி மாத்திற்குள் குணமாகிவிடும் என நம்புகிறேன். அடுத்த ஆண்டு உலகக்கோப்பையை வெல்ல வேண்டும் என விரும்புகிறேன். அர்ஜென்டினா தேசிய கால்பந்து அணியில் எனது ஆட்டம் பற்றி கேள்வி எழுப்பி சில ரசிகர்கள் குறைகூறுவது வேதனை அளிக்கிறது. அவர்கள் என்னை விரும்பவில்லை" என்றும் மெஸ்சி கூறினார்.

## பேருந்தை முந்தினார் உசைன் போல்ட்

இங்கிலாந்து இளவரசர் ஹரியுடன் ஓடி புகழ்பெற்ற உலகின் அதிவேக வீரர் உசைன் போல்ட் பேருந்துடனான ஓட்டப் பந்தயத்தில் ஓடினார். அர்ஜென்டினா நாட்டின் தலைநகரான பியூனஸ் அயர்சில் நடைபெற்ற காட்சி போட்டியின் 80 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் பேருந்துடன் போட்டிபோட்ட ஆறு முறை உலக சாம்பியனான உசைன் போல்ட், தீவிரமாக எடுத்துக் கொண்டு மிக கவனத்துடன் ஓடி வெற்றி பெற்றார். போட்டியில் கலந்துகொண்ட 59 என்ற எண் கொண்ட பேருந்தை கண்டவுடன் அதை வெற்றி கொள்ள சிறப்பு முயற்சி ஏதும் செய்யத் தேவையில்லை என போல்ட் புரிந்துகொண்டார். ஒலிம்பிக்கில் தொடர்ந்து இரு முறை 100 மீட்டர், 200 மீட்டர் மற்றும் 4x100 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்ற போல்ட் 2016ல் ரியோவில் நடைபெற உள்ள போட்டியிலும் இவ்வெற்றியை தக்க வைத்துக்கொள்ள தயாராகி வருவதாக கூறியுள்ளார்.

## 12 கோடி ரூபாய் பரிசுத் தொகையை தட்டிச் சென்றார் ஜோகோவிக்

ஏடிபி உலக டூர் போட்டியின் இறுதிச் சுற்றில் நடாலை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிக். உலக தரவரிசையில் முதல் 8 இடத்தில் உள்ள வீரர்கள் பங்கேற்ற ஏடிபி உலக டூர் பைனல்ஸ் போட்டி லண்டனில் நடந்தது. இதன் இறுதி போட்டியில் நேற்று நம்பர் ஒன் வீரரான ஸ்பெயினின் நடால், 2ம் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து ஆடினார். ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த ஆட்டத்தில் ஜோகோவிக் 6-3, 6-4 என்ற நேர்செட்டில் நடாலை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார். இந்த ஆட்டம் 1 மணி நேரம் 36 நிமிடங்கள் நடந்தது. சாம்பியன் கோப்பையுடன் ஜோகோவிற்கு ரூ.12 கோடி பரிசுத்தொகை வழங்கப்பட்டது. 2வது இடம் பிடித்த நடால் ரூ.6.38 கோடி பரிசுத்தொகை பெற்றார்.

எஸ். கணேஷ்



# CANADA'S REAL ESTATE MARKET 2014



**சகல**
**சௌபாக்கியங்களுடன்**
**வாழ புதுவருட**
**நல்வாழ்த்துக்கள்**

2013 ஆம் ஆண்டில் ஆதன வியாபாரம் ஆரோக்கியமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கனடாவின் முக்கிய நகரப் பகுதிகளிலுள்ள ஆதனத்தில் முதலிடுவதற்கு உள்ளூர், வெளிநாட்டு மக்களுக்கு அதிக ஆர்வம் இருக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

2008/2009 ஆம் ஆண்டுகளில் ஏற்பட இருந்த பாரிய ஆதன இழப்பை கனடிய அரசு தனது சாதுரியத்தினாலும் திறமை யினாலும் ஒப்பீட்டளவில் சிறிதளவு பாதிப்புடன் நிலைமையை மாற்றியமைத்தது. இதற்குரிய பெருமை அப்போதைய கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் மார்க் கார்ணி (Mark Carney) மற்றும் நிதி அமைச்சர் ஜிம் பிளெஹெற்றி (Jim Flaherty) போன்றவர்களுக்கு செல்ல வேண்டும். எனினும் கடந்த 2012/2013 ஆம் ஆண்டுகளில் ஆதனவிலையின் அதிகரிப்பு, இவ்வருடம் (2014) வாங்குபவர்களை சிந்திக்க வைக்கலாம். அத்துடன் ஏற்கனவே 2008/2009 களின் பிற்பாடு விற்பனை செய்யப்பட்ட அடுக்குமாடி மனைகளின் கட்டிடத்தொகுதியின் பெரும்பகுதி மனைகள் இவ்வருடம், அடுத்த வருடம் (2015) அதற்கு அடுத்தவருடம் (2016) ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட இருக்கின்றன.

2014 இவ்வருடத்தில் 20,000 இற்கு மேற்பட்ட மனைகள் கட்டி முடிக்கப்பட்டு, வாங்கியவர்களிற்கு கையளிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏறக்குறைய இதே எண்ணிக்கையான மனைகள் 2015 இலும் கையிற்கு வரலாம். இவ்வருடம், அடுத்த வருடம் வாடகைக்கு எடுப்பதில் சிறிதளவு இடர்பாடு தோன்றலாம். ஆனால் 2016 இலிருந்து நிலைமை மாறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் GTA பகுதியில் இருக்கும், நிர்மாணத்திற்குரிய காணி, நிலம் எதிர்வரும் 10 வருடங்களிற்குள் கட்டிடங்களால், வீடுகளால் நிரப்பப்



பட்டு விடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே நிர்மாணம் செய்யக்கூடிய நிலத்தின் விலையில் அதிகரிப்பே ஏற்படலாம். அத்துடன் அடுக்குமாடி மனைகள் மற்றும் தொடர்வீடுகளின் நிர்மாணங்களே எதிர்காலத்தை ஆக்கிரமிக்கும் என எதிர்பார்க்கலாம். இதற்கு வன்கூவர் ஒரு முன்னோடியாக காணப்படுகின்றது.

இதனால் கனடாவின் முக்கிய நகரங்களிலேயே மக்கள் குடியேறக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரிக்கலாம். நிலத்திற்கு கீழான ரயில் (Subway) உள்ள பாதைகளில் அதிக நிர்மாணங்கள் ஏற்படும் என்பதே ஆய்வாளர்களின் அறிக்கையும் உறுதிப்படுத்துகின்றது. அத்துடன் தொழிலிற்கு செல்வதற்கு எடுத்துக் கொள்ளும் அதிக நேரம் (Commute time) மக்களை சலிப்படைய வைப்பதுடன் நகரங்களை நோக்கி வரச் செய்கின்றது. வீடு/மனைகளிற்கு அண்மையிலேயே மக்கள் வாழ விரும்புகிறார்கள். இதற்கு ECHO Boomers (1972 - 1992 இற்குள் பிறந்தவர்கள் நல்ல உதாரணம்)

ஏற்கனவே இருக்கும் வீடுகளை தகர்த்து புதிதாக கட்டும் வீடுகள் (Infill houses) போன்றவற்றின் அதிகரிப்பு இவ்வருடத்திலும் எதிர்காலங்களிலும் அதிகமாக எதிர் பார்க்கலாம். கடந்த சில வருடங்களில் மக்களின் வருமான அதிகரிப்பை விட தனி வீடுகளின் விலை அதிகரிப்பு ஏறக் குறைய இரண்டு மடங்காக உள்ளது. இந்நிலைமையை மக்களால் தாங்க முடியுமா? என்பது கேள்வி. எனவே மக்கள் தம்முடைய எண்ணத்தை அல்லது ஆதனம் வாங்கும் முறையை மாற்றவேண்டி ஏற்படலாம்.

தனிவீடு வாங்க வேண்டும் என்ற நிலை ஏற்படும் போது நகரத்தை விட்டு மிகவும் தள்ளி வெளியே செல்ல வேண்டி ஏற்படலாம். வெளிப்பகுதியில் போதியளவு தொழில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டால் வெளியே சென்று வாங்குபவர்களின் நிலைமை ஓரளவு சமாளிக்கலாம் அல்லது

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

## தொடர் - 406

தொழிலிற்கு மக்களை செல்லும் நேரம் / காலம் மீண்டும் இடர்பாட்டை ஏற்படுத்தலாம். வேலை செய்வதும் அங்கேயே வாழலாம் (Live & work) என்ற நிலைமையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அதிக சந்தர்ப்பம் உண்டு. ஆய்வாளர்களின் எதிர்வு கூறலில் 2014 ஆம் ஆண்டு வீடு நிர்மாணம் செய்வதில் கனடாவில் ரொறொன்ரோ நகரம் 2வது இடத்தில் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் ரொறொன்ரோ நகரின் மத்திய பகுதியில் இருக்கும் அலுவலக இடம் (office space) அடுக்குமாடி மனை (high-

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc.Brokerage*

*Independently Owned & Operated

**"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"**



***Raja Mahendran,*** P.Eng.
*Broker / Owner*

***5215 Finch Ave, E, #203, Toronto, ON :416.321.6969***

## HOUSE FOR SALE
## KENNEDY &SHEPPARD



2 story house for sale. 6+1 Bedrooms 7 Washrooms, 3 garages, 2 kitchens. 7,200 Sq.ft. Huge backyard. 80 Feet frontage. Stone elevation. Hardwood /Granite/Marble floor. Quiet area. Asking price $2.2 million.

## HOUSE FOR RENT
### FINCH & MCCOWAN

3 bedrooms house for rent. One washroom, 1Parking. main floor only. Avail. anytime. Asking $1,325.

## Coin laundry For Sale Kennedy & Eglinton

A Highly populated. Surrended by apartment area. One Year new business. High quality washer & dryer. Money changing machine. Soap dispensor. Possible to have alteration person & laundry outlet. Very reasonable rent. Longe term lease possible.

## CONVENIENCE STORE FOR SALE
## MIDDLEFIELD & FINCH



Lotto, Tickets, Key cuts, Movie rental, (exclusive in the plaza) Convenience & Indian/Srilankan Groceries. Established Over 10 years. 200Sq.ft. Low Rent $3,500. Asking only 69,900

# கூட்டமைப்பை பயன்படுத்தி தப்பிக்கும் முயற்சியில் இலங்கை அரசு தோல்வி!

எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ள ஐ.நா.வின் மனிதஉரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத்தொடருக்கு முன்னர் தமிழ் தேசியக்கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சி கைகூடப் போவதில்லை என்றே தெரிகின்றது. நம்பகத் தன்மையற்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொண்டு பேசுவதன் மூலமாக நியாயமானதொரு தீர்வினை அடைய முடியாது எனத் தெரிவித்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதில்லை என உறுதியாக அறிவித்து விட்டது. கடந்த 24ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பின் விசேட கூட்டத்தில் இந்த முடிவு வெளியிடப்பட்டுள்ளது.



கடந்த வாரம், வரவு-செலவுத்திட்ட விவாதத்துக்கு பதிலளித்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள வருமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்திருந்தார். வெளிநாடுகளிடம் தீர்வைத் தேட வேண்டாம் என்றும், உள்நாட்டில் பேசித் தீர்க்க முன் வருமாறும் அவர் கூட்டமைப்பைக் கோரியிருந்தார். ஜனாதிபதியின் இந்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் விதமாக அப்போது கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கை அரசாங்கம் 13-வது அரசியலமைப்புத் திருத்தத்தின் வரையறைக்குள் மட்டும் குறுகி நிற்காமல், அதற்கும் அப்பால் சென்று அரசியல் தீர்வுத் திட்டம் பற்றி ஆராய்வதாக இருந்தால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கெடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். ஆனால், வவுனியா கூட்டத்தில், தெரிவுக்குழு பேச்சுவார்த்தையில் பங்கேற்பதில்லை என்ற முடிவை கூட்டமைப்பின் கட்சிகள் இணைந்து ஏகமனதாக நிறைவேற்றியுள்ளன.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் முன்னரிலும் பார்க்க அதிக அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என்ற அச்சத்தில் இலங்கை அரசாங்கம் தற்போது பல்வேறு நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இம்முறை, அரசாங்கத்தை கடுமையான அழுத்தங்களுக்கு உட்படுத்தும் முயற்சியில் மேற்குலக நாடுகள் இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதில் பிரிட்டனின் பாத்திரம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதனால் வெளிநாடுகளில் ஆதரவு தேடும் முகமாக, பரப்புரைகளில் ஈடுபடுவதற்கு இலங்கையிலிருந்து பல குழுக்கள் பயணமாகி உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த கணக்கெடுப்பு ஒன்றும் அவசர அவசரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் அப்பால், தமிழ் தேசியக்கூட்டமைப்பை பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளுமாறு அழைத்து, மார்ச் மாதத்திற்கு முன்னர் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து விட்டால் வரவிருக்கும் அழுத்தங்களிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என்பதே அரசாங்கத்தின் திட்டமும் எதிர்பார்ப்புமாகும். இதன் காரணமாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு இத்தருணத்தில் ஜனாதிபதி அழைப்பினை விடுத்திருக்கின்றார். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருடன்

**- விகிர்தன் -**

பேசி நிலைமையை கையாளலாம் என்ற எதிர்பார்ப்பு இலங்கை ஜனாதிபதிக்கு இருந்தது. ஆனால், கூட்டமைப்பின் ஒட்டுமொத்த தீர்மானம் இதற்கு இடமளிக்க முடியாத நிலைமையை அரசாங்கத்திற்கு இப்போது ஏற்படுத்திவிட்டது. சம்பந்தனோ, விக்னேஸ்வரனோ தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க முடியாது, கட்சியின் முடிவே தங்களது முடிவும் என சம்பந்தனும் தெரிவித்து விட்டார்.

போர் முடிந்ததன் பின்னர் சுமார் ஓராண்டு காலமாக நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளின் விளைவுகள் குறித்தும் சம்பந்தன் இப்போது சுட்டிக்காட்டியிருக்கின்றார். அப்போதைய பேச்சுக்களில் சில விடயங்கள் குறித்து அரசாங்கம் ஒப்புதலளித்தும் கூட அது நிறைவேற்றப்படாதது குறித்தும் சம்பந்தன் குறிப்பிட்டிருக்கின்றார். 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17, 18, 19-ம் திகதிகளில் இடம்பெறவிருந்த பேச்சுவார்த்தைகளுக்கு அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சமூகமளிக்காத நிலையிலேயே இருதரப்பு பேச்சுவார்த்தைகள் முறிந்து போனதை சுட்டிக்காட்டிய சம்பந்தன் பேச்சுவார்த்தை முறிவடைந்தமைக்கான முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்க வேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றார். இந்நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் முறிவடைந்து கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், மீண்டும் பேச்சுக்களுக்கான முனைப்புகள் காட்டப்படுகின்றமைக்கான காரணம் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத்தொடரை சமாளிப்பது தான் என்பது சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. 2012ஆம் ஆண்டு, இலங்கைக்கு எதிரான முதலாவது தீர்மானம் ஜெனீவாவில் கொண்டு வரப்படுவது உறுதியான நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை அரசாங்கம் பேச்சுக்கு அழைத்தமை இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

அப்போது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியிருந்தார். அதனை அரசாங்கம், ஜெனிவாவில் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண தாம் தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி வருவதாக, ஜெனீவாவில் அரசாங்கம் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்தது. இம்முறையும் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்து, பிரச்சினைக்குத் தீர்வு காண முக்கியமான இரு தரப்பும் பேச்சுக்களில் ஈடுபட்டுகொண்டிருக்கின்ற வேளையில், ஜெனீவா அழுத்தம் அதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்கின்ற ஒரு அஸ்திரத்தை இலங்கை அரசு பயன்படுத்தலாம். இதனால், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர்கள் ஏதோவொரு வகையில், சில நிபந்தனைகளை முன்வைத்தேனும் தெரிவுக்குழுவில் பங்கேற்கும் முடிவை எடுத்தால், அது தமிழ் மக்களின் எதிர்ப்பை சம்பாதிக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். இதனை கூட்டமைப்பு நன்கு புரிந்து கொண்டதாலேயே வவுனியா கூட்டத்தில் வைத்து தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதில்லை என்ற முடிவு எட்டப்பட்டு, அது பகிரங்கமாக மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த கால கூட்டத் தொடர்களை விடவும், இந்த ஆண்டு இலங்கை அரசாங்கத்துக்கு ஜெனீவா அழுத்தம் நிறைந்த களமாக அமையப் போகின்ற நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் அரசின் பொறியில் சிக்காமலிருப்பது தான் நல்லது.

ஜெனீவாவில் இம்முறை இலங்கை அரசாங்கம் முகம் கொடுக்கப் போகும் பிரச்சினைகளுக்கு தமிழர் தரப்பை யாரும் குற்றம் சொல்ல முடியாது. சர்வதேச அழுத்தங்களுக்கூடாகவே தமிழர்களின் பிரச்சினைகளை கையாள - நகர்த்திச்செல்ல வேண்டிய சூழ்நிலையை இலங்கை அரசாங்கமே தமிழர் தரப்பிற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பது தான் உண்மை!

## புத்தாண்டு பிறந்ததடி




புத்தாண்டு பிறக்கையிலே
புத்தொளியும் தெரியுதடி
சத்தான எண்ணங்கள்
மனவெளியில் பறக்குதடி

கடந்து போன கசப்பான நினைவுகள்
தான்
அனுபவங்களாக ஒளிருதடி
இனிப்பான நினைவுகளோ
உற்சாகம் ஊட்டுதடி
ஆன்மீக சிந்தனைதான்
மனதினை வளம்படுத்துமடி

புரிந்துணர்வை வளர்த்திட்டால்
உறவுகளின் பெருமை விளங்குமடி
ஒரு குடைக்குள் வாழ்வதற்கோ
பொறுமை கொஞ்சம் வேண்டுமடி

வேற்றுமைகள் உண்டாயின்
தனித்துவத்தை உணர்ந்திடுவோம்
சுதந்திரத்தை மதித்திடுவோம்
சுதந்திரமாய் வாழ்ந்திடுவோம்
தொடரவேண்டும் எல்லோர்க்கும்
வளர்பிறைபோல் இன்பங்கள்
எந்நாளும் வேண்டிடுவோம்
எல்லோர்க்கும் புத்தாண்டு
நன்றாக அமைந்திடவே
பிறக்கின்ற புத்தாண்டை
மனமார வரவேற்போம்.

- ரஞ்சி கதிர்

**School of Math + (Since 2006)**

- G7 - G12 Math Tutoring - Functions, Calculus, Data, IB, AP
- G7 - G12 English, SAT Essay Writing, Summary, Reading TOEFL, IELTS, SAT, COPE
- G7-G12 French, Pre-IB Reading, Writing, Grammar (Native Speaker teachers)
- $200 Off before Feb 01/2014

உங்களுடைய குழந்தைகளின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்ய அழையுங்கள்

www.schoolofmath.ca

**Bright Future Academy (BSID #:885489)**

High SchoolCredit Courses (G11-G12)
Accredited by Ministry of Education
ENG3U/4U, MCV4U, MHF4U, MDM4U
ESLBOM, BAT4M, CIA4U
Highly Qualified teachers, Student-Centered teaching
Affordable price, Success guaranteed
Small group or VIP 1 to 1
$200 Off before Feb 01/2014

www.bfacademy.ca

4433 Sheppard Ave, E. (Sheppard & Brimley) 2nd Floor, Room 202, Toronto, ON M1S 1V3. 416.820.5527 / 647.712.8855


Sell your home
faster
and more
money
Sheppard/Neilson
$389,900
3+1 Bedrooms, 3 W Rooms
Finished Basement With 3 Piece Washroom And Fireplace
Eglinton Ave East/Bellamy
$429,900
3+1 Bedrooms, 2 W Rooms
Nice Deck Off Master Bedroom Newer Furnace (2013)
Audley / Rossland/ Salem
$439,000
4 Bedrooms, 3 W Rooms
Upgraded Kitchen Cabinets. Maple Hardwood Floors On Main
Meadowvale/Sheppard
$459,900
3+1 Bedrooms, 3 W Rooms
Dining Room Walkout To Large Deck In Fenced Backyard
Markham & Lawrence
$479,999
3+3 Bedrooms, 2 W Rooms
Spacious Raised Bungalow With 2 Separate Entrances To Bsmt
Audley South Of Bayly
$495,000
4 Bedrooms, 3 W Rooms
Breakfast & Family With W/O To Back Garden. Newly Painted
Tenth/Hoover Park
$559,900
3 Bedrooms, 3 W Rooms
Premium Lot With Full Walk-Out Basement
Markham Rd/Major Mac
$599,980
4 Bedrooms, 3 W Rooms
Oak Staircase With Iron Pickets, Tall Cabinets
Cornell Centre Blvd/16th Ave
$629,000
3+1 Bedrooms, 4 W Rooms
Very Bright And Open Concept With Elegant Dark Hardwood Floors
Oasis/Passmore
$659,900
4+1 Bedrooms, 4 W Rooms
9' Ceilings, Gleaming Hardwood Flooring Through-Out The House.
16th Ave / Markham Rd
$678,000
4 Bedrooms, 3 W Rooms
Huge Kitchen With Desk, Island & Sep. Breakfast Area, Open Concept
Kennedy Rd & Warden Ave
$3,800,000
5 Bedrooms, 6 W Rooms
Spectacular Views Of Expensive Estate, Circular Staircase With Large Rotunda
Markham/Ellesmere
SOLD
3+2 Bedrooms, 2 W Rooms
Bungalow House With Newer Finished Basement(2012)
Markham & Ellesmere
SOLD
3+2 Bedrooms, 2 W Rooms
Great Home With Finished Basement In 7 Oaks
Markham/14 Ave
SOLD
4+1 Bedrooms, 4 W Rooms
Newer Hardwood Flooring(2012), Newer Bathrooms(2013),New Deck(2013)
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 30 days or we buy it
RE/MAX
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative/Builder
Direct 416 - 276-1225
Email: esrinathan@yahoo.com
#1
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
I can also assist your Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# யாழ்ப்பாணத்திற்கான குடிநீர்த்திட்டமும், பின்னால் மறைந்துள்ள நோக்கங்களும்!

## தாயக மடல்

**- வன்னியிலிருந்து ஆதித்தன் -**

கிளிநொச்சியில் அமைந்துள்ள இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் இன்று கிளிநொச்சி விவசாயிகள் மத்தியில் பாரிய பிரச்சினையாக மேற்கிளம்பியுள்ளது. விவசாயிகளை அச்சமூட்டி, அவர்களை பதற்ற நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. இறுதிக் கட்டப் போரில் பொருளாதாரத்தை முற்றாக இழந்து, தற்போது படிப்படியாக தங்கள் வாழ்வாதாரத்தை நிமிர்த்த பாடுபட்டு வரும் கிளிநொச்சி விவசாயிகளுக்கு மேலும் ஒரு துன்பத்தை இந்த விவகாரம் இப்போது ஏற்படுத்தி விட்டுள்ளது. வடக்கின் பாரிய நீர்த்தேக்கமாக விளங்கும் இரணைமடுக் குளம் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத்தை பெருமளவில் தீர்மானிக்கும் ஒன்றாக விளங்குகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் இரு போகங்கள் நெல் பயிர்செய்யப்படுகின்றது. மாரி மழையை நம்பி பெரும்போக நெற்செய்கையும், இரணைமடுக்குளத்தை நம்பி சிறுபோக நெற்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

பெரும்போகத்தில் விவசாய செய்கைக்குப் போதுமான மழை பெய்யாவிட்டால் விதைத்த நெற்பயிர்களை அழிவிலிருந்து காப்பாற்ற இரணைமடுக்குளத்தின் நீரே கைகொடுக்கின்றது. இவ்வகையில் இரணைமடுக்குளம் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயத்தையும், அதனூடாக இம்மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் விவசாய மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாத்து வருகின்றது. அதுமட்டுமல்ல, யாழ்ப்பாணத்தின் உணவுக்களஞ்சியமாக கிளிநொச்சி மாவட்டம் திகழ்வதற்கும் இந்த இரணைமடுக்குளமே காரணம். யாழ்ப்பாண மாவட்ட மக்களின் அரிசித் தேவையை கிளிநொச்சி மாவட்டமே பூர்த்தி செய்து வந்துள்ளது. அரிசியின் விலையை அதிகரிக்க விடாது சமநிலையில் பேணவும் கிளிநொச்சியின் நெற்செய்கையே காரணம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இரணைமடுக்குளம் நீண்ட காலமாக அபிவிருத்தி செய்யப்படாமலுள்ளதால் அக்குளத்தில் குறிப்பிட்ட அளவு நீரைத் தேக்கிவைக்க முடிவதில்லை. குளத்தின் கரைகள் பலவீனமடைந்திருப்பதால், அதிக மழை பெய்து குளம் நிரம்பும் சமயங்களில் குளத்தின் கதவுகளைத் திறந்து நீரை வெளியேற்ற வேண்டிய நிலை உள்ளது. மழை குறிப்பிட்ட அளவில் பெய்யாது விட்டால், குளத்தில் நீர் நிரம்பாமல் விவசாயிகளின் சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்படும் நிலையும் ஏற்படும். இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்தே கிளிநொச்சி விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரத் தொழிலான விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில், இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் தங்களது விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்காமல் போகலாம் என கிளிநொச்சி விவசாயிகள் அஞ்சுகின்றனர். ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இருபதினாயிரம் மில்லியன் ரூபாய்கள் நிதியுதவி மூலம் இந்த குடிநீர்த்திட்ட வேலைகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நீணடகாலமாக திருத்தப்படாதுள்ள இரணைமடுக்குளம் திருத்தியமைக்கப்படும் வாய்ப்பும் கிட்டும் எனவும், இதனால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்குத்தான் நன்மை எனவும் கூறப்படுகின்றது. இவற்றை யார் கூறுகிறார்கள் என்றால், இக்குடிநீர்த் திட்டத்தை எப்படியும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று எண்ணும் தரப்பினரே. அரசதரப்பினர், இக்குடிநீர்த்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பொறியியலாளர்கள் மற்றும், சில அரசியல்வாதிகள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

ஆனால், இவற்றை நம்புவதற்கு கிளிநொச்சி விவசாயிகள் தயாராக இல்லை. இது ஒரு சதித்திட்டம் என்றும், இதனால் தாம் எதிர்காலத்தில் பாதிக்கப்படலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர். அண்மைய நாட்களாக இது குறித்த கூட்டங்கள், கலந்துரையாடல்கள் கிளிநொச்சியில் நடைபெற்று வருகின்ற நிலையில், தங்களின் கடுமையான எதிர்ப்பினை விவசாயிகள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

இத்திட்டம் குறித்து வெளிப்படைத் தன்மை பேணப்படவில்லை எனவும், தங்களை ஏமாற்ற சில தரப்பினர் முயன்று வருவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர். இவ்விடயத்தை நடுநிலையாக சிந்திக்கும் தரப்பினர் குறித்த குடிநீர்த்திட்டத்திற்கு பின்னால் அரசியல், இராணுவ நலன்கள் மறைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர். தற்போது இக்குடிநீர்த்திட்டப் பிரச்சினை வடமாகாண நிர்வாகத்தின் கைகளுக்குச் சென்றுள்ளது. வடமாகாண சபை நிர்வாகமும், அதற்குத் தலைமை தாங்கும் தமிழ் தேசியக்கூட்டமைப்பும் இது குறித்து கடுமையான கலந்தாலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கை அரச தரப்பினரும். அதன் ஜனாதிபதியும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் மிக ஆர்வமாகவே உள்ளனர். அண்மையில் இத்திட்டத்தை யாரும் குழப்பவோ எதிர்க்கவோ கூடாது என கூட்டமைப்பினரை நோக்கி ஜனாதிபதி கூறியிருந்தார்.

வடக்கிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் எத்தனையோ பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்ற நிலையில், ஏன் அரசாங்கம் இதற்கு ஆர்வம் காட்டுகின்றது? பெருமளவு நிதியுதவியில் இக்குடிநீர்த்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏன் இந்த அவசரம்? இப்போது யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள் குடிநீருக்கு சிரமப்படும் நிலை உள்ளதா இல்லையே..! நீண்ட கால நோக்கில் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ள பல திட்டங்கள் உள்ளன. அவை முன்னரே தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

1954ஆம் ஆண்டு பொறியியலாளர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் முன்வைத்த சிறந்ததோர் திட்டமான யாழ்ப்பாணத்துக்கான ஆற்றுத் திட்டம் தொடக்கம், பல்வேறு சுலபமான திட்டங்கள் முன்னரே முன்மொழியப்பட்டுள்ளன. இவற்றை



யெல்லாம் புறந்தள்ளி, இன்று இரணைமடு குடிநீர்த்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் என்ன?

இதில் நாம் கூர்ந்து அவதானிக்க வேண்டிய பல விடயங்கள் மறைந்துள்ளன. இவ்வாறு ஒரு திட்டத்தை உருவாக்கி, இரு மாவட்டத்து மக்களிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் தோற்றுவித்து, பிரதேசவாதத்தைக் கிளறி, அதில் அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் உள் நோக்கம் தமிழர்களை பிரித்தாள முயலும் தரப்பிற்கு உள்ளது. அத்துடன், திட்டமிட சிங்களக் குடியேற்றம், இராணுவ பொருளாதார நலன்கள் போன்றவையும் இதற்குப் பின்னால் புதைந்துள்ளதாகவும் எண்ணத் தோன்றுகின்றது. பாரிய நிதியுதவியிலான இத்திட்டம் நடைமுறைக்கு வரும் போது பலதரப்பினரது பைகள் நிரம்பும். போர் நடைபெற்றுக்கொண்டிருந்த போது பெருமளவு ஆயுதங்கள் கொள்வனவு செய்த வேளைகளில், அதில் பெருமளவு பணத்தை சுருட்டிக்கொண்ட தரப்பு இன்று இவ்வாறான பாரிய திட்டங்களினூடாக இவற்றை மேற்கொள்ளலாம் என முயல்கிறது. பாரிய நிதி உதவி கிடைக்கவுள்ளது, இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தாவிட்டால் குறித்த பணம் கிடைக்காமல் போகும் என்றெல்லாம் மேலோட்டமாக கருத்து வெளியிடப்பட்டு வருகின்றமையினையும் இப்போது அவதானிக்க முடிகின்றது. இப்போது யாழ்ப்பாணத்தில்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# காலத்தோடு வளரும் கணினிகள் - 36

அன்பான வாசகர்களே!

இந்த இதழில் மைக்கிரோ சொவ்ற் ஒபீஸ் மென்பொருளில் உள்ள மைக்கிரோ சொவ்ற் அக்சஸ் (Microsoft Access) மென் பொருளைப் பற்றி அறிமுகம் செய்து கொள்ளலாம் என நினைக்கின்றேன். இது ஒரு தரவுத்தள மென்பொருள் (DataBase Software) ஆகும். இந்த மென்பொருள் பற்றிப் பார்ப்பதற்கு முன்னதாக தரவுத்தளம் (Database) என்றால் என்ன என்பதைக் கவனிப்போம். நூல் உருவத்திலும் பல தரவுத்தளங்கள் உள்ளன. இவற்றை நாங்கள் Manual Databases என்று அழைப்போம். இதற்கு ஒரு நல்ல உதாரணம் தொலை பேசிப் பட்டியல் நூல் (Telephone Directory Book) ஆகும். இதில் பலரின் தொலைபேசி எண்ணும் அவர்களின் விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதே விடயத்தை கணினியில் சேமிக்க விரும்பினால் கணினி தரவுத்தளம் (Computer Database) அமைக்க வேண்டும். மைக்கிரோ சொவ்ற் எக்சல் மென்பொருளிலும் தரவுத்தளம் அமைக்கலாம். ஆனால் இதைவிடச் சிறந்த தரவுத்தள மென்பொருளே மைக்கிரோ சொவ்ற் அக்சஸ் (Microsoft Access) ஆகும். கணினித்துறையில் தரவுத்தளம் சார்ந்த விடயங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. தரவுத்தளங்களின் பாவனை இணையத்தளங்களிலும் காணப்படுகின்றன. தரவுத்தளம் பற்றிய பொது அறிவும் கணினித் துறையில் முக்கியம் வாய்ந்த தாகக் காணப்படுகின்றது. நாளுக்கு நாள் பல்வேறு தரவுத்தள மென்பொருட்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் மிகவும் அடிப்படையாகவும், இலகுவானதாக வும் உள்ள ஒரு மென்பொருள் மைக்கிரோ சொவ்ற் அக்சஸ் (Microsoft Access) ஆகும். இந்த மென்பொருள் பற்றிய ஆரம்ப அறிவைத் தருவதோடு தரவுத்தளம் பற்றிய அடிப்படை அறிவைத் தரும் நோக்கிலும் தரவுத்தளம் பற்றிய விபரங்களைக் குறிப்பிடுகின்றேன்.

Start பட்டனை கிளிக் செய்து All Programs என்ற தெரிவைச் செய்ததும் தோன்றும் பட்டியலில் மைக்கிரோ சொவ்ற் ஒபீஸ் மென்பொருளைத் தெரிவு செய்து மைக்கிரோ சொவ்ற் அக்சஸ் (Microsoft Access) இனைத் தெரிவு செய்ததும் இந்த மென் பொருள் திறக்கப்படும். ஏனைய மைக்கிரோ சொவ்ற் ஒபீஸ் மென்பொருட்களில் உள்ளதைப் போன்று ஒபீஸ் பட்டன் திரையகத்தின் இடது புற மேல் மூலையில் காணப்படும். இதனை கிளிக் செய்தால் தோன்றும் Pull Down மெனுவில் Save, Print போன்ற தெரிவுகள் இருக்கும். திரையகத்தின் நடுப்பகுதியில் New Blank Database இற்குரிய ஐகனும், அதன் கீழ் பல online templates இற்குரிய ஐகன்களும் காணப்படும். New Blank Database என்ற ஐகனைத் தெரிவு செய்ததும் திரையகத்தின் இடது புறத்தில் Blank Database என்ற தலைப்பின் கீழ் Create பட்டன் காணப்படும். இந்த பட்டனுக்கு மேல் File Name, Folders போன்ற விபரங்கள் காணப்படும். உங்களுக்கு விரும்பிய பெயரைக் கொடுத்து Create பட்டனை கிளிக் செய்ததும் Database Design screen தோன்றும். இப்பொழுது நீங்கள் Database Design இனை ஆரம்பிக்கலாம்.




Database Design இனை எவ்வாறு செய்யலாம் என்று பார்ப்பதற்கு முன்பாக தரவுத்தளம் தொடர்பாகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பச் சொற்களை அறிமுகம் செய்ய வேண்டியுள்ளது. எக்சல் மென் பொருளில் ஒரு தரவுத்தளத்தை (Database) உருவாக்கும் பொழுது ஒவ்வொரு Item உம் நிரலில் (Column) குறிக்கப்படும். ஒவ்வொரு entry உம் வரிசையில் (Rows) குறிக்கப்படும். ஒவ்வொரு Item உம் மைக்கிரோசொவ்ற் அக்சஸ் இல் Field என்போம். ஒவ்வொரு entry உம் record எனப்படும். உதாரணமாக பலரின் பெயரை யும், அவர்களின் தொலைபேசி இலக்கத்தை யும் ஒரு computer Database இல் சேமிப்பதற்கு இரண்டு Fields கொண்ட ஒரு தெரிவுத்தளத்தை (Database) இனை உருவாக்க வேண்டும். ஒரு Field Name ஆகவும் மற்றைய Field Phone Number ஆகவும் இருக்கும். Name, Phone Number ஆகியவற்றை Field Names என்போம். இவற்றிற்கு கொடுக்கப்படும் இட ஒதுக்கீட்டை Field Width என்போம். Database Design செய்யும் பொழுது ஒவ்வொரு Field இன் தன்மையைப் பொறுத்துப் பொருத்தமான Field Type or Data Type இனைத் தெரிவு செய்ய வேண்டும். Text, Number, Date/Time, Currency, memo போன்ற பல Data Type களில் பொருத்தமானதை மைக்கிரோசொவ்ற் அக்சஸ் மென்பொருளில் தெரிவு செய்ய முடியும்.

இப்பொழுது நாங்கள் மைக்கிரோசொவ்ற் அக்சஸ் மென்பொருளில் எவ்வாறு ஒரு தரவுத்தளத்தை உருவாக்கலாம் என்று கவனிப்போம். Database Design Screen இடது புற மேல் மூலையில் ஒபீஸ் பட்டனுக்குக் கீழாக View என்று ஒரு Toolbar இருக்கும். இதில் உள்ள அம்புக்குறி அடையாளத்தை கிளிக் செய்தால் Datasheet View , Design View என்று இரண்டு தெரிவுகள் தோன்றும். இதில் Design View இனை கிளிக் செய்தால் Save As Dialog Box தோன்றும். இதில் உருவாக்கப்படவுள்ள அட்டவணை (Table) இன் பெயரைக் கொடுத்து முழு பட்டனை கிளிக் செய்ததும் அட்டவணையை உருவாக்கத் தொடங்கலாம். எந்த ஒரு அட்டவணையையும் உருவாக்கத் தொடங்கும் பொழுது ஒரு Field இனை Primary key ஆகக் கொடுப்பது வழக்கம். உதாரணமாக ID, Serial No, No போன்றவற்றைக் குறிப்பிடலாம். நீங்கள் உருவாக்கப்பட வேண்டிய அட்டவணைக்கு Field Name, Field Type, Field width போன்ற தரவுகளைக் கொடுத்து அட்டவணை யை உருவாக்க வேண்டும். இங்கே குறிக்கப்பட்ட விடயங்களை வாசித்து தரவுத் தளம் பற்றிய சுருக்கமான அறிமுகத்தைப் பெற்றிருப்பீர்கள். செயன்முறையில் ஒரு தரவுத்தளத்தை உருவாக்கிப் பாருங்கள்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள்.

அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம்.
தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

வரிகள் (காலை) வாராது காப்போம்
TAX RELATED SERVICES
INCOME TAX & HST
Unfiled Returns From 2005
• Filing Under Voluntary Disclosure Program (VDP)
• Tax Appeals
• SR & ED Investment Tax Credits
• Individual and Corporate Taxation
> Company Incorporations
> Business Registration
> Business Plans
> Emergency Business Loans - upto $5 M
Call:Siva-416.901.0929 / Yoga-416.492.7957
Email: siva@sivassolutions.com www.sivassolutions.ca
Sivas Solutions
708-419 Markham Rd toronto M1J 3E1

அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO
* செய்திகள்
* போட்டிகள்
* பாடல்கள்
* தகவல்கள்
24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
416-264-4283 / 416-264-3666
"மண்ணையும் மனங்களையும் நேசிக்கலாம்"
www.gtr24.com

# சட்டரீதியான வாடகை குடியிருப்பு அறைகளும் சட்டவிரோத வாடகை குடியிருப்பு அறைகளும்

## கனடிய தகவல் தொடர் 211

### LEGALIZE ROOMING HOUSE VS ILLEGALIZE ROOMING HOUSE

இவ்வருட ஆரம்பத்தில் ஸ்காபரோவில் பல்கலைக்கழக வளாகம், கல்லூரி வளாகம் ஆகியனவற்றுக்கு அருகில் பிரதான வீதியில் தமிழருக்கு சொந்தமான சுமார் 3000 சதுரஅடி வீடு ஒன்றினை அயலவர்களின் முறைப்பாட்டினை தொடர்ந்து ரொறொன்ரோ நகரசபை திடீர் என நீதிமன்ற ஆணையுடன் உள்ளே புகுந்து பரிசீலனை செய்தபோது, அந்த வீடு சட்டவிரோத வாடகை குடியிருப்பு அறைகளாக மாணவர்கள் பலருக்கு வழங்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இது ஆங்கில ஊடகங்களில் ஒரு செய்திக்கட்டுரையாக வெளிவந்த போது, அவர்களுக்கு மட்டுமல்ல இதே வழியில் தொழில் செய்யும் பலருக்கும் இது ஒரு எச்சரிக்கையை வழங்கியிருந்தது.

நகரசபை பரிசோதகரின் அன்றைய அறிக்கைப்படி அந்த மாடி வீட்டில் (Two storey house) மேல் மாடியில் ஐந்து அறைகள், முன் பிரதான மண்டபத்தில் நான்கு அறைகள், நில அறையில் மூன்று அறைகள் இருந்தன. அத்துடன் இரு சமையல் அறைகள், குளியல் அறைகள், குசினிக்குள் பல குளிர் சாதன பெட்டிகளும் இருந்தன. இக்குடியிருப்பில் புகை அபாய கருவிகளோ அல்லது காபன்மொனொக் சைட் அபாய கருவிகளோ (Smoke Alarms & Carbonmonoxide Detectors) போதியளவு இல்லை என்ற குற்றச் சாட்டினை பரிசோதகர் நகரசபை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்திருந்தார்.



இதேபோல் கென்னடி & ஸ்ரீல் சந்திப்புக்கு அருகில் திரு. லூசான் லுயு (Mr. Lushan Lu) என்பவர் தனது வீட்டில் 18 படுக்கை அறைகள், 8 குளியல் அறைகள் என உருவாக்கியிருந்தார். ஒரு ஹொட்டல் மாதிரியே நடத்தி வந்தார். புதிதாக கனடாவிற்கு விமான நிலையத்தில் வந்து இறங்குபவர்களை ஏற்கனவே பதிவு செய்து வைத்து அவர்களுக்குரிய போக்குவரத்து சேவைகளையும் வாடகை அறைகள் அவர்களுக்கு வழங்கும் வர்த்தக சேவையினையும் செய்து வந்தார். நகரசபை பரிசோதகர்களின் பிடியில் அகப்பட்டு பெப்பரவரி 04, 2008 இல் ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் இச்செய்தி வெளியிடப் பட்டிருந்தது. கணினி மென்பொருள் வல்லுனரான (software developer) இவர் 2006 ஆம் ஆண்டில் ஸ்காபரோ பகுதியின் நகரசபை உறுப்பினர் பதவியிலிருந்தார் எனவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் ரொறொன்ரோ நகரில் சட்டவிரோத குடியிருப்பு வர்த்தகத்திற்காக உபயோகிக் கப்படுகின்றன. ஒழுங்குமுறை அமைப்புகள், பாதுகாப்புகள், நகரசபை கண்காணிப்புகள் இல்லாது உருவாக்கி வாடகைக்கு வழங்கப் பட்டு வரும் இக் குடியிருப்பு மனைகளினால் குறைந்த வாடகையில் குடியிருக்கும் வசதிகள் இருக்கின்றது. இருந்தாலும் தீப்பற்றி எரியும் சந்தர்ப்பங்கள், ஆபத்துக் கள், உயிரிழப்புக்கள் என பல நடந்துள்ளன என்பதனை ரொறொன்ரோ ஸ்ரார் புலனாய்வு ஊடகவியலாளர்களும், நகரசபையும் வெளியிட்டிருந்தனர். இத்தகைய வழியில் வீட்டு அறைகளை வாடகைக்கு வழங்கி பிடிபட்டவர்கள் கனடாவின் நீதித்துறையின் முன்னால் ஒரு கிரிமினல் குற்றவாளி அல்ல. இது ஒரு பாரிய சமூகவிரோத செயலாகவும் கருத்தில் கொள்வது குறைவு. நகரசபை நீதிமன்றத்தில் குற்றவாளியாக கருதப்படும் போது பணத்தண்டனை மட்டுமே எதிர்கொள்ள வேண்டி வரும்.

ஆனால் செய்யும் தொழிலில் எவருக்காவது உயிர் ஆபத்துகள் ஏற்பட்டால் 'மரணத்துக்கு காரணமான குற்றவியல் செயல்' (Criminal negligence causing death) என்ற குற்றச்சாட்டின்கீழ் கிரிமினல் குற்றமாக பதிவு செய்து சிறைத்தண்டனை வரை எதிர் கொள்ள வேண்டிவரலாம். அவ்வாறு எதிர் கொள்பவர்களின் செய்திகளும் கனடாவில் ஊடகங்களில் வெளிவந்திருக்கின்றன.

அண்மையில் மார்க்கம் நகரில் East pine Drive இல் வீடு ஒன்று தீப்பற்றி எரிந்த விடயத்தில், குடியிருப்பு அறைகள் சட்ட விரோதமாக வாடகைக்கு வழங்கப்பட்டதா? என்ற புலனாய்வினை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர் என செய்திகள் வெளியாகியிருந்தன. அவ்வாறான நிலைமை நிரூபிக்கப்பட்டால் காப்புறுதி நிறுவனத்தின் நட்டஈடு கொடுப்பனவுகளிலும் சிக்கல்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சரி இனி விடயத்திற்கு வருவோம்!

**'சட்ட விரோத குடியிருப்பு அறைகள்' என்பதனை நகரசபை யின் சட்ட அமலாக்கல் பிரிவு** (Bylaw Enforcement Illegal rooming houses) ஆங்கிலத்தில் பின்வருமாறு வரையறை செய்கின்றது.

'In order for a property to be considerd a rooming house, it must be comprised of a building lived in by more than three unrelated persons, operated for remuneration or financial gain and providing shared accomodation without exclusive use of sanitary and kitchen facilities.'

அதாவது குளியல் அறை, சமையல் அறை ஆகியவற்றினை கூட்டாக உபயோகித்துக் கொண்டு, குடும்பத்தினர் என்ற உறவினுள் இல்லாத குறைந்தது மூன்று பேருக்கு மேற்பட்டோரை வீட்டில் இருத்தி வாடகை பணம் பெற்றுக்கொண்டு வந்தால் அது 'சட்டவிரோத குடியிருப்பு அறைகள் வழங்கப்பட்டது' என்ற குற்றசாட்டின் வரைவிலக்கணத்தினுள் குறிப்பிடலாம்.

வாடகைக்கு அறைகள் வழங்கும் வர்த்தகம் செய்கின்றோம் என்பதோ அல்லது அது தொடர்பான அனுமதிப்பத்திரம் நகரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளாது செய்யும் ஒரு சிறு வணிகமாகவே இது கருதப்படும். இவைகள் நகரசபை பரிசோதகர்களின் கண்ணில் அகப்பட்டால் பணதண்டனை அதிகமாகவே இருக்கும்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

mhc
MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# அழிக்கப்பட வேண்டிய நோய்

## ஓடும் நீர் உறைவதில்லை 177

நமது வாழ்க்கையில் இனங்காண முடியாத பிரச்சினைகளுக்கு ஆணிவேராக அமைவது நமது மனத்தில் எழும் சந்தேகங்களே. சந்தேகம் என்பது தன்னைத்தானே நம்பாத ஒரு மனஇயல்பு. இந்த மனஇயல்பு ஒருவருக்கு ஒருவர் வேறுபட்டதாகவும் மாறுபட்டதாகவும் இருக்கும். தன்னைத்தானே நம்பாத இந்த மனஇயல்பு அவ்வாறு வேறுபடுவதற்கான காரணம் ஒருவரது பிறப்பு அல்ல. அவரது வளர்ப்புமுறை, பெற்றோர்களின் செல்வாக்கு, அவர் சார்ந்த சூழலின் தாக்கம், கல்வியறிவு, அனுபவ அறிவு, புரிந்துணர்வின் தன்மை, மற்றவர்களது கருத்துக்களை மதிப்பீடு செய்யும் திறன், அவர் சார்ந்துள்ள நண்பர்களின் செல்வாக்கு, வாசிக்கும் புத்தகங்கள் போன்ற பல்வேறு காரணிகளால் உருவாக்கப்படுகின்றது.

சந்தேகம் என்று நாம் கூறும்போது அது எதிர்மறையான எண்ணக்கருத்தைத் தருவதாகவே இருக்கும். நேர்த்தியான சந்தேகம் என்று ஒன்று இல்லை. ஒரு விடயத்தில் எதிர்மறையான கருத்து அல்லது எதிர்மறையான எதிர்பார்ப்பு என்பதே சந்தேகம் எனப்படுகிறது. இங்கே சந்தேகத்தின் அடிப்படையாக அமைவது எமது மனஉணர்வு என்பதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

உண்மையில் சந்தேகம் என்ற இந்த மன உணர்வுக்கான அடிப்படை என்னவென்பதை மிகவும் குறிப்பாகக் கூறுவதாயின் ஒருவரது மனக் காட்சிக்கும் அந்தக் காட்சி பற்றிய அவரது மனக்கருத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடே சந்தேகம் எனப்படும். அதாவது காட்சிக்கும் அக்காட்சி பற்றிய கருத்துக்கும் இடையிலான முரண்பாடு தான் சந்தேக மனப்பான்மையை உருவாக்குகிறது. இந்த முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள் ஒவ்வொருவரது வாழ்வியல் அனுபவங்களால் தீர்மானிக்கப்படுகின்றது.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

நாம் பிறந்தபொழுது எந்தவிதமான மனக் கருத்துக்களையும், காட்சி அனுபவங்களையும் நமது மனத்தில் வைத்துக்கொண்டு பிறந்தவர்களல்லர். நாளாந்த வாழ்வில் ஒவ்வொருவரதும் நடைமுறைகள் பல்வேறு வகையான விடயங்களை நமது ஆழ்மனம் / நனவிலி உள்ளத்தில் (Subconscious Mind) பதிவு செய்கின்றன. ஆய்வுகளின் அடிப்படையில் ஒவ்வொரு கணமும் நமது ஐம்புலன்களால் தகவல்கள் அனைத்தும் இந்த நனவிலி உள்ளத்தில் பதியப்படுகின்றன. இவ்வாறு பதியப்படும் விடயங்களில் எவற்றை நாம் நமது ஆளுமைக்குள் கொண்டு வருகின்றோம் என்பதைப் பொறுத்தே ஒருவரது பழக்கவழக்கங்கள், கணிப்புமுறைகள், கருத்துக்கள் என்பன அமைகின்றன. இதனால்



**KG Master: -**
www.kgmaster.com
- www.facebook.com / -
kgmaster.yourlifecoach

தான் ஒருவிடயம் பற்றிய கருத்து ஒவ்வொரு வருக்கும் வேறுபட்டதாக அமைகின்றது.
காட்சிக்கும் அக்காட்சி பற்றிய கருத்துக்கும் இடையிலான வேறுபாடு அல்லது முரண்பாடு சந்தேகத்தை உருவாக்குகின்றது என்பது மறுக்க முடியாததாயினும் அவ்வாறு ஒரு சந்தேகம் எழுகின்றபோது அந்த சந்தேகத்தை தெளிவுபடுத்தக் கூடிய விடயங்களைப் பின்பற்றி அந்தச் சந்தேகத்தை அழிக்கும் சக்தியும் நமக்கு உண்டு என்பதும் மறுக்கமுடியாததே. இந்த சக்தி அல்லது மனப்பக்குவம் தான் ஒருவரது வாழ்க்கையில் மகிழ்ச்சியான நிகழ்வுகளுக்கு அடித்தளமா கின்றது. ஒருவிடயத்தில் அல்லது நிகழ்வில் சந்தேகம் எழுகின்றது எனும்போது அந்த நிகழ்வின் உண்மையான நிலையை இனங்கண்டு கொள்வதில் ஏற்படும் தவறான மனக்கணிப்பு அடிப்படையாக அமைவதால் அந்தக் கணிப்பு சரியான முறையில் இடம் பெறுவதற்கான சகல சந்தர்ப்பங்களையும் நாம் பயன்படுத்தி அந்தச் சந்தேகத்தை இல்லாமல் செய்வது நமது வாழ்வியல் கடமைகளில் மிக முக்கியமானது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி இந்தச் சந்தேகம் என்ற நோய்க்குள் அகப்பட்டுத்தான் ஆகவேண்டும். ஏனெனில் வாழ்க்கைக்கல்வி என்பது புதிய புதிய விடயங்கள் பற்றிய அனுபவ அறிவாக அமைவதனால் அந்த அனுபவ அறிவின் ஆரம்ப நிலை ஒரு தெளிவற்றதாக அமைவது இயல்பானதே. இந்த தெளிவற்ற எதிர்பார்ப்புக்கள் எமது மனத்தில் ஒரு மாறுபட்ட எண்ணக்கருத்தை உருவாக்குவதும் இயல்பானதே. ஆனால் நமது மனதில் எழுகின்ற ஒவ்வொரு எண்ணக் கருத்துக்கும் ஏதோ ஒன்று அடிப்படையாக அமைவதும் அந்த அடிப்படையை அடிப்படை யாகக் கொண்டு அவ்வாறு எழுந்த எண்ணக் கருத்திற்கான காரணத்தைக்கண்டு அது சரியானதா அல்லது தவறானதா என உறுதிப்படுத்தும் போது சந்தேகம் மறைந்து விடுகின்றது.

ஒருவிடயம் பற்றிய காட்சியும் அதுபற்றிய கருத்தும் வேறுபடும் போது ஏற்படும் சந்தேகத்தை பூர்த்தி செய்வதற்கு அந்தக் காட்சியைக் கருத்துக்கேற்றவாறு அல்லது கருத்தைக் காட்சிக்கேற்றவாறு மாற்றி யமைப்பது தான் சந்தேகத்தை தீர்ப்பதற்கான வழி. இவ்வாறாகத் தான் நமது நாளாந்த வாழ்வில் எழும் பல்வேறு வகையான சந்தேகங்களுக்கு நாம் விடை காணகின் றோம். நமது வாழ்வின் ஒவ்வொரு நிலையும் இவ்வாறான விடைதேடும் நடவடிக்கையாக அமைவதை நாம் அவதானிக்கலாம். எனவே சந்தேகம் என்பது நமது வாழ்வியலில் தவிர்க்கப்பட முடியாதது. எனினும் ஒரு தரமான வாழ்வியலில் நம்மை உட்படுத்திக் கொள்வதற்கு இந்தச் சந்தேகங்களுக்கான விடையை உடனுக்குடன் கண்டுபிடித்து அந்தச் சந்தேகத்தை நிவர்த்தி செய்வது மிக மிக அவசியமாகும்.

சந்தேகம் என்பது தவிர்க்க முடியாதது எனினும் சந்தேகத்தையே வாழ்க்கையாக அமைத்துக் கொள்வது என்பது ஒரு துரதிஷ்ட மான விடயம். தீர்வுக்கான வழிகளைக் கண்டறியவோ அல்லது ஏற்கனவே உள்ள தரமான வழிமுறைகளைப் பின்பற்ற விரும்பாமலோ சந்தேகத்தையே சிம்மாசன-மாக்கி வாழுகின்ற சீமான்களும், சீமாட்டிகளும் தங்கள் வாழ்க்கையையும் சிதைத்து தங்களைச் சார்ந்தவர்களையும் சீரழித்து விடுகிறார்கள். இவர்கள் காரண காரியத்தொடர்பு எதுவுமின்றி எல்லா விடயங்களிலும் சந்தேகப்படுகின்ற ஒரு கொடிய நோயின் சூத்திரதாரர்கள். இவர்களது இந்த நோய்க்கு மருந்து பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களது சொந்த உயிராகவும் சில சந்தர்ப்பங்களில் அவரைச் சார்ந்துள்ளவர்களது வாழ்வாகவும் அமைகின்றது.

நமது வாழ்வியலில் சந்தேகம் என்பது அவ்வப்போது நமது மனக்கண்ணில் எழுகின்ற ஒரு சம்பவமேயன்றி அதுவே வாழ்வியலின் முடிவல்ல. சிலருடைய சந்தேகங்கள் தீர்க்கப் பட்ட பின்னரும் அதிலிருந்து தம்மை விடுத்துக் கொள்கின்ற சாதாரண மனப்பக்குவத்தை வளர்க்கத் தவறுகின்ற காரணத்தால் மீண்டும் மீண்டும் அந்தச் சந்தேகத்திற்குள் நுழைந்து அல்லற்படுகின்ற ஆறறிவுடன் பிறந்து ஐந்தறிவுடன் வாழும் அப்பாவிகளுக்கு மகிழ்ச்சி என்பது முயற்கொம்பு என்பதை மறந்துவிடாதீர்கள்.

சந்தேகம் என்பது ஒரு சாதாரண சம்பவம். நமது எதிர்பார்ப்புக்களின் நிச்சயமற்ற தன்மைகளால், எமது கருத்துக்கணிப்பின் தரத்தின் அளவால் உருவாக்கப்படுபவை. காலவோட்டத்தில் பல்வேறு சந்தேகங்களுக்கு நமது வாழ்வியல் அனுபவங்கள் விடை காண்கின்றன. அதனால் நாம் அனுபவசாலிகள் என்றும், அறிவுமிக்கவர்கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றோம். அதுமட்டுமல்ல மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் நாம் அமைகின்றோம். மாறாக சந்தேகத்தையே அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்கள் வாழ்வியலின் ஒவ்வொரு சம்பவத்தையும் தவறான பார்வைக்குட்படுத்தித் தம்மைத்தாமே துன்பப்படுத்தும் அப்பாவிகள். இவர்களுக்கு இது ஒரு நோய். மருந்தாலோ அல்லது மந்திரத்தாலோ மாற்றமுடியாத மனநோய்.

ஆம் வாசகர்களே!

சந்தேகம் என்பது எந்த நிலையில் எந்த அளவில் ஏற்பட்டாலும் உடனடியாக அழிக்கப்பட வேண்டியது. சாதாரண நோய்கள் குணப்படுத்தப்பட வேண்டியவை. ஆனால் சந்தேகம் என்ற நோய் அழிக்கப்பட வேண்டியது. சிறியமுளை ஒன்று இருந்தால் கூட நாளடைவில் மீண்டும் பூதாகாரமாக உருவெடுக்கக்கூடிய நோய் இது. அதுமட்டுமல்ல சந்தேகத்தை நாமாக அழிக்கா விட்டால் நாம் தாமாக அழிந்து விடுவோம்.

சந்தேகம் எழும்போது தாமதிக்காமல் அதற்கான விடையைக் கண்டறிந்து அந்தச் சந்தேகத்தை அழித்து விடுங்கள். சந்தோசமான வாழ்க்கையின் அடிப்படையே சந்தேகம் என்ற நோயை அழிப்பதன் செயற்திறன்தான்.

BrokerTeam INSURANCE SOLUTIONS INC.
DENNIE CHAN MBA
Associate Broker
On your side
•We represent over 10 insurance companies and offer the best premium
•House & Auto, Business, Condo
•Get a free quote today and see how you can save
dennie313@gmail.com
www.BrokerTeam.ca
Cell: 647.293.6980
Bus: 905.415.1188 Ext.120
Fax: 905.475.6448
Markham Branch
8787 Woodbine Ave, #218
Markham, ON L3R 9S2

# சட்டரீதியான...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

**சட்டரீதியான வாடகை குடியிருப்பு அறைகள்** (Legalize rooming house)

தங்கள் வீடுகளில், அல்லது சொந்தமான எந்த மனைகளிலும் வாடகைக்கு அறைகள் கொடுக்கும் வர்த்தகம் செய்வோர் தம் மனை இருக்கும் நகரசபையிடம் அனுமதி பத்திரம் பெற விண்ணப்பிக்கலாம். அனேக மாக ஒவ்வொரு நகரசபையும் தங்களுக்கு என பிரத்தியேகமான சட்டங்கள், ஒழுங்கு விதிகள் என இருந்தாலும் அனேகமாக அவை ஒரே விதிகளாகவே இருக்கும்.

பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

1. நகரசபை விதிகளுக்கு அமைய கட்டிடம், அறைகள் யாவும் இருத்தல் வேண்டும்.
(The premises comply with zoning, building & property standards requirement of the city)

2. தீ, காபன்மொனொக்சைட் போன்ற ஆபத்துகளின் எச்சரிக்கை கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

3. அறைகளுக்கு ஒழுங்கான பூட்டுகள் இருத்தல் வேண்டும். வாடகைக்கு வழங்கும் சகல அறைகளுக்கும் தீ ஆபத்து வரும் நேரம் பாதுகாப்பாக வெளியேறும் வசதிகள் இருத்தல் வேண்டும். அத்துடன் காற்றோட்டமும், வெளிச்சமும் வரும் யன்னல்கள் இருத்தல் வேண்டும்.

4. கூட்டாக உபயோகிக்கும் குசினி, குளியல் அறைகள் நகரசபை கோட்பாடுகளுடன் இருக்க வேண்டும், அத்துடன் அவை சுத்தமாக, சுகாதார சீர்கேடுகள் எதுவுமில்லாது இருத்தல் வேண்டும்.

5. வீட்டு உரிமையாளர் சகல பதிவுகளை யும் பரிசோதனைக்கு கேட்கும் நேரம் காட்டுவதற்கு தயாராகவிருத்தல் வேண்டும். நகரசபை உத்தியோகத்தர் கள் அடிக்கடி வந்து பரிசோதனை செய்து கொள்வார்கள். வருடம் தோறும் அனுமதிபத்திரம் புதுப்பிக்கும் போது நேரடி



பரிசோதனைகள் நடக்கும்.

6. வீட்டு உரிமையாளர்களையும், குடி இருப்பவர்களையும் என்றும் பாதுகாக்கும் காப்புறுதிகள் இருத்தல் வேண்டும்.

இப்படியாக மேற்குறிப்பிட்ட படி ஏராளமான நிபந்தனைக்குட்பட்ட நிலையில் அறைகள் வாடகைக்கு கொடுக்கும் அனுமதிபத்திரம் நகரசபை அரசு வழங்கும். அச்சமின்றி இந்த தொழிலை எவரும் தொடரலாம்.

பல நகரசபைகளும் நிலக்கீழ் மனைகளை (Basement Apartments) குடியிருப்பு மனையாக (Second suites) அங்கீகரித்து உள்ளார்கள். ஆனால் அவை நகரசபையின் சட்ட ஒழுங்குகள் கோட்பாடுகளின்படி நிலக்கீழ் குடியிருப்புமனை அமைத்திருத்தல் வேண்டும். நகரசபையின் ஒழுங்குகளுக்கு அமைய அமைக்கப்படவில்லையானால் அந்த இடங்களில் தீ ஆபத்துகள் ஏதாவது ஏற்பட்டு நட்டஈடுகள் காப்புறுதி நிறுவனங்களில் கோர முற்படும்போதே பிரச்சினைகளும் ஆரம்பிக்கும்.

**ரொறொன்ரோ நகரத்தினுள் வாடகை குடியிருப்பு அறைகள்**

1997 ஆம் ஆண்டு ரொறொன்ரோ நகரசபை ஒன்றிணைக்கப்பட முன்பு, ஆறு நகரசபைகளாக தனித்தனியாக இயங்கி வந்தன. அவையாவன

- ஸ்காபரோ
- ஈஸ்ற் யோர்க்
- எற்ரோபிக்கோ
- நோர்த் யோர்க்
- யோர்க்
- ரொறொன்ரோ நகர பகுதி

இந்த ஆறு சிறுசிறு நகரசபைகளிலும் வீடுகளில் வாடகை குடியிருப்பு அறைகள் என்ற வர்த்தகத்தினை செய்யும் உரிமை பத்திரம் விண்ணப்பித்து பெறும் அனுமதி யோர்க், எற்ரோபிக்கோக், ரொறொன்ரோ நகரப்பகுதிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு இருந்தன. ஏனைய ஸ்காபரோ, நோர்த் யோர்க், ஈஸ்ற் யோர்க் பகுதிக்கும் அந்தந்த நகர-சபைகள் அன்றும் வழங்கவில்லை. இன்றும் இதுவரை வழங்க ஆரம்பிக்க வில்லை. ஒன்றிணைக்கப்பட்டு இவ்வளவு காலமாகிய பின்பும் இந்த சட்ட விதிகளில் எதுவித மாற்றமும் செய்யப்படவில்லை. அதாவது ஸ்காபரோ, நோர்த் யோர்க், ஈஸ்ற் யோர்க் பகுதியில் இந்த வர்த்தகம் செய்தால் அது நகரசபையின் அனுமதி பத்திரம் பெறாத வர்த்தகமேயாகும்.



# விஜய் தொலைக்காட்சியில் உள்ளத்தைக் கவர்ந்த நிகழ்ச்சிகளில் ஒரு சில

## விஜய் தொலைக்காட்சி பற்றி நயவுரை

வாழ்க்கையின் அந்திம காலத்தில் உலக விசாரங்களில் தலையிட்டு பிரச்சினைகள் எவ்வாறு எழுகின்றன, எவ்வாறு தீர்க்கப்படலாம் என்றெல்லாம் சிந்தித்து அதனால் இரத்த அழுத்தம், நெஞ்சுப் படபடப்பு முதலியவற்றால் அவஸ்தைப்படுதல் உண்டு.

நாங்கள் வாழ்ந்த வீடு, சுற்றம், தேசம் என்றெல்லாம் ஞாபகத்து வந்து வருத்தும். அடுத்த செய்தியாக அவையெல்லாம் யார் யாரால் நாட்டை விட்டு ஓட்டப்பட்டோமோ அவர்களாலும் அவர்களுக்கு உதவி செய்வோராலும் அனுபவிக்கப்படுகிறது என அறியும் போது எரிச்சலும், கோபமும், ஆற்றாத்தனத்தால் ஏற்படும் விரக்தியாலும் பைத்தியம் பிடித்தவர்களாய் மாறி விடுகிறோம்.



எமக்குக் கிடைத்த வானொலி, தொலைக்காட்சி முதலியன இத்தகைய தகவல்களைத் தந்து கொண்டே எரிகிற நெஞ்சுக்கு எண்ணெய் வார்க்கின்றது. மனித வாழ்க்கையை நான்கு படியில் வகுத்து வைத்தனர் அறிஞப் பெருமக்கள். பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம். சந்நியாச நிலைக்கு வந்த பின் எமக்கு ஏன் இந்த உலகப் பிரச்சினைகள்? வீட்டிலேயே இத்தகைய பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

விஜய் தொலைக்காட்சி இதற்கு பெரும் உதவி செய்வது உணரக் கூடியதாக இருக்கிறது. தொடர் நாடகங்கள் மூலம் அந்தப் பாத்திரங்களோடு ஒன்றி அவர்களோடு வாழ்ந்து அடுத்த கட்டத்தில் அவர்கள் என்ன செய்வார்கள் எனக் கற்பனையில் ஈடுபட்டு மறுநாள் அதைப் பார்க்க வேண்டும் எனும் நம்பிக்கை வைத்து உறங்கச் செல்கின்றோம். உடம்பில் ஏற்படும் வலிகள், வேதனைகள், கண்டுகொள்ளாத் தன்மைகளால் எப்போ சாவு வரும் இந்தத் தொல்லை விடுபடும் என்ற நிலையை விஜய் தொலைக்காட்சி மாற்றி விடுகிறது. அவற்றுள் சில இங்கே தரப்படுகின்றன.

ஆன்மீகரீதியாக காலத்துக்கு காலம் மகான்கள், சில வழிபாடுகள் தோன்றிய காரணங்கள் என அவைபற்றிய, மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட அதிசய நிகழ்வு களைத் தருகின்றது. இதிகாச காலத்தை அடியொற்றி மக்களின் வாழ்க்கைக்கு உதவக்கூடிய அறநெறிகளை அறிவுறுத்தும் வண்ணம் இராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை சம்பவங்கள் மூலம் அறியத் தருகிறது. புராண காலத்தில் எழுந்த சிவன் பற்றிய திருவிளையாடப் புராணத்தின் ஒரு பகுதி 'சிவம்' எனும் தொடரால் விளக்கம் பெறுகிறது.

சமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் மூன்றுவித படிகளில் அமைகிறார்கள். இதில் உயர்மட்டக் குழுவுக்கு ஏற்றதாக 'தெய்வம் தந்தவீடு' எனும் கூட்டுக் குடும்ப வாழ்க்கை சித்தரிக்கப்படுகிறது. மத்தியதரக் கூட்டுக் குடும்பமாகத் 'தாயுமானவன்' தொடர் விளங்குகிறது. நவீன வாழ்க்கை முறையில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை உடைந்து தனிக் குடும்ப வாழ்க்கைக்கு ஆதரவு கூடுவதை இந்த இரு குடும்பங்களிலும் தொடங்கப்படும் பூசல்கள்.

சரவணன் மீனாட்சி அடுத்த பரம்பரை. மரபு அணுக்களின் செல்வாக்கு உடல் வடிவமைப்பிலும் குணம் நடைகளிலும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை சூழலா பரம்பரையா எனும் உளவியல் அறிஞர்களின் வாதப்பிரதிவாதங்களுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

பொதுமக்கள் மத்தியில் எவ்வாறு இசை ஞானம் இருக்கிறது. அதற்கு ஊக்கம் கொடுத்து உசுப்பி விட்டால் மக்கள் மத்தியில் இசை ஞானம் பரவும். கேள்வி ஞானத்தாலும் ஆற்றல் வளர்ந்து சமூக மயப்படும் என்பதை 'சுப்பர் சிங்கர்' மூலம் அரங்கத்துக்கு வந்த பாடகர்கள் நிரூபிக்கிறார்கள்.

நவீன காலத்தில் பரம்பரைத் தொழில்களை விடுத்து அரச உத்தியோகங்கள் கம்பனிகள் எனப் பல அலுவலகங்களிலும் வேலை பார்க்கும் மக்கள் எதிர் நோக்கும் சவால்கள், செயற்பாடுகள், முதலாளி, தொழிலாளி எனும் பதங்கள் மறைந்து உயர் உத்தியோகத்தர் ஊழியர் சிற்றூழியர் எனும் பதங்களின் வருகையையும் செயற்படும் முறைகளையும் காட்டும் 'Office' (அலுவலகம்), சக ஊழியரிடையே ஏற்படும் நட்பு, பொறாமை, விரோதம் என்பனவற்றையும் சித்தரிக்கின்றது.

நகைச்சுவையை மையமாகக் கொண்டு, மக்களை சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கும் 'அது இது எது'. இவற்றோடு வேற்றினக் கலாசாரம் பண்பாடு முதலியவற்றைப் பிரதிபலிக்கும் குஜராத்தி நாடகங்கள்: உறவுகள் தொடர்கதை, என் கணவன், என்தோழன் ஆகிய இரு நாடகங்கள் தமிழரின் முன்பு இருந்தாலும் இப்போது அருகி விட்ட பழக்க வழக்கங்கள் எவ்வளவு நவீனமான கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாலும் பழைய வழக்கமான நிறைய நகைகள் அணிதல், சேலை உடுத்து தலையை மூடுதல் ,எல்லாரும் ஒன்றாக சிவபூசை செய்தல், பெரியவர்களின் காலைத் தொட்டு வணங்குதல், பிறர் முன்னிலையில் கணவன், மனைவி கூட பார்வைப் பரிமாற்றமே தவிர ஒருவரை ஒருவர் தொடக் கூடமாட்டார்கள்.

மேலும் நீயா, நானா போன்று பல நிகழ்ச்சிகளும் உண்டு.

இத்தகைய சிறப்புகளைத் தரும் விஜய் தொலைக்காட்சிக்கு புதுவருட நன்னாளில் வந்தனை செய்வோம்.



**- குறமகள்-**

# புதிய புத்தாண்டே புன்னகை புரிந்து வா!



புதிய புத்தாண்டே புன்னகை புரிந்து வா
புதுமைகள் பல புரிய புறப்பட்டு வா
பழையன பறந்து புதியன புலர்ந்திட
பகலவன் ஒளிபோல் பவிசாக வா

வறுமை ஒழிந்து வாழ்வு சிறக்கவும்
வாழ வழியற்றோர் வசதி பெருகவும்
வஞ்சனைகள் நீங்கி வாஞ்சை மலரவும்
வரும் புத்தாண்டே வரம் கொண்டுவா

ஏர் பிடித்தவன் ஏழைமை ஒழியவும்
ஏதிலிகள் ஏக்கம் ஏற்றம் பெறவும்
ஏழை என்ற ஏளனம் ஏந்தலாய் மாறவும்
ஏற்றம் தரும் புத்தாண்டே ஏறுபோல் வா

பாரெல்லாம் பரந்து வாழும் பன்னாட்டு
மக்களின் பாவங்கள் நீங்கி பசுமைகள்
பொங்கபாசமும் பரிவும் பாங்காக பெருகிட
பாஞ்சாலிக்கு பரந்தாமன் போல்
பாய்ந்தோடி வா

சண்டைகள் ஓய்ந்து சமாதானம் பிறக்கவும்
சண்டாளர்கள் சன்னதங்கள் சாவை தழுவவும்
சன்மார்க்கநெறி சந்தனம் போல் பரவவும்
சமாதானத் தூதுவன் போல் சங்கையாய் வா

கடுங்குளிர் என்றாலும் கருணையுள்ள கனடா
நாட்டில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை
காத்து காலம் எல்லாம் களங்கமில்லா
வாழ்வோமென கனிந்துவரும் புத்தாண்டில்
கங்கணம் அணிந்திடுவோம்



**- மார்க்கம் சந்திரன்**


## MATH, PHYSICS & COMPUTER SCIENCE / PROGRAMMING STUDIES HOME TUTORING



### Subjects

- Grade 11, 12: Any Math/Physics/Computer studies credit courses
- University (Any year): (Including but not limited to) Calculus, Linear Algebra, Statistics, Probability, Computer programming (Java/C++ etc) Discrete Mathematics, Data Structures, Algorithms.
- IB: Any Mathematics/Physics/Computer Science Diploma courses.

**Contact: Bala Balamohan**

**416.551.2553**

- B.Sc. & M.Sc. degree in Mathematics from U of Toronto
- M.C.S & Ph.D. degrees in computer science from U of Ottawa
- More than 10 years experience as teaching assistant at U of Toronto & U of Ottawa
- Winner, Graduation prize, Dept. of Computer & Mathematical Science, U of Toronto, Scarborough (UTSC), 2005
- Member, UTSC'S first team for **Putnam Competition**

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்




DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 Weeks
Job Opportunities: Accounting & Payroll Clerk, Payroll Clerk
Payroll & Benefit Clerk, Pay Clerk

Business Administration
26 Weeks
Job Opportunities: Administrative Clerks,
Executive Assistants, Administrative Service managers

Computerized Accounting
26 Weeks
Job Opportunities: Accounts Clerk,Accounts Payable
Accounts Receivable, Accounts Assistant, Book Keeper

Medical Office Admin.(MOA)
32 Weeks
Job Opportunities: Medical secretary, Medical Office Assistant
Health Office Administrator, Hospital Ward Clerk

Personal Support Worker(PSW)
NACC Diploma Certificate
26 Weeks
Job Opportunities: Personal Support Worker, Patient Care Aid
Hospital Attendant, Long Term Care Aid

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள்?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000
அனைத்தும் இலவசம்
Second Career மறுக்கப்பட்டவர்கள்,
New Immigrants are also Welcome

TAKE ONE COURSE AND
GET ANOTHER ONE FOR FREE
WORD,EXCEL,POWER POINT,ACCESS
QUICKBOOKS LEVEL 1 & 2
SIMPLY ACCOUNTING LEVEL 1 & 2
ACCPAC G/L, A/P & A/R

Career Colleges Ontario

416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# CANADA'S...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

rise condos), வியாபாரம் செய்யக்கூடிய இடங்கள் (business space) போன்றவற்றின் விலையில் அதிகரிப்பு ஏற்படலாம் எனவும் இவ்வறிக்கை கூறுகின்றது. வெளிநாட்டவர் களின் முதலீடு, கனடாவின் ஆரோக்கிய மான பொருளாதாரம், குறைந்த வட்டிவீதம், மக்களின் குடிவரவு அதிகரிப்பு போன்றவை ஆதன வியாபாரத்திற்கு சாதகமானவை. அதேநேரத்தில் மேலதிகமாக சந்தைக்கு வர இருக்கும் வீடு, மனைகள் விலை அதிகரிப்பிற்கு முட்டுக்கட்டையாக இருக்க கூடிய ஆண்டாகலாம். அடுத்த வருடம் கனடிய தேர்தலும் வர இருப்பதால் பொருளாதாரத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசு உள்ளது. அத்துடன் நவம்பர் 2013 இன் இறுதியில் நடந்த இடைத் தேர்தலும் அரசிற்கு சாதகமான முடிவைக் காட்டவில்லை. எனவே இவ்வாண்டும் அடுத்த ஆண்டும் பொருளாதாரத்தை குறிப்பாக ஆதன வியாபாரத்தை பாதிக்க கூடிய முடிவை அரசு எடுக்குமா என்பது நியாயமாகத்தான் தோன்றுகின்றது.

இவ்வருடத்தின் இறுதி 8 - 9 மாதங்களில் நிர்மாணிக்கப்பட்ட விலை 70% ஆனவை அடுக்கு மாடி மனை, தொடர்வீடுகளே

2014 ஆம் ஆண்டு ஆரோக்கியமான, வளமான ஆண்டாக இருக்கும் என நல்லதையே எதிர்பார்ப்போம். நல்லதையே சிந்திப்போம், நல்லதே நடக்கும்.

**2014 ஆம் ஆண்டு பற்றிய CMHC இன் எதிர்வு கூறல்**

- ஆதன வியாபாரம் ஆரோக்கியமாக காணப்படும்
- புதிதாக நிர்மாணம் செய்யப்படும்



ஆதனத்தின் எண்ணிக்கையில் சரிவு ஏற்படலாம். (2013 உடன் ஒப்பிடும் போது)

- வாழ்ந்து விற்கும் ஆதனங்களில் (Resale) அதிகரிப்பு ஏற்படும்
- வட்டிவீத அதிகரிப்பு பெரிதாக ஏற்படாது.
- விலை அதிகரிப்பு, மக்களை வாடகை இல்லங்களை நோக்கி நகர்த்தலாம்.
- தொழில் அதிகரிப்பும் சம்பள அதிகரிப்பும் சமமாகலாம்.

# யாழ்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

இரணைமடு குடிநீர்த்திட்டத்திற்கு மக்கள் மத்தியில் ஆதரவு திரட்டும் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. படிவங்கள் விநியோகிக்கப்பட்டு, அவற்றை நிரப்பித் தருமாறு மக்கள் கேட்கப்படுகின்றனர். கொக்குவிலில் வசிக்கும் நண்பர் ஒருவர், தங்களுக்கு தேவையான குடிநீர் கிணறுகள் இருக்கும் போது ஏன் இப்போது இந்தப்படிவங்களை நிரப்புமாறு வற்புறுத்துகின்றார்கள் என்று என்னிடம் கேட்டார். பிரதேச முரண்பாடுகளை கிளறிவிடும் நடவடிக்கை கள் இப்போதே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவே சந்தேகம் எழுகின்றது.

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்குவதற்கு கிளிநொச்சி விவசாயிகளுக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் இல்லை. இத்திட்டத்தால் தங்களது விவசாயத்திற் கான நீர்வளம் பாதிக்கப்படாது என்கின்ற உத்தரவாத்தை அளிக்குமாறே அவர்கள் கேட்கின்றனர். இதனை வாய்மொழியூடாக இல்லாமல், எழுத்து மூலமாக அவர்கள் கேட்கின்றனர். ஒப்பந்தத்தில் இது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோருகின்றனர். ஆனால், இவற்றை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் தயாரக இல்லை என்பது தான் பிரச்சினை. இத்திட்டத்தை கிளிநொச்சி விவசாயிகள் முழுமையாக எதிர்க்கும் போது அதனை நடைமுறைப் படுத்த ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்படாத நிலையே ஏற்படும். இன்று இந்தப் பிரச்சினை வட மாகாணசபை நிர்வாகத்தின் கைகளுக்குச் சென்றுள்ள நிலையில், இதன் சாதக, பாதகத் தன்மைகளை ஆலோசித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிபுணர் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும், நிச்சயம் கிளி-நொச்சி விவசாயிகளின் கருத்துக்கள் இதில் உள்வாங்கப்படும் எனவும் வடமாகாண சபை நிர்வாகம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் பின்னணியில் புதைந்துள்ள அரசியல், இராணுவ, பொருளாதார உள்நோக்கங்களும் நன்கு ஆராயப்பட்டு முடிவெடுக்கப்பட வேண்டும் என்பதே சகல நலன் விரும்பிகளதும் எதிர்பார்ப்பாகும்.


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

# சார்பியல் - 37

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

சார்பியல் வாசகர்களே!




உங்கள் அனைவருக்கும் விளம்பரத்தின் ஊடாக எனது புத்தாண்டு வாழ்த்துகள். பிறந்த புதுவாண்டில் பொங்கட்டும் நாலாவித நன்மைகளும் மனித குலத்தினர் அனைவருக்கும் என் இறையை இறைஞ்சுகிறேன். சென்ற தடவையில் விஞ்ஞானிகள் சிலர் கூறும் கடவுட் சமன்பாடு பற்றித் தெரிந்து கொண்டோம், அதிலிருந்து இனித் தொடருவோம்.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### பொதுச் சார்புத் தத்துவத்தின் உறுதிப்பாடு

பொதுச் சார்புத் தத்துவம் கொள்கையில் முழுமை பெற்றுவிட்டது. ஆனால் அது சரிதான் என்பதை இன்னமும் சரிபார்க்கவில்லை, சரிபார்க்கவும் முடியவில்லை. காரணம் பொதுச் சார்புத் தத்துவத்தை சரிவர விளங்கிக் கொண்டவர்கள் யாருமே இல்லை எனலாம். அதனால் அதனை விளங்கப்படுத்துவதும் கூடக் கடினமானதாக இருந்தது. அவ்வளவிற்குக் கடினமாக அத்தத்துவம் அப்போது விஞ்ஞானிகளுக்குத் தெரிந்தது. ஒருதடவை ஆதர் எடிங்ரன் (Arthur Eddington) என்பவரிடம் அவரது மாணவர் ஒருவர் "பொதுச் சார்புத் தத்துவத்தை விளங்கிக் கொண்ட மூவரில் நீங்களும் ஒருவர்" எனக் கூறினாராம். அதற்கு எடிங்ரனின் ஆச்சரியமாக "யார் அந்த மூன்றாவது நபர் என யோசிக்கிறேன்" என்றாராம். சுப்பிரமணியன் சந்திரசேகர், எடிங்ரன் பற்றி எழுதிய நூலில் இதனை குறிப்பிட்டு உள்ளார் எனப் பதிவுகள் கூறுகின்றன. பொதுச் சார்புத் தத்துவத்தின் கடுமையை எடுத்துக் காட்டுவதற்கு இந்தச் சம்பவத்தை இன்னமும் பலர் கூறுவார்கள்.

சுப்பிரமணியன் சந்திரசேகர் ஒரு அற்புதமான விஞ்ஞானி. கணித முறையில் கருந்துளைகள் இருக்க முடியும் என நிறுவிக்காட்டி, அயன்ஸ்ரைனையே ஆச்சரியப்பட வைத்த, நோபல் பரிசு பெற்ற இந்தியாவின் தமிழ் விஞ்ஞானி. 'சந்திரசேகர் எல்லை' என்ற ஒரு பெறுமானத்தையே கண்டு பிடித்தவர். கதிரவத் திணிவின் 1.4 மடங்கிற்கு மேல் வெண்குள்ள விண்மீன் ஒன்று இருக்முடியாது என்று நிறுவியவர். இதனைத்தான் சந்திரசேகர் எல்லை என்கிறார்கள். இத்திணிவிற்கும் அதிகமான திணிவினைப் பெறும் வெண்குள்ள விண்மீனகள், வகை 1a (Type 1a) எனும் வகையிலான சுப்பநோவா ஆக வெடித்துச் சிதறும் என்பதனைத் தெளிவுபடுத்தியவர். இவரைக் கனப்படுத்தும் முகமாக இன்று வான்வெளியில் கலக்சிகளின் இயக்கங்களை ஆய்வுசெய்து கொண்டிருக்கும் ஆய்வுகூடத்திற்குச் "சந்திரா" எனப் பெயரிட்டுள்ளார்கள். அவரது ஆசிரியரான எடிங்ரன், அற்புதமான வானியல் இயற்பியல்வாதி. இவர்தான் முதன்முதலில் அயன்ஸ்ரைனின் பொதுச் சார்புத் தத்துவத்தை, வளைந்த வெளி-நேரப் பரிமாணத்தை சரியென உலகினருக்குக் காட்டியவர்.

விண்மீன்கள் நாற்பரிமாண வெளியை வளைக்கின்றன, அதனருகில் வருகின்ற ஒளியும் தனது பாதையை விலத்துகிறது என்று அயன்ஸ்ரைன் கூறியதைச் சரிபார்ப்பதற்கு எங்களுக்கு மிகவும் வசதியான விண்மீன் எங்களின் கதிரவன்தான். ஆனாலும் இதிலும் சிக்கல் இருக்கிறது. வெளிநேரப் பரிமாணம் வளைந்துள்ளது என்பதை எவ்விதம் எமது உணர்வுகளின் அடிப்படையில் காணமுடியாது இருக்கின்றதோ அதேபோலவே கதிரவனால் வளைவுற்றுப் பாதை விலகல் எற்பட்ட ஒளிக் கதிர்களையும் எம்மால் சாதாரணமாகப் பார்க்க முடியாது. ஏனெனில் பகலில் கதிரவனின் ஒளிர்வு வானிலே எதனையும் எமக்குக் காட்டாது. அப்படியாயின் எப்படி அயன்ஸ்ரைனின் எதிர்வு கூறலை சரிபார்ப்பது? அதற்கும் இயற்கை எமக்கு ஒரு வழி தந்திருந்தது. அது கதிரவ கிரகணம். (சூரிய கிரகணம்). முழுமைக் கதிரவ கிரணத்தின் போது சந்திரன் கதிரவனை முற்றாக மறைப்பதினால், கதிரவனுக்குப் பின்னால் இருக்கும் விண்மீன்களை அத்த நேரத்தில் மட்டும் பார்க்கலாம். இதனை எடிங்ரன் பயன்படுத்திக் கொண்டார்.

எடிங்ரனின் தலைமையிலான ஆய்வுக் குழுவினர், 1919ம் ஆண்டு மே 28ல் நடந்த முழுச் கதிரவக் கிரகணத்தை படம் பிடித்தார்கள். பட்டப்பகல் நேரத்தில், கதிரவனைச் சந்திரன் மறைத்த நிலையில், 12 விண்மீன்களை கதிரவனின் பின்னால் கண்டவர்கள் எடுத்த புகைப்படத்தின் உதவியுடன், கதிரவனின் அருகில் வருகின்ற ஒளிக்கதிர்கள் வளைவுறுகின்றன எனக் காட்டினார். அது மாத்திரமல்ல, அவ்விடத்தில் ஒளியின் விலகற் கோணமானது அயன்ஸ்ரைன் கணித்துக்

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# சார்பியல்

17ஆம் பக்கத்தொடர்ச்சி

கூறிய 1.75 ஆக்செக் ஆகவும் இருந்தது. இதன்படி, வெளிநேரத்தின் வளைவு என்பது சரியானது தான் என்பதும் பொதுச் சார்புத் தத்துவம் சரியானதுதான் என்பதும் விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நொவம்பர் 6, 1919 ல் பிரத்தானியாவின் றோயல் வானியல் கழகத்தினரின் கூட்டத்தின் முடிவில் சேர் ஆதர் எடிங்ரனால் அயன்ஸ்ரைனின் கணிப்பும் எதிர்வு கூறலும் சரியானது என 'கவிதைத்தனத்தில்' கூறப்பட்டது. மறுநாள் 7ம் திகதி பிரித்தானியாவின் ஊடகங்களில் முக்கிய பரபரப்புச் செய்தியாக இது வெளிவர, அடுத்த சில மணித்தியாலங்களில் உலகெங்கும் காட்டுத் தீயெனப் பரவியது இந்த அற்புதமான செய்தி. அந்த ஒரு நாளிலேயே அயன்ஸ்ரைன் உலகத்தினர் இதுவரையில் கண்ட உயர்ந்த அறிவியல் மனிதனாக ஆகிவிட்டார். லண்டன் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட தலைப்புச் செய்தி இதுதான். Revolution in Science _ New Theory of the Universe _ Newton's idea Overthrown – Spacs "Wraped" இதன் பின்னராக சிறிது சிறிதாக பொதுச் சார்புத் தத்துவத்தின் தார்ப்பரியங்கள் எல்லாம் வெளிவரத் தொடங்கின.

# வாழ்வின் படிகள் - 16

| | |
|---|---|
| 1. மிக மிக நல்ல நாள் | இன்று |
| 2. மிகப்பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| 3. மிகவும் வேண்டியது | பணிவு |
| 4. மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| 5. மிகப்பெரிய தேவை | சமயோஜித புத்தி |
| 6. மிகப்பெரிய கொடிய நோய் | பேராசை |
| 7. மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| 8. மிகவும் கீழ்த்தரமானது | பொறாமை |
| 9. நம்பக்கூடாதது | வதந்தி |
| 10. ஆபத்தை விளைவிப்பது | அதிக பேச்சு |
| 11. செய்ய வேண்டியது | உதவி |
| 12. விலக்க வேண்டியது | விவாதம் |
| 13. உயர்வுக்கு வழி | உழைப்பு |
| 14. நழுவ விடக் கூடாதது | வாய்ப்பு |
| 15. பிரியக்கூடாதது | நட்பு |
| 16. மறக்கக்கூடாதது | நன்றி |

## மழலை அரங்கம் - 2013

தமிழ்ப்பூங்கா தமிழ்ப்பள்ளி ஒழுங்குசெய்து டிசெம்பர் 21 அன்று ஸ்காபரோ நகரமண்டபத்தில் நடத்திய பாச்செண்டு "மழலை அரங்கு" சிறுவர் பாடற் போட்டியிற் கலந்து பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

**முன்பள்ளிச் சிறார்**

1.ஆம் இடம்: செல்வி. உதயா நிதாகரன்,
2.ஆம் இடம்: செல்வி. வைஸ்ணவி புவனேந்திரன
3.ஆம் இடம்: செல்வன். பிரணவ் செந்தில்

**இளம் மழலைச் சிறார்**

1.ஆம் இடம்: செல்வி. லக்ஷா சிவகுமார்
2.ஆம் இடம்: செல்வி. திசானி கிருபாகரன்,
3.ஆம் இடம்: செல்வன் ஆகாஷ் சதீஸ்வரன்

**முது மழலைச் சிறார்**

1.ஆம் இடம்: செல்வி. காவியா நிதாகரன்
2.ஆம் இடம்: செல்வி.நிதுரா அலஸ்ரின் குமார
3.ஆம் இடம்: செல்வி. அஞ்ஜனிகுலசெல்வம்

மேற்படி நிகழ்வில் செந்தாமரை பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திருமதி. ராஜி கனகரட்ணம் அவர்களும், ரொறன்ரோ 42ஆம் வட்டாரக் கவுன்சிலர் திரு. ரேமன்ட் சோ அவர்களும், மார்க்கம் கல்விச்சபை உறுப்பினர் செல்வி. வொனிற்ரா நாதன் அவர்களும், ஜே.ஆர். எஸ். கல்லூரி அதிபர் திரு. ரூபன் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடாவளாக விரிவுரையாளர் திருமதி. செல்வம் சிறிதாஸ் அவர்களும் கலந்து பெறுமதிமிக்க பரிசுகளை பங்குபற்றிய சிறார்களுக்கு வழங்கினர்.

சபா. அருள்சுப்பிரமணியம்




Industrial Automation Technology

- Emerson Control Techniques ladder logic, with CTnet communication and Modbus TCP/IP
- Allen Bradley RSLogix 5000 Ladder logic, With Ethernet IP communication
- HMI development, utilizing Modbus TCP/IP and Ethernet IP communication
- Siemens
- Omron

Training with Real World Componant (Motors, Sensors, VFT, Encoder, PLC, Beckhoff, Conveyor, Analog I/O, Safety Switch)

வேலைவாய்ப்புக்கள்

Automation Technician, Maintanance Technician, Automation Designer, Instrument Technician
Electrical Control Technician, Electrical Drafter, Electrical Designer, Control System Designer

Next information session - February 22nd, 2014 at 11 AM
Please call for your place

Maternity
1. Living expenses, 2. Daycare fees 3. Transport expenses

COVERS TUITION AND LIVING EXPENSES UP TO $28,000

beta College of Business & Technology
Tel: 416.449-BETA(2382)
www.betacollege.ca
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere), Scarborough, ON, M1H 3C7


விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com

# தலைமுறைகள் - திரைவிமர்சனம்

எட்டு ஆண்டுகள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் தமிழ் திரைக்கு திரும்பியிருக்கிறார் பாலு மகேந்திரா. ஒளிப்பதிவாளர், இயக்குநர் என்பதுடன் ஒரு நடிகராக பாலுமகேந்திரா புதிய அவதாரம் எடுத்துள்ள படம் இது.

காவேரிக்கரை கிராமத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வயதான ஒரு தமிழ் வாத்தியரின் கதைதான் ‘தலைமுறைகள்’. தமிழ் வாத்தியார் வாரிசு எஸ்.சசிக்குமார், சென்னையில் பெரிய டாக்டர். அப்பாவின் பேச்சை மீறி உடன் பணி செய்யும் டாக்டரான ரம்யா சேகரை காதலித்து கல்யாணம் செய்கிறார். ‘கோவாவை சேர்ந்த கிறிஸ்துவ பெண்ணான ரம்யாவுக்கு தமிழ் தெரியாது. தன் சாதி பாரம்பரியமும் புரியாது’ என்று, மணம் முடிந்து ஊருக்கு வரும் தம்பதிகளை – மகனையும் மருமகளையும் - ‘நான் செத்தாலும் வரக்கூடாது’ என அடிக்காத குறையாக திருப்பி அனுப்புகிறார் தமிழ் வாத்தியார். வாத்தியாரின் மகளும் அவரது இன்னொரு தாரமும் அதே ஊரில்தான் வசிக்கிறார்கள். ஆனால், இத்தனை பேர்கள் இருந்தும் யாரும் இல்லாமல் தனியே வாழ்கிறார். 12 ஆண்டுகள் ஓடிவிடுகிறது. ஒருகட்டத்தில் வயது காரணமாக வாத்தியாருக்கு பக்கவாதம் ஏற்பட்டுவிடுகிறது.

இரண்டு மாதகாலம் கஷ்ட்டப்பட்டு மீளுகிறார். விஷயம் கேள்விப்பட்டு நீண்ட நாட்களாக அப்பாவைப் பார்க்காத மகன் எஸ்.சசிக்குமார் வருகிறார். இரண்டு நாட்களில் மருமகளும் தமிழே தெரியாத பேரனும் வந்து சேர்கிறார்கள். தன் வயோதிகத்தாலும் வாழ்க்கை தந்த பாடத்தாலும் பேரன் மீதான பாசத்தாலும் வாத்தியாரின் கோபம் படிப்படியாக குறைகிறது. அவர்களை ஏற்றுக்கொள்கிறார். அதன்பின் மகன் சென்னைக்கு திரும்ப, மருமகள் அந்த ஊர்



மருத்துவ தேவையை மனதில்கொண்டு வாத்தியாருடன் தங்கி விடுகிறார். அவருடன் பேரனும் தங்குகிறார். பேரனுக்கு இவர் தமிழ் கற்றுக்கொடுப்பதும் அவன் இவருக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதும் என நாட்கள் இனிமையுடன் நகர்கின்றன. பிரசவத்திற்கு வந்திருக்கும் மூத்த தாரத்து மகள், இரண்டாம் தாரத்து மகளின் அன்பு, மருமகள், பேரன் எனக் கூட்டுக் குடும்பமாக தன் இறுதி நாட்களைக் கழித்து மன நிறைவுடன் மரணத்தை தழுவுகிறார் வாத்தியார்!

பேரன், தாத்தாவையும் தாத்தா கற்றுத்தந்த தமிழையும் மறக்காமல் பெரும் எழுத்தாளனாக வளர்கிறார். ‘தாத்தாவும் நானும்’ எனும் நாவல் எழுதி அவன் பெரும் விருது பெறுவதுடன் நிறைவடைகிறது படம். தாத்தாவாக – தமிழ் வாத்தியாராக - பாலு மகேந்திராவே நடித்திருக்கிறார். நடித்திருக்கிறார் என்பதைவிட வாழ்ந்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். தொப்பி இல்லாத பாலுமகேந்திரா, தாத்தாவாக அத்தனைக் கச்சிதம். கண்கலங்க வைக்கும் அவரது நடிப்பு, ‘ஆஹா, நமக்கு இப்படி ஒரு தாத்தா இல்லையே’ என எல்லா தரப்பு ரசிகர்களையும் ஏங்க வைக்கும்! பேரனுக்கு விஜயதசமி நாளில், கோயிலில் வைத்து, நெல்லில் ‘அ’ எழுத கற்றுக் கொடுத்துவிட்டு, அவர் படும் ஆனந்தமாகட்டும், ‘தமிழ் வாத்தியார் பேரனுக்கு தமிழ் தெரியவில்லை’ என அவர் தலையில் அடித்துக்கொள்ளும் இடமாகட்டும், ஆரம்ப காட்சிகளில் சாதி அபிமானத்துடன் அவர் நடந்துகொள்ளும் முறையாகட்டும், மகன் மீது காட்டும் கோபத்திலும் கடைசியில் மகள்கள், மருமகள், பேரன் மீது காட்டும் அன்பிலும்... பிரமாதப்படுத்தியிருக்கிறார்.

மற்றவர்களும் இயல்பாக நடித்திருக்கிறார்கள். மகன்: எஸ்.சசிக்குமார், பேரன்: மாஸ்டர் கார்த்திக், ரம்யா சங்கர்: ‘எங்கேயும் எப்போதும்’ வினோதினி மற்றும் சக்தி, ரயில் ரவி, தில்லை பெருமாள், ஆர்யான், கடைசியில் எழுத்தாளராக வரும் எம். சசிக்குமார் எல்லோரும் நன்றாக செய்திருக்கிறார்கள். இயக்கம் பாலுமகேந்திரா. எளிமையும் கவித்துவமும் உணர்ச்சிபூர்வமான கதை சொல்லும் முறையும் அவரது முத்திரைகள். இந்தப் படத்திலும் தன் முத்திரையைப் பதித்திருக்கிறார். ‘தமிழ் தெரியாத புதிய தலைமுறை (பேரன்)’என ஆங்கிலத்துக்கு எதிரான பிரசாரப் படமாக்கி விடாமல்

**- ⁚.பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -**

மாற்றங்களை இயல்பாக எதிர்கொள்கிறார். தமிழ் தெரிந்த கணவனும் மனைவியும் ஆங்கிலத்தில் பேசுவதை பார்க்க வெறுப்பு ஏற்படுத்தாமல் இது யதார்த்தம் என காட்டுகிறார். பேரன், அத்தை தன் குழந்தைக்கு பால் கொடுப்பதை பார்க்கிறான். ‘என்ன இது’ என குழந்தைத்தனமாக

**தொடர்ச்சி 36 ஆம் பக்கம்**



NATWEST
CAPITAL
TIMES CHANGE. VALUES DON'T




அனைவருக்கும் எமது உளம்
கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

நீங்கள் அதிக கட்டணம்
செலுத்துகின்றீர்களா ?

எமது இலவசமும் இரகசியமானதும் உங்களுக்கும் உரியதுமான நிதிப் பகுப்பாய்வு ஆலோசனைகளை பெறத்தவறாதீர்கள்.

Take Advantage Of Our
Free Confidential
Personal Financial Consultation

- நீங்கள் 0%இல் வீடு வாங்க வேண்டுமா?
- New Comers - Bad Credit All Welcome!
- 2nd Mortgage - No job - No credit check
- வீடு Renovate செய்ய பணம் தேவையா?
- உங்களுடைய கடன் அட்டைகளை மற்றும் இதர கடன்களை முற்று முழுதாக அடைக்க வேண்டுமா?
- Commercial Mortgages also Available

**Take advantage of our Unique**
**Real Estate partners to sell your Properties**
**Fast & Easy or We buy from you.**

"விளம்பரம்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் இந்த விளம்பரத்தை கொண்டு வந்து எங்களிடம் Mortgage வசதிகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு இலவசமாக "40" TV & GPS வழங்கப்படும்.

**Contact: 416.818.7667**



Buy, Sell or Lease Real Estate
இந்தக் குருவிக்கு கூடு எவ்வளவு அவசியமோ அதேபோல எமது மக்கள் வாழ ஒரு வீடு அவசியமே.
நீங்கள் பல வீடுகளைப் பார்த்திருக்கலாம். ஆனால் நான் உங்கள் குடும்பத்திற்குப் பொருத்தமான இல்லத்தைக் காண்பிப்பேன்.
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BUSINESS FOR SALE

### KINGSTON & ST CLAIR
### ST CLAIR & VICTORIA PARK

Italian pizza Restaurant for sale. Close to all facilities.
தொடர்புகளுக்கு: ***647.449.5315***

## ROOM FOR RENT

### NEILSON & ELLESMERE

One Bedroom for rent in a main floor. Internet, kitchen. Close to Centenary hospital, food basics, University scarborough campus, 24Hrs. TTC, mall, etc.
***Contact: 647.404.2093***

## HOUSE FOR RENT

***MCCOWAN & 14TH AVE.***
3 Bedroom bungalow house for rent. 2 Bedroom bsmt. Parking, laundry. Close to TTC, YRT, school, mall, bank. Avail. immediately.
வீடு முழுமையாகவோ அல்லது அறைகள் தனித்தனியாகவோ கொடுக்கப்படும். Storage also available.
தொடர்புகளுக்கு: ***647.928.9818***

## ROOM FOR RENT

***KENNEDY & ELLESMERE***
***Rooms available. Close to Kennedy Station, TTC, school, mall. Avail. immediately.***
***3 Bedroom house also avail.***
***Contact: 416.830.5560***

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**
**Pay top dollars.**
**Contact: 416.835.3475**



# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனா பண்டித் Thulsidhar Swamiji சாஸ்திரிகள் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

* கைரேகை
* கல்வி, உத்தியோகம்
* வதிவிடப் பிரச்சினைகள்
* குடும்ப பிரச்சினைகள்
* குழந்தை பாக்கியம்
* எதிரிகள் பிரச்சினைகள்
* கர்ப்ப தோஷம்
* நாம நட்சத்திரம்
* தொழில் வியாபாரம்
* நீதிமன்ற வழக்குகள்
* திருமண யோகம்
* கணவன் மனைவி ஒற்றுமையின்மை
* சர்ப்ப தோஷம்
* கஸ்ட நஷ்டங்கள்

**பிளெக் மஜிக் 3 நாட்களுக்குள் அகற்றி பாதுகாப்பு கொடுக்கப்படும்.**

**Tel.:647.856.0559**

**GTA Square Mall (2nd Floor)**
**5215 Finch Ave. E., Unit #257**
**Scarborough ON M1S 0C2**
**(FINCH & MIDDLEFIELD)**

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# அற்புதங்கள் : அறிவியல் ரீதியில் ஒரு பார்வை

***'Every moment of light and dark is a miracle'*** - Walt Whitman.

உலகின் எல்லா பாகங்களிலும் அற்புதங்கள் ஆங்காங்கே நிகழ்வதனை பல்வேறு ஊடகங்களிலும் பார்க்கிறோம். இந்த அற்புத ஆற்றல் சிலரிடம் மட்டுமே காணப்படுகிற தென்றும் அதுவும் கடவுளின் அருட்சக்தி பெற்றும் கூறுபவர்களையும் காண்கிறோம். இது ஒரு அதியுயர் தெய்வீக சக்தி (Super natural divine) என்றே கூறவும் கேட்டிருக்கிறோம். அற்புதங்களை நிகழ்த்தும் மகான்கள், பகவான்கள், ரிஷிகள், சுவாமிகள் எங்கும் பல்லாயிரம் மக்களை கூட்டி வைத்து செய்வதனையும் காண்கிறோம்.

அற்புதங்கள் (Miracles) என்பது 'விஞ்ஞான விதிகளுக்கு முரணாக, சாதாரண நடைமுறையில் இல்லாத இயற்கைக்கு மாறான சூழ்நிலையில் நிகழ்வதாகும், 'நீரில் நடப்பேன், காற்றில் பறப்பேன், திடப்பொருளை தூரத்திலிருந்து எடுத்து அசைப்பேன், சங்கிலி, காப்புகளை அந்தரத்திலிருந்து கையால் தருவேன், விபூதியை எடுப்பேன், பல்வேறு நோய்களை உடல் ஸ்பரிசத்தால் அகற்றுவேன், உயிரோடு புதைக்கப்பட்டு மீண்டெழுவேன் என்றவாறு பல அற்புதங்களை நிகழ்த்துபவர் களின் செய்திகள் பல எங்கும் பரவி வருவனவாகும்.

இந்து சமயத்தில் நாயன்மார்கள் நிகழ்த்திய பல அற்புதங்கள் அதிக அளவில் உள்ளன. ஆறுமுகநாவலரின் திருவிளையாடற் புராணம் என்ற நூலில் நாயன்மார் செய்த பல அற்புதங்கள் உள்ளன. ஆண்பனையை பெண்பனையாக்கியமை, முதலை உண்ட சிறுவனை மீட்டமை. எலும்பு கூட்டை பெண்ணாக்கியமை. திருநீறு போட்டு சூலைநோயைத் தீர்த்தமை என்றவாறு நூற்றுக்கணக்காக உள. இதெல்லாம் கடவுள் மீது நாம் பக்தி கொள்ளவேண்டும் என்பதற்காக எழுந்த புராண கதைகள் ஆகும். ஆன்மீக வாழ்வில் வாழ்க்கையின் விலக்கப்பட முடியாத அம்சமாகவே இவ் அற்புத ஆற்றல் கருதப்படுகின்றன.

பகுத்தறிவுள்ள சமூகத்திற்கு மத்தியில் எதனையும் ஆராயமாட்டாதவர்களும் இருக்கவே செய்வர். கதைவழியாகவும், வதந்தி மூலமும் வேகமாக பரவும் சக்தி அற்புதங்களுமே உண்டு.

பல வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம், கந்தர்மடத்தடியில் 'ஒருவருடைய தென்னை மரத்தில் நடராசப் பெருமான் தோன்றியுள்ளார்' என்ற செய்தி வேகமாக பரவியது. நான் அப்போது இளைஞன். வேகமாக அந்த இடத்திற்கு சென்றேன். அந்த சிறிய தென்னை மரத்துக்கு முன்பாக அடியார் கூட்டம் கற்பூரம் கொழுத்தி, ஆனந்த பரவசத்தில் இருந்ததை கண்டேன். உண்டியல் கூட அங்கிருந்து நான் மிகவும் ஆராய்வுடன் சிறிய தென்னைமரத்தின் அடிவட்டினைப் பார்த்தேன். அதில் உள்ள அடிவட்டிலிருந்து குருத்து வெடித்து சிறிய கீற்றுகள் வெளியாக சிவன் நடனமாடுபவர் போலிருந்து தெய்வ உருவம் எதுவும் இல்லை. உளவியலில் Gestalt என்ற ஒரு தத்துவம் உள்ளது. நாம் எப்படி முழுமையாக்கி பார்க்கிறோமோ அப்படியே அதுவும் தெரியும். மறுநாள் அந்த தென்னை மரம் பட்டுபோயிற்று. நடராசப் பெருமானின் கதையும் நின்று போனது. எனது நண்பரான தாவரவியல் ஆசிரியர் அது தென்னைக்கு வரும் ஒரு நோய் என்றார்.



அண்மையில் தமிழ் நாட்டிலிருந்து 'பிள்ளையார் பால் குடிக்கிறார்' என்ற வதந்தி கனடாவுக்கும் பரவியது. சிலர் தங்களுடைய வீட்டிலும் பிள்ளையார் பால் குடிக்கிறார் என்று பெருமையுடன் கூறினர். இதனை தெரிந்து கொள்ள ஒரு ஸ்காபரோவில் உள்ள வீட்டுக்கு சென்றேன். நீண்ட வரிசை. இதனைப் பார்ப்பதற்குத்தான் இவ்வரிசை. நானும் அதில் ஒருவனாக நின்று கொண்டேன். எனது முறையும் வந்தது. கரண்டியில் பாலை எடுத்து பிள்ளையாருக்கு பருக்கினேன். சிலையின் கீழ் ஒரு தட்டு காணப்பட்டது. சிலைக்கூடாக பால் தட்டுக்குச் சென்றுவிட்டது. அதுவும் ஒரு உளவியல் தான். ஒருகண வேளையில் பிள்ளையாரைப் பற்றி யோசித்துக் கொள்பவர்களுக்கு பால்போகுமிடம் தெரியாது. ஒரு கிழமையில் அந்த சம்பவமும் நின்று போயிற்று. இப்படித்தான் பல்வேறு அற்புதங்களும் காலத்துக்கு காலம் வந்து போகின்றன.

பொதுவாக ஆன்மீக வாழ்க்கையின் விலக்கப்படமுடியாத அம்சமாகவே இவ் அற்புத நிகழ்வுகள் உள்ளன. அற்புதங்களை நடத்துவதற்கு சில சக்திகள் தேவை. முதலாவது பொருள் சக்திகள் (Meterial powers) என்பது அணுசக்தி, மின்சக்தி போன்றதே இது. உலகம் இயங்குவது இச்சக்தியால்தான். அடுத்து வருவது மனோசக்திகள் (Mental Power). மனதில் உறங்கிக் கிடக்கும் சக்திகளே மனோசக்தி களாகும். ஆன்மீக சக்திகள் (Spiritual Power) என்பது இந்து யோகா நூல்கள் கூறும் குண்டலினி சக்தியாகும். யுக சக்திகள் (Casmic power) என்பது ஆத்மா இறை சக்தி பெறுவதை குறிக்கும். இப்படியான சக்தியுள்ளவர்கள் Divine Power எனப்படும் 'தெய்வீக சக்தி'யுடையவர்களாக கருதப்படுவர். இயேநாதர், புத்தர் போன்றவர்களே இவர்கள் என கூறுவர்.

வேறுவிதமான அதீதசக்தியுள்ளவர்களும் உளர். கண்ணில்லாது பார்த்தல், காது இல்லாது கேட்டல், மந்திரங்களை கூறி விஷம் இல்லாது செய்தல், தொலையுணர்வு (Telepathy), முன்உணர்வு (Recognition), மனதினை அறிதல் (Mind Reading), ஞானக்கண்ணால் பார்த்தல் (Extra Tensory Perecption - ESP), தொடு உணர்வுத் திறமை, (Telekinesis) முக்காலமுணர்தல் (Clairaudience), வசியம் செய்தல் (Hypno), ஒருவரை நித்திரையாக்கி அறிதல் (Mesmerism), தூக்கத்திலும் விழிப்பாயிருத்தல் (Trounce), ஒருவர் பாவித்த பொருட்களை தொட்டுப்பார்த்து பலன் கூறல் (Psychokinesis), திடப் பொருட்களை ஊடுருவி செல்லல் (Penetration), உயிருள்ள உடலிலிருந்து ஆன்மா இறந்து கிடக்கின்ற ஒருவரின் உடலில் புகுந்து உயிர் பெறுதல் (கூடுவிட்டு கூடு பாய்தல்), பொருட்களை எடுத்து கொடுத்தல், மனோசக்தியால் நோய்களை குணமாக்குதல் (Metalation), வடிவங்களை மாற்றுதல் இப்படி பலவேறு அற்புதங்களை பற்றி அறிந்துள்ளோம். கடவுளர்கள், மகான்கள், யோகிகள், ஞானிகள், ரிஷிகள், தவசிகள், முனிவர்கள், ஆன்மீகவாதிகள், நாயன்மார்கள் அனைவரும் அற்புதங்களை நிகழ்த்தியதாக வரலாறுகள் உள. இந்து மதம் மட்டுமல்ல இஸ்லாமிய, பௌத்த மதங்கள் இவற்றினை நம்புகின்றன.

இயேசு கிறிஸ்து பல அற்புதங்களை செய்தார். தீராத நோய்களைத் தீர்த்தார். இறந்தவரை உயிர்தெழச் செய்தார். குருடர்களுக்கு பார்வை கொடுத்தார். முடவர்களை நடக்கச் செய்தார். தமது அற்புத சக்தியால் சிறிய உணவை பெருக்கி ஆயிரக்கணக்கானவர்களுக்கு உணவு வழங்கினார். யூதமத தலைவனான மோசஸ் நச்சுவாயுவை இறக்கி பலரை காத்தார். கடலை பிளந்து வழியை உண்டாக்கினார். இப்படி பல அற்புதங்களை செய்தார் என்பர்.

இஸ்லாமிய மதத்திலும் முகமது நபியும் பல அற்புதங்களை செய்துள்ளதாக கருதப்படு கிறது. இறந்த ஆட்டை உயிர்ப்பித்தார். ஆட்காட்டி விரலிலிருந்து நீர் பெற்று பலருக்கு உதவினார் என்று கூறப்படுகிறது. புத்தரும் பல அற்புதங்களை செய்ததாக கருதப்படுகிறது. தனது மரணத்தினை முன் அறிந்திருந்தார். தூரக் காட்சியினை கூறினார். பல சித்துகளை செய்தார் என்பர். புத்தர் தன்னை ஒரு மனிதன் என்றே கூறியுள்ளார். அவ்வாறாயின் இப்படி கதை கள் எப்படி வந்தன என்பது புரியவில்லை.

இந்து மதமே இவ் அற்புத நிகழ்வுகளின் பல்வேறு தன்மைகளை கூறியுள்ளது. வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் பல அற்புத நிகழ்வுகளை கூறியுள்ளன. இந்து மதத்தினை கடைப்பிடித்த ஞானிகள், யோகிகள், துறவிகள், முனிவர்கள் பல அற்புதங்களை செய்தனர் எனவும் கூறப்படுகிறது. இராமாயணத்திலும் பல அற்புத சம்பவங்கள் உள. குறிப்பாக அனுமார் எட்டுவகையான சித்திகளை உடையவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. மகாபாரதத்திலும் பல அற்புதநிகழ்வுகள் உள. குறிப்பாக துகில் உரியப்பட்ட பாஞ்சாலிக்கு கண்ணன் அருளால் துகில் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது. இப்படி பல அற்புத நிகழ்வுகள் உள.

இராமானுஜர் ஒரு வைணவ சமயத்தவர். இவர் மக்களின் நோய்களை குணப்படுத்தியவர். ஸ்ரீதேசிகர் நச்சுப் பாம்பை அடக்கியவர். சீரடி சாயிபாபா, அருணகிரிநாதர், நித்தியானந்த பாபா, விவேகானந்தர், ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள், ராமலிங்க அடிகள், புட்டப்பர்த்தி சாயிபாபா, ஸ்ரீ சங்கரர், திரைலிங்க சுவாமிகள், ஞானேஸ்வரர், கபிர்தாசர் போன்ற பலர் ஆன்மீக வாழ்க்கையை மேற்கொண்டு யோகிகளாகவும், ஞானிகளாகவும், துறவி களாகவும் விளங்கி பல்வேறு அற்புதங்களை செய்துள்ளதாக வரலாறுகள் உள்ளன. இவ் அற்புதங்கள் பரம்பரை பரம்பரையாக



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

**LAW OFFICE**
**STEFANO FORTINI**
B.A., LL.B., Barrister & Solicitor
*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*
*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# அனைவருக்கும் உளம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# 2014

## நிரு பிரான்ட்






Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிரான்ட்

# தங்கமீன்கள்

குளத்தில் வசிக்கும் என நம்பும் தங்கமீன்களை காண கதையின் கதாநாயகியான சிறுமிக்கு ஒரு ஆசை. அது ஆழமான குளம் என்பதால் சிறுமியின் தந்தை அவளை தண்ணீருக்குள் போக அனுமதிப்பதில்லை. இதே நேரம் கதாநாயகியின் பெற்றோர் இருவரும் படிக்காதவர்கள். அவர்கள் தந்தையின் பெற்றோரின் வீட்டில் வாழ்ந்து வந்தாலும், மகளது படிப்பிற்கு காசு சேர்க்க கஷ்டப்படுகிறார்கள்.

கதாநாயகி மிக சுறுசுறுப்பானவர். அவளுக்கு மிருகங்களிலும், இயற்கையிலும் அதிக விருப்பம். படிப்பில் ஆர்வம் குறைவு. இதனால் அவள் பள்ளிக்கூடத்தில் பல கஷ்டங்களை அனுபவிக்கிறாள். ஆசிரியர்களிடமிருந்து பல தடவை பேச்சு வேண்டுகிறாள். மற்ற மாணவர்களிடமிருந்தும் கஷ்டம் ஏற்படுகிறது.



கடைசியில் வகுப்பு பரீட்சை காலம் வரும்போது கதாநாயகிக்கு 'vodafone' விளம்பர நாய் ஒன்றின் மீது ஆசை வருகிறது. அதை அப்பாவிடம் தெரிவிக்க நாய் வாங்க அப்பா செல்கிறார். ஆனால் அது வாங்க அவரிடம் பணமில்லை. இதை அறியாது சிறுமியும் தன் பிறந்தநாளிற்கு முன் நாய் கிடைக்காவிட்டால் தான் 'குளத்தில் இறங்கி தங்கமீன் ஆகி விடுவேன்' என சிநேகிதியிடம் கூறுகிறாள்.

தந்தை நாயை வாங்குகிறாரா என்று படத்தை பார்த்து நீங்கள் அறிய வேண்டும். ஏன் என்றால் இப்போது படத்தின் கருத்தை பார்ப்போம். இப்படத்தின் முக்கியமான கருத்து, ஒருவரை ஒருவர் நன்றாக புரியாது முடிவு எடுப்பது தவறு என்பதே. கதாநாயகியின் விருப்பங்களை அவளின் தாயோ, பாட்டியோ, பள்ளி ஆசிரியரோ, மற்ற மாணவர்களோ புரியவில்லை. அதனால் பல தடவை அவர்கள் தவறாக முடிவு எடுக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் மீது முழுக் குற்றம் கூற முடியாது. அவர்கள் அவளைப்பற்றி அறிய போதிய அறிவு இல்லாத படியால் தான் இவ்வாறு நடக்கிறார்கள் எனலாம். அவளது தந்தை போதிய படிப்பறிவு இல்லாமலும், அருகில் இல்லாவிட்டாலும், மகளிடம் பேசியே அவளது கருத்துக்களை தெரிந்து கொள்கிறார். கடைசியில் அவள் வரையும் படங்களை வைத்து அவர் அவளது யோசனைகளை உணருகிறார்.

இப்படத்தின் முக்கியமான இன்னொரு கருத்து ஆசிரியர்களைப் பற்றியதாகும். இப்படத்தில் இரு ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள். முதலாமவர் கதாநாயகியை பயமுறுத்துகிறார். கதாநாயகிக்கு பாடம் புரியாவிட்டால் அவளை ஏசி விடுகிறார். மற்ற மாணவர்களையும் அவளை கேலி செய்ய ஊக்குவிக்கிறார். இது மிகத் தவறான முறை.

மற்ற ஆசிரியர் கதா நாயகிக்கு மிகவும் பிடித்த ஆசிரியர். ஏன் என்றால் அவர் ஒருநாளும் அவளிடம் கடுமையாக பேசவில்லை. கடைசியில் அந்த ஆசிரியரினால் தான் கதாநாயகியும் நன்றாகப் படித்து முதல் மாணவராக வருகிறார். இப்படம் Toronto பல்கலைக் கழக அறிக்கை ஒன்றின் பின்வரும் வசனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

***All students can achieve high standards given significant time and support.***



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# ஐயகோ அம்மா! இவன் செய்வதைப் பாருங்கள்
# பருவப் பரிதவிப்பும் காதல் மலர்ச்சியும்

தமிழர் வாழ்வியலில் காதலைப் பற்றிப் பேசும் இலக்கியம் அதிகம். குதூகலிக்கத்தெரியாதவன் மனிதனே இல்லை என்பது சிலரின் கருத்து. பருவகாலத்தில் ஆண், பெண் இருபாலாருக்குமிடையே மலர்வது காதல் என கருதப்படுகின்றது. இது சங்க இலக்கிய காலத்திலிருந்தே தமிழர்களிடம் காணப்படும் ஒரு இன்பநிலையாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. திருமணப் பேச்சு என்றாலே மணப் பெண்ணைப் பார்த்துவிடவேண்டும் என்னும் துடிப்பு காளையர் உள்ளத்தில் உதித்துவிடும். அது இன்று நேற்றல்ல பன்னெடுங்காலமாகப் பயின்று வரும் பண்பும் வழக்குமாகும். இன்று பெண்ணைத் தொலைபேசியில் அழைத்து சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கின்றனர். ஆனால் அன்று தொலைபேசியும் இல்லைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்காது. பெரும்பாலும் அது மறுக்கப்பட்டுத்தான் வந்துள்ளது. எப்படியாவது எனக்கு வரப்போகும் துணைவி நல்லாளா? அல்லது அழகியா எனக்கு ஏற்றவளா? என்று நேரடியாகப் பார்த்து தீர்மானித்துக் கொள்ள விளைவது

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

மனித இயல்பு. ஏதோ ஒரு சாட்டுப்போக்குக் கூறி எப்படியாவது கண்டுவிட வேண்டும், பார்க்கவேண்டும் எனத்துடி துடிக்கும் இளையரின் உள்ளம். திருவிழா அல்லது திருமணம் போன்ற நிகழ்வுகளில் அந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள முனைவது ஒரு புறம். அல்லது ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தை வலிந்து ஏற்படுத்திக்கொண்டு அவர்களின் வீட்டிற்கே சென்ற பார்ப்பது இன்னொரு வகை. இந்த நிலைமைகள் சங்ககாலத்திலும் இருந்திருக்கின்றது என்பதனை குறிஞ்சிக்கலி என்னும் பகுதியில் எட்டுத்தொகை நூலான கலித்தொகையில் உள்ள கபிலரின் செய்யுள் எடுத்துக்காட்டுகின்றது. அச்சத்தால் வெகுண்ட தலைமகள் தாயை அலறி அழைக்கின்றாள். பின்னர் தன்னைத்



தொட்டவன் தன் காதலன்தான் என்பதனைச் சுதாகரித்துக்கொண்டு சமர்த்தியமாக அவனைக் காட்டிக்கொடுக்காது அழைத்த தாய்க்கு ஏதோ சாக்குப்போக்குச் சொல்லி தன் காதலைத் தெரியத்தரும் அருமையான பாடலாக அமைந்துள்ளது. இப்பாடல்:

சுடர்த் தொடா இ! கேளாய் தெருவில் நாம் ஆடும்
மணல் சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டு ஓடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர் நாள்
அன்னையும் யானும் இருந்தோமா..இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்கு, அன்னை,
அடர்பொற் சிரகத்தால் வாக்கி, சுடரிழாய்!
"உண்ணுநீர் ஊட்டிவா" என்றாள் என யானும்
தன்னை அறியாது சென்றேன் மற்று என்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு,
அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண் என்றேனா,
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னையும்
தன்னைப் பறம்பு அழித்து நீவ மற்று என்னைக்

கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகைக்கூட்டம் செய்தான் அக் கள்வன் மகன்.

தனது தோழிக்கு நடந்தவற்றைச் சொல்கின்றாள். அன்புத்தோழியே என்னோடு குழந்தைப் பருவம் தொடக்கம் பழகி வந்தவன் என் காதலன். அவன் நீண்டநாட்களாக என்னைக் காணவில்லை. பருவமடைந்த என்னைக்காண அவன் விழைந்து எங்கே பார்ப்பது என நினைந்து நாம் முன்னர் தான்சந்திக்கும் இடத்திற்குப் போகின்றான். அங்கு அவளைக் காணவில்லை. என்ன செய்யலாம் எனச் சற்று சிந்திக்கின்றான். எப்படியாவது அவளைப் பார்க்கவேண்டும். எனது காதலைச் சொல்லவேண்டும் என்பதனை உறுதிப்படுத்திக்கொண்டு நேரடியாக அவளது வீட்டிற்கே செல்கின்றான். அங்கு முன்றலில் தன் காதலி அவளது தாயோடு இப்பதைக் கண்டு சற்று சங்கோசமடைகின்றான் எனினும் பறவாயில்லை நடந்த களைக்கு தண்ணீர் கேட்பதற்காகச் செல்லவதுபோன்று அங்கு செல்கின்றான் தயங்கித்தயங்கி பருக சற்ற நீர் கிடைக்குமா எனக் கேட்கின்றார். மகளிடம் நீர் பெய்து தரும்படி கூறிவிட்டுத் தாய் உள்ளே சென்றுவிடுகின்றாள். நீரைக் கெண்டுவந்து நீட்டியவளின் கையைப் பற்றிவிடுகின்றான் காளை. சற்றும் எதிர்பாராத நிலையில் வெலவெலத்துப்போன அவளோ அம்மா, இவன் செய்வதைப் பாருங்கள் என அலறுகின்றாள். தாய் ஓடிப் பதைத்து என்ன நடந்தது என வருகின்றாள். அதற்குள் தன்னைச் சுதாகரித்துக்கொண்ட அவள் இல்லை அவருக்கு நீர் விக்கிவிட்டது என்று ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துக்கொண்டே சொல்கின்றாள். தாயோ அவனின் முதுகைத் தட்டிக்கொடுத்து தடவிவிட்டு உள்ளே செல்கின்றாள். அவனோ தனது காதல் பார்வையால் நன்றி தெரிவிக்கின்றான். அதனைத் தோழிக்கு கடைக்கண்ணால் என்னைக் கொல்பவன் போலப் பார்த்து சிரித்தான் என்று குறிப்பிட்டுத் தம்மிடம் மலர்ந்த காதலை வெளிப்படுத்துகின்றாள். கபிலரின் கற்பனை வளமும், காதல் இன்பமும் இணைந்து அழகியலாக உருவெடுத்துள்ளது. மிக நுட்பமாகக் காதலைக் காட்டும் பக்குவத்தை எடுத்துக் கையாண்டுள்ளமை சங்க இலக்கியத்தின் சிறப்புக்களில் ஒன்று.

## Education

### Review Tutorials 14 -1

**CHEMISTRY IB/12**

(1)(i) The data below shows the results of three experiments carried out to find out the rates of the following reaction. 2 NO (g) + $Cl_2$ (g) → 2NOCl(g)

| Expt | initial con (mol/L) [NO] | [$Cl_2$] | Initial rate of Reaction,(mol/L.s) |
|---|---|---|---|
| 1 | 0.02 | 0.04 | $3.10 \times 10^{-5}$ |
| 2 | 0.02 | 0.08 | $6.10 \times 10^{-5}$ |
| 3 | 0.04 | 0.12 | $3.61 \times 10^{-4}$ |

Rate = k $[NO]^x [Cl_2]^y$

(a) Determine $x$ and y , and write the rate law equation for the reaction.

(b) Calculate the value of the rate constant, with the appropriate units.

(ii) Determine the standard enthalpy change for the following reaction.

2 NO (g) + $Cl_2$ (g) → 2NOCl(g) ΔH

Heat of formation of NO and NOCl are 90.25KJ/mol and 51.71kJ/mol respectively.

(iii) The standard entropy values, $S$, at 298 K for NO(g), $Cl_2$ (g) and NOCl(g) are 210.8J/mol K, 223.1J/mol K and 261.7J/mol K respectively.

Calculate $\Delta S^{O}$ for the reaction and with reference to the equation above, explain the sign of $\Delta S^{O}$

(iv) Describe and explain the effect of increasing temperature on the spontaneity of the reaction.

**BIOLOGY Gr12:** Describe the cyclic and non-cyclic photophosporilation and its importance in carbon fixation

**PHYSICS 11**

A piano note, $A_2$ has to be tuned to its proper frequency 110Hz. If you have a tuning fork whose frequency is 220Hz, how should you do the adjustment?

**PHYSICS 12**

A thin film coated on one side of a glass lens to reduce reflection from lens surface. Determine the minimum thickness of the coating that eliminates the reflection. Assume the index of refraction of the coating material 1.32, and glass 1.5., wavelength of light =550nm, light approximately perpendicular to the lens surface.

**ADV. FUNCTIONS**

$\log_a x = 3$ and $\log_a y = -2$, determine $\log_a(\frac{x^2}{y^3})$

### Answer Key : 13-23

**MATH (GR 11).**

$P(t) = -25t^2 + 250t - 400$

Solve for t when P(t) = 0; -25 ( $t$- 8) ( $t$- 2) =0

$t$ = 8 or 2; least number of toy-cars that should be sold to breakeven is 20,000 '

**CHEMISTRY ( 12 & IB)**

[ Ag+] [Cl-] = $1x \ 10^{-10}$

When AgCl start precipitating the [ $Ag^+$] = ($1x \ 10^{-10}$) / 0.1

[ $Ag^+$] = ($1x \ 10^{-9}$)

[$I^-$] = Ksp / ($1x \ 10^{-9}$) = ($8.3 \ x \ 10^{-17}$)/ ($1x \ 10^{-9}$) = $8.3x \ 10^{-8}$)

**CHEMISTRY (Gr 11)**

Al(s) + 3 HCl(aq)→ $AlCl_3$ + 3 $H_2$ (g)

Number moles of Al = 1.35/ 27 = 0.05 (Al= 27 g/mol)

Number of moles of $H_2$ (g) = 3x0.05 = 0.15 mol

P= (755- 31.2) mmHg = 723.8mmHg = 0.9824 kPa.

T = (273.15 + 30) = 303.15 K

PV = nRT ; V= 385 L

**PHYSICS (Gr 11)**

In transformers P incoming = P outgoing

since $P = VI$; $Vp \ Ip = Vs \ Is$

if $V$ goes up then I goes down; Power loss , P= $I^2$ R

by increasing the voltage power loss can be reduced.

**(ii)** This is possible, If the internal resistance of the battery is comparable to the lamp resistance.

**IB & 11 Biology**

(A)The stroke volume (volume of blood in a single cardiac cycle) increases when the physical fitness increases. Therefore, with the lower heart rate (no cycles/ minute) heart can deliver the required amount of to tissues.

(B) During exercise body requires more supply of oxygen. This will lead to increases breathing rate and, heart rate and metabolism to speed up.

**BIOLOGY (Gr12)**

Both the 5' and 3' ends are covalently modified during the mRNA synthesis before the mRNA exits the nucleus.

5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail,

(Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.

These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

*Answer key 14- 1 - next issue*

**Contact: 647 341 3975**

**ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# அற்புதங்கள்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

கூறப்பட்டு வருகின்றன.

மேற்கத்தைய நாடுகளிலும் இவ்வகை அற்புதங்களுக்கு குறைவில்லை. இலண்டன் நகரைச் சேர்ந்த யூறிகெல்லா என்பவர் இன்னொருவர் வரைந்த படத்தினை பார்க்காமல் தான் வரைந்து காட்டினார் என்றும், இவர் செய்த பல அற்புதங்கள் ஒரு மெஜிக் (Magic) என்று பின்பு கருதப்பட்டது. மோசஸ், Wolf Messing, Elijah, Nathan Adler, Audry, இமானுவல், யோசப் பாதிரியார், ரஷ்புடின், ஜின் டெக்சன், ஜோசப் லுயிஸ், இங்கோஸ்வரன், Paul Golding, கேசி, மெஸ்மர் போன்ற பலர் பல்வேறு அற்புதங்களை செய்துள்ளனர். இவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் அனைத்தும் மெய் என்றோ பொய் என்றோ கூறமுடியாதுள்ளது. இவை சுயசரிதைகள், சில மந்திர காட்சிகள் என்று கூறுவோரும் உளர். விஞ்ஞான ரீதியில் அப்படி செய்ய முடியாது என்போரும் உளர். அற்புதங்கள் செய்தோர் அனைவரும் ஆண்களாக இருந்ததுடன் ஒரு நோய்க்கு மருந்தினை கண்டு பிடித்து கூறவில்லை. அதிசய கருவிகளை கண்டுபிடித்ததாகவோ வரலாறு இல்லை. எல்லா அற்புதங்களை செய்தவர்கள் தெய்வீக சக்தி அல்லது இறைசக்தி தங்களிடம் உள்ளதாகவே கூறியுள்ளனர். இவ்வாறு அற்புதங்கள் செய்த பலரது வாழ்வு இறுதிக் காலத்தில் சிறைத்தண்டனை விதிக்கப்படல், கொலைக்கு உட்படுதல், பண கஷ்டத்தினை அனுபவித்தல் மூலம் சீரும் சிறப்புடன் வாழ்ந்தாகவும், வரலாறு இல்லை.

அற்புதங்கள் பற்றி பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. Edbert Hybard என்பவர் ஒரு எழுத்தாளர். நூற்பிரசுரம் செய்பவர். ஓவிய நிபுணர், தத்துவ ஞானி 'அதிகமாக அற்புதங்களை பார்க்காதவர்களே அதைப்பற்றி கூடுதலாக கூறிவருகின்றனர்' என்றார். (A miracle is an event described by those to whom it was to told by people did not see it). அதேபோன்று Ethene Allan என்பவர் 'விஞ்ஞானம் வளர வளர அற்புதங்களும் மறைந்து போகும். எனினும் பழைய கால புதுமைகள் அல்லது அற்புதங்கள் தொடர்ந்து நிலைத்து வாழும்' என்கிறார். Sorerkierkegaard என்பவர் 'மில்லியன் மக்களில் ஒருவரே இப்படி அற்புதத்தை செய்வதாக' கூறுகின்றார்.

அற்புதங்கள் பலவற்றிலும் சில கேள்விகள் எழுகின்றன. குறிப்பாக எல்லா அற்புதங்களையும் ஆண்கள் மட்டுமே செய்துள்ளனர். சில அற்புதம் செய்தவர்கள் உங்களுக்கு இச்சக்தி எப்படி வந்தது என்பதற்கு பதிலாக வான் வெளியிலிருந்து சக்தி (Cosmic power) கிடைத்தது என்கின்றனர். பெரும்பாலோர் தங்களது இறை சக்தியால் இப்படி செய்ய முடிந்துள்ளது என கூறுகின்றனர். ஆனால் விஞ்ஞான ரீதியில் ஒரு பொருளை இவர்களால் உண்டாக்க முடியாது வேறு ஓரிடத்திலிருந்து எடுத்து வரவே முடியும் என்கின்றனர். ஆவிகள் மூலமாகவே இதனை செய்வதாக சிலர் கூறியுள்ளனர். எனவே, மனோசக்தி, ஆத்ம சக்தி, தெய்வீக சக்தி என்பவற்றாலேயே இதுபலனாகும். எனவே பலரை தம்வழியில் ஈர்ப்பதற்காக செய்யும் அற்புதங்களா இவை எனவும் சந்தேகம் எழலாம். பொதுவாக எந்த செயலுக்கும் விஞ்ஞான விளக்கம் தேவையாக உள்ளது. அது இல்லாமல் கர்ணபரம்பரைக் கதைகளாகவே அற்புதங்களும் உள்ளன.

மேடைகளில் கண்கட்டு வித்தை (magic) நிகழ்வுகள் பலவற்றினை பார்த்திருப்போம். கதிரையை அந்தரத்தில் தூக்குவார்கள், வெற்று

தொடர்ச்சி 36ஆம் பக்கம்



**PARTY HALL**
**EVENT CENTRE**
**MEETING PLACE**

**AVAILABLE FOR RENT**

**Starting from $100.00**

**Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. **GTA Square Mall (FINCH & MIDDLEFIELD)** தொடர்புகளுக்கு: 416.917.6883

# பூரித்த தமிழகத்தில் பொலிவுற்ற தனி நாயகம் *(B)*

53

என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம் பெறப்பிரார்த்திக்கிறேன். சென்னையில் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு உலகம் எங்கணும் வாழ்ந்த தமிழர் எல்லோருக்கும் புத்துணர்ச்சியையும், புதுத்தெம்பையும் கொடுத்தது. 1968ஆம் ஆண்டு தமிழகத்தில் எழுந்த தமிழ் உணர்வின் எழுச்சியானது தமிழ் இயலை, தமிழ் வாழ்வை, தமிழ் அனுபவங்களை தமிழ் இலக்கியங்களில் படித்து பிற்காலத்தின் சந்ததியினருக்கு பாரம்பரியப் பண்புகளையும் பழக்கங்களையும் படிமான மாக்க வேண்டும் என்ற உந்துதலைக் கொடுத்ததை எண்ணிப் பூரிப்படைவதோடு, இப்படிப்பட்ட மாநாட்டை வருடாவருடம் தமிழின் உண்மைகளையும், உச்சங்களை யும் ஏனைய மொழிகளோடு ஒப்பிட்டும், ஏனைய மொழியாளர்களுடன் பகிர்ந்தும் உலக இனங்களுக்கு தமிழ் இனத்தின் தேடல்களையும் தேட்டங்களையும் பரந்து விரிந்த மனப்பான்மைகளையும் வெளிக் காட்ட வேண்டும் என்று எண்ணியும், இது குறித்து தவம் இருந்தும் 'உற்றநோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்று திருக்குறள் காட்டியபடி தனக்கு வந்த துன்பங்களைச் சகித்தும், பிறருக்கு துன்பம் செய்யாமலும், கருமமே கண்ணாக இருந்து உழைத்த தமிழ் தூது தனிநாயக அடிகளாரை அவருடைய நூற்றாண்டு தினத்தில் மட்டுமல்ல, தமிழர் உலகில் உள்ளவரை நினைவுகூருதலும், மதிப்பளித்தலும் தலையாய கடமை. நண்பா!

சென்னையில் மாநாடு தொடங்கி மூன்று நாட்கள் சென்றும் தனிநாயக அடிகளாரை அன்றைய தமிழக அரசு கண்டு கொள்ளவில்லை. அவரைப் புறக் கணித்ததா? ஒதுக்கியதா? என்ன நடந்தது? என்று முன்னைய கடிதத்தில் எழுதியிருந்தேன். விடயம் விளங்கிய நீ சும்மாயிருந்திருப்பாய். மற்றைய நண்பர்கள் திகைத்திருப்பார்கள். திணறியிருப்பார்கள், நடந்ததை அறியத் துடித்திருப்பார்கள். இதுதான் தொப்புள் கொடி உறவின் துடிப்பென்பது. இந்த இடத்திலே நீ எனக்கு அடிக்கடி நினைவுபடுத்தும் தன்நிலை விளக்கம் என்ற விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. இரண்டாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடந்த 1968ஆம் ஆண்டு நான் சிதம்பரத்தில் படிப்பை முடித்து விட்டு சென்னையில் உள்ள குன்றக்குடி அடிகளாரின் திருமடத்தில் தங்கியிருந்தேன். அத்திருமடமே இன்று கற்பகம் என்ற பெயருடன் உணவு உறைவிடவசதிகள் கொண்ட விடுதியாக மயிலாப்பூர் கற்பகவல்லி தேவஸ்தானத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கிறது. இந்த அமைவிடத்தில் அன்று என்னோடு காரை நகரைச் சேர்ந்த 'தமிழ் உலகம்' என்ற இதழை நடத்திய நண்பர் நடராசாவும், எழுத்தாளர் சங்கரும் இன்றைய கலாநிதி மே. து. இராதாகுமாரும் தங்கியிருந்தனர். தமிழ் நாட்டு நண்பரும் என்னுடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கீழ்த்திசை நாடுகளின் மொழிகளைக் கற்றவருமான (The studies of oriental language) மேட்டூர் இராசுகுமார் இன்று சென்னையில் செம்மொழி ஆய்வு மையத்தின் பொறுப்பாளராயும் பணிப்பாளரா யும் விளங்குகிறார். பெரியம்மா மகன் கனடாவில் இருக்கும் பேராசிரியர் அ. சண்முகதாசையும் அவர் மனைவி முனைவர் மனோன்மணி அவர்களையும் அழைத்து ஓர் ஆய்வு அரங்கம் நடத்தி மதிப்பளித்திருக் கிறார். நிற்க, தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அனுசரணை யோடு நாங்கள் நால்வரும் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வரங்க நிகழ்ச்சி களிலும் பூம்புகார் திடல் பொது மேடை நிகழ்ச்சிகளிலும் முன்வரிசையில் இருந்தும், நின்றும் மாநாட்டினை மனங்குளிர அவதானிக்க முடிந்தது. மாநாடு தொடங்குவதற்கு முதல் நாளே தனிநாயக அடிகள் சென்னைக்கு வந்து விட்டார். மாநாட்டுக்கு கோலம் பூண்டிருந்த சென்னை மாநகரம் மக்கள் வெள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்தது. எல்லா விடுதிகளிலும், மனைகளிலும், மாளிகை களிலும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இயல்பான இயங்கியல் கூட்டத்தையே கட்டுப்படுத்த முடியாத நெருக்குவாரம். சனநெரிசல் கும்பகோண மாமங்கத்தையே விழுங்கி ஏப்பம் விட்டது. புதிதாக அரசு அமைத்த அறிஞர் அண்ணாவும் அமைச்சர்களும் திணறி திண்டாடிச் சில ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தனர்.

ஆய்வு அறிஞர்கள் கூட்டம் அதிகமானதால் குப்பை மேடாகக் கிடந்த தீவுத் திடலைத் துப்பரவு செய்து பூம்புகார் திடல் என்று பெயர் சூட்டினார்கள். நண்பா! இந்தப் பூம்புகார் திடலிலேதான்



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



# அற்புதங்கள்...

34ஆம் பக்கத்தொடர்ச்சி

பெட்டிக்குள் இருந்து முயல்களை எடுப்பார்கள், ஒருவரை பெட்டியில் இருத்தி ஈட்டிகளை சொருகுவார்கள். இப்படி பல... அவரால் செய்யப்படும். பார்வையாளர்களின் கண்களே இதனை நம்பிவிடும். காட்சி முடிந்ததும் இதே பொருட்களை எடுத்து கொண்டு அடுத்த காட்சிக்கு செல்வார்கள். இப்படி நூறு இடங்களுக்கும் செல்வார்கள். அதே இரண்டு முயல்களுடன் தான் அவரது வாழ்வு நடக்கும். இது மெஜிக் என்றும் ஒரு கண்கட்டு காட்சிதான்.



அற்புத ஆற்றல்கள், அற்புத செயல்கள் அனைத்தும் கண்கட்டுவித்தை என்றாலும் நம்பவே மாட்டாதவர்கள் பலர். பெரும்பாலானவர்களது மனமே பலவீனம் தான். இந்த வகையை சார்ந்தவர்களை திருத்தவே முடியாது. அத்துடன் ஆச்சரியம் அற்புதம் என்பவற்றினை வாழ்நாள் முழுவதும் கொண்டு செல்வார்கள். சோக்கிரட்டீஸ் எதனையும் ஏன் எதற்காக எப்படி நடக்கிறது என்று கூறினாலும் அவற்றை அறிந்து கொள்ள முடியாமல் தொடர்கின்ற சமூகங்களில் அற்புதங்களும் வாழ்ந்து கொண்டேயிருக்கிறது.

அண்மைக்காலங்களில் அற்புத ஆற்றல் படைத்தவர்கள் குறைவாகவேயுள்ளனர். இந்து சமயத்தில் உள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களின் பின்னர் எவரும் இடம் பெறவில்லை. அவர்கள் வாழ்ந்த காலத்தில் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் காலங்களில் அவர்கள் எழுதிய தேவாரங்கள் போன்று எவராலும் எழுத முடியவில்லை எனபதே ஒரு முக்கிய விடயம் தான். இந்திய நாட்டில் பல அற்புத சித்திகள் யோகிகள், ஞானிகள், துறவிகள், முனிவர்கள், ரிஷிகள் செய்த அற்புதங்களும் இறைசேவையும் அளப்பரியன. அவர்கள் வாழ்ந்த கால மக்களுக்குள் அதீத சக்தி படைத்தவர்களாக இவர்கள் இருந்திருக்க கூடும்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சியால் புறச்சக்திகளையே (Physical power and material power) மக்கள் பயன்படுத்து கின்றனர். 19ஆம் நூற்றாண்டுவரை மிக அதிக தொகையாக அற்புத சக்தியாளர் இருந்தமை பற்றி வரலாறு கூறுகிறது. முன்பு மாயம், மந்திரம், வசியம் மூலம் எதனையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. தற்போது அற்புத ஆற்றல் என்பது பகுத்தறிவு வாதத்திற்கும், விஞ்ஞானத்துக்கும் அப்பாற்பட்டதாகவே உள்ளது. பிரபஞ்சப் படைப்பு இயல்பானது. உயிரினங்களும் தாமாகவே தோன்றின. கூர்ப்பு மூலம் உயிரினம் வளர்ச்சி யடைந்தது. எல்லாவித அற்புத செயல்களுக்கும் மறுப்புகள் தோன்றின என்பது தெளிவாயிற்று. எந்த ஒரு மக்களிடையேயும் அதீத நுண்மதி படைத்தவர் இருக்கலாமேயொழிய அற்புத ஆற்றல் தம்மிடம் உள்ளதென்பதனை அறிவியல் உலகு ஏற்றதில்லை.

# சார்பியல்

23ஆம் பக்கத்தொடர்ச்சி

அம்மான் விளக்கை எற்றியதும்,

வெள்ளையனும் கறுப்பனும் மெதுமெதுவாய் வீதியில் ஏறி, மெதுவாக ஒரே தாள லயத்தில் நடைபோடத் தொடங்கின. வண்டிலின் நகர்வுக்கு ஏற்ப, விளக்கும் குலுங்கிக் குலுங்கி ஆடியது.

செல்லாச்சி வளவுக்குள் திரும்ப, "நீ உள்ளை போ, நல்லாம்பி முடக்கு வரைக்கும் வண்டில் போறதைப் பாத்திட்டு வாறேன்" செல்லாச்சி மாமி உள்ளே செல்லவில்லை. கணவனுடன் நின்று கொண்டாள்.

இருவருக்கும் மனதுக்குள் உறுத்தல். என்னவோ நடக்கப் போகுது.

நல்லாம்பி முடக்கில் வண்டி திரும்பியதை விளக்கு வெளிச்சம் காட்ட, இருவரும் வீட்டுக்குள் வந்தார்கள். காசியம்மானின் பேச்சைக் கேட்டிருந்தால், ஒருவேளை கந்தசாமியிற்கு நன்றாக இருந்திருக்குமோ!

(இன்னமும் வரும்.)

# புற்றுநோய்...

25ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பவற்றை நோக்கி எந்தவகையான புற்றுநோய் என்பதைக் கணித்து ஏற்பட்ட புற்றுநோயை குணப்படுத்த முடியுமா? கட்டுப்படுத்தலாமா? என்பது தெரியவரும். புற்றுநோய் திசுக்கள் முற்று முழுதாக அழிக்கப்பட்டால் சுகம் பெற்று வாழமுடியும் எனக் கூறப்படுகின்றது.

பொதுவாகப் புற்றுநோய் ஏற்பட்ட இடத்தை அறுவைச் சிகிச்சை செய்து அகற்ற வேண்டும். பின் அதற்குரிய மருத்துவ சிகிச்சை செய்வார்கள். இரத்தப் புற்று நோய்க்கு ஃபோன்மறோ (Bone marrow) மாற்றுச்சிகிச்சை செய்வார்கள். இப்படி பல மருத்துவ சிகிச்சைகள் உண்டு. (Bone marrow transplantation)

குழந்தைகளுத் தாய் பால் கொடுத்தால் என்ன? கொடுக்காது விட்டால் என்ன? மார்புப் புற்று நோய் வராது எனக் கூறமுடியாது. மேலும் அதிக எடை, இரத்த அழுத்தம், நீரிழிவு, கொழுப்புச்சத்து உணவு, சிலவகை மாத்திரைகள் பாவித்தல், குடும்பத்தில் தாய், தங்கை போன்றவர்களுக்கு மலட்டுத் தன்மை இருந்தால் வரலாம் எனக் கூறியபோதிலும் நிச்சயமாக வராது எனக் கூற முடியாது எனவும் அறியப்படுகின்றது.

பெண்களைப் பொறுத்தமட்டில் தங்கள் மார்பகங்களை தாங்களே பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். ஏதும் இயற்கைக்கு மாறாக மாற்றம் இருப்பின் தங்கள் மருத்துவரிடம் தொடர்பு கொண்டு சிகிச்சை செய்வதுடன் தகுந்த ஆலோசனைகளையும் பெறமுடியும். எனவே தாங்கள் ஒருகண்ணாடி முன் நின்று தங்கள் மார்பகத்தை நன்கு கவனிக்கும் போது அளவு, தோற்றம், தோல் மாற்றம், நிறம், புண், கட்டி, நரம்புகள் உள்நோக்கல், முலை உள்தள்ளல், இரத்தக் கசிவு போன்றவை இருப்பின் மேலும் தொட்டுப் பார்க்க வேண்டும். சில முடிச்சுக்கள், நீர் கட்டிகள், தோல் பகுதியில் கீறல், புண்நிலை இருப்பின் தாமதியாமல் தங்கள் மருத்துவரிடம் சென்று யாவற்றையும் மறைவற்றுக் கூறிச் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும். தங்கள் மருத்துவரும் தங்கள் அவயவத்தை நன்கு பரீட்சித்துப் பார்ப்பார்கள். கூச்சமோ, மறைப்போ இருப்பது நன்றல்ல.

பெரும்பாலும் பெண்கள் 20 இலிருந்து 40 வயதிற்குப் பின்னும் பெரும்பாலும் மார்பகத்தைப் பார்வையிட வேண்டும். மார்புப் புற்று நோய் இருந்தால் அதன் தாக்கத்தைப் பொறுத்து மருத்துவரின் பரீட்சை ஆலோசனைப்படி அகற்ற வேண்டிய நிலையும் வரலாம். சுகம் பெற்றபின் பிளாஸ்ரிக் மூலம் மார்பகம் மாதிரி யாவும் அமைக்க முடியும். இது பெரும்பாலும் தற்சமயம் விருப்பத்திற்கு அமைய நடைபெற்று வருகின்றது.

# திரை.......

19ஆம் பக்கத்தொடர்ச்சி



கேட்கிறான். 'எல்லா தாயும் இப்படித்தாண்டா பால் கொடுப்பார்கள். நீயும் உன் தாயிடம் இப்படி பால் குடித்து வளர்ந்தவன்தான். அதற்கான உறுப்புதான் இது' என விளக்குகிறாள் அத்தை. (தமிழ் சினிமாவுக்கு புதியது!) அந்த சிறுவன் மெதுவாக தன் தாய் அருகே வந்து அவளைப் பார்க்கிறான். பல்வேறு யோசனைகள் அவன் முகத்தில் ஓடுகின்றன. எதுவும் பேசாமல் மெல்ல தாய் அருகில் சென்று அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டு ஓடி விடுகிறான். பாலுமகேந்திரா முத்திரை!

இசை: இளையராஜா. படத்தின் உணர்ச்சிப்போக்கினை முழுமையாக உள்வாங்கிக் கொண்டு தனிச் சிறப்போடு இசையமைத்துள்ளார். குறைந்தபட்ச இசைதான், எங்கு தேவையோ அங்கு மட்டும் என பிரமிக்க வைத்துவிட்டார். மற்ற இடங்களில் பறவைகள் சப்தம், விலங்குகளின் குரல், நீர் ஓசை, இரவின் ஓசை என யதார்த்தம் கச்சிதமாக உள்ளது. சிறுவன் முதன்முதலாக தாத்தா வீட்டுக்கு வந்து சுற்றி பார்ப்பது, தந்தைக்கு ஹார்ட் அட்டாக் என மனைவியிடம் சொல்வது போன்ற காட்சிகளில் பின்னணி இசை அட்டகாசம். டிஜிட்டல் சினிமாவின் அதிகபட்ச சாதனையை இதில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் பாலுமகேந்திரா. 5டி கேமிராவில் படமாக்கியிருக்கிறார். ஒப்பற்ற ஒளிப்பதிவு!

தலைமுறைகள் - தமிழர்களை தலை நிமிரச் செய்திருக்கும் உலக சினிமா!


## GO 4 PIZZA & WINGS



Medium 1 Topping pizza - $4.99
Walk-in Specials : Large 3 Topping Pizza - $8.99
Contact: 416.208.6115

Monday: Large Pizza - (3 Toppings, 1 Large Fries, 1 - 2L Pop, 1 Free Dipping Sauce) - $14.99
Tuesday: Wings & Pizza - (Large pizza, 3 Toppings, 12 Wings, Walk-in only) - $15.99
Wednesday: Family Special - (Large pizza 3 Toppings, 3 Cans of Pop, 15 wings, 2 free dipping sauce) - $21.99

## AMBIHA SILK (Fancy Jewellery)

FINCH & MIDDLEFIELD



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



அழையுங்கள்: 416.297.5261

# பூரித்த...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

என்னுடைய 'ஈழத்துச் சொற்பொழிவுகள்' என்ற நூலை அறிஞர் அண்ணா வெளியிட்டு வைத்தார். இந்த நூலை சின்ன அண்ணாமலையான் 'தமிழ்ப் பண்ணை' என்ற பதிப்பகம் அச்சிட்டிருந்தது. பல்கலைக்கழக மண்டபத்தை விரிவாக்கம் செய்து பெரிதுபடுத்தினார். இந்தச் சிக்கல்களை அவதானித்த தனிநாயக அடிகளார் தானாகவே ஒரு சிறிய உணவகத்தில் இடம் எடுத்து தங்கி விட்டார். அமைச்சர்களையோ அதிகாரி களையோ சந்திக்க முடியாத சங்கடம்.

முதல் நாள் ஊர்வலத்தைக் குழப்பிய கும்பலுக்கு இறுக்கி ஓங்கி மெல்ல அடி என்று பொலீஸ் அதிபர் தேவாரத்துக்கு முதல் அமைச்சர் அண்ணா கொடுத்த அனுமதி மாறியே செயல்பட்டது. பொலீஸ்காரர்கள் இறுக்கி ஓங்கி இறுக்கியே அடித்து விட்டார்கள். பலருக்கு மண்டை உடைந்து இரத்தம் கசிந்தது. அடிவாங்கியவர்கள் குழப்பங் காசிகளே. இந்த நிகழ்ச்சியை மறுநாள் வெளியான நவசக்தி என்ற நாளிதழில் கவிஞர் கண்ணதாசன் தனது கடிதப்பகுதியில் 'கடிதோச்சி மெல்ல எறிக' என்பதை பொலீஸ் அதிபர் தவறாகப் புரிந்ததால் தமிழ் வெள்ளம் பாய வேண்டிய இடத்தில் இரத்தம் வெள்ளம் பாய்ந்தது என்று எழுதினார். இதே கடிதத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினை உருவாக்கி ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவதற்கு வழி கோலிய தமிழத் தூது தனி நாயக அடிகளார் சென்னைக்கு வந்து எங்கோ தங்கியிருக்கிறார். அவரைக் கவனித்து ஆவன செய்ய முடியாத தமிழக அரசு தமிழ் ஆராய்ச்சிக்கு என்ன செய்யப் போகிறது. தனக்கு கூட்டம் சேர்க்கவும், பெருமை சேர்க்கவும் இந்த பாட்டினைப் பயன்படுத்துகிறது என்று எழுதிவிட்டார்.



## நண்பா!

கவிஞர் கண்ணதாசனும் சொல்லின் செல்வர். ஈ.வெ.கி. சம்பத்தும் தி.மு.க. விலிருந்து பிரிந்து தமிழ் தேசியக் கட்சி தொடங்கி சில நாட்களால் அகில இந்திய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தி.மு.க.வுக்கு எதிராகப் பிரசாரம் செய்த அந்தக் காலத்தில் தான் சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி நடந்தது உனக்கு நினைவிருக்கலாம்.

நவசக்தியில் வந்த கண்ணதாசனின் கடிதத்தைக் கண்டதும் அறிஞர் அண்ணாவும் அமைச்சர்களும் அதிகாரி களும் தனிநாயக அடிகளாரைத் தேடிக் கண்டுபிடிக்க முனைந்தனர். அடிகளார் அன்றைய எம்.ஜி.ஆர். சிவாஜி, ஜெமினி, எஸ்.எஸ்.ஆர் போன்று எல்லாருக்கும் தெரிந்த முகமுடையவரா? அவருடைய சில படங்களைக் கொண்டு தேடியவர்களும் களைத்துப் போனார்கள். கண்டுபிடிக்க முடியவில்லை.

மயிலாப்பூர் குன்றக்குடி மடத்திற்கு வந்த சில அதிகாரிகள் கண்ணதாசனைக் கண்டு தனிநாயக அடிகள் எங்கிருக்கிறார் என்பதை உளவறிந்து வர வேண்டினார்கள். திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி செட்டி நாட்டில் காரைக்குடிக்கு அருகாமை யில் உள்ளதாலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செட்டியார் கழகமான தாலும், கண்ணதாசன் செட்டி நாட்டவர் என்பதாலும், நாங்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் என்பதாலும் அந்தக் கோரிக்கை எங்களிடம் விடப்பட்டது.

நாங்கள் நவசக்தி காரியாலயம் சென்று கவிஞர் கண்ணதாசனைக் கண்டு கதைத்து தனிநாயக அடிகள் தங்கியிருந்த இடத்தை அறிந்து வந்து அதிகாரிகளிடம் சொன்னோம். அடிகளாரை அழைத்து வந்த அதிகாரிகள் வசதியான இடத்தில் தங்க வைத்தனர். அடிகளாரும் மகிழ்ந்து திருப்தியடைந்தார். தன்னை மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் மூன்று நாட்களாகக் கவனிக்கவில்லை என்ற கவலையோ கோபமோ அடிகளாரிடம் இல்லை. அன்றைய நெருக்கடிகளையும் சூழ்நிலை சிக்கல்களையும் புரிந்து கொண்ட பண்பின் வெளிப்பாடு தனிநாயக அடிகளாரிடம் காணப்பட்டது. இந்தப் பண்பின் எதிர்வினைகள் அடிகளாரிடம் அவ்வப்போது ஆராய்ச்சி அரங்கிலும் பொது மேடைகளிலும் வெளியானது.

## நண்பா!

கவிஞர் கண்ணதாசனுக்கும் நமக்குமுள்ள தொடர்பு கனிந்து வளர்ந்தமையையும் அவர் குறித்து 'கண்ணதாசனைக் கண்டேன்' என்று ஒரு நூல் எழுதி 1995 ஆண்டு கனடாவில் வெளியிட்டதையும் தேவை கருதி இக் கடிதத்தில் சுட்டிச் செல்ல விரும்பினேன். தனிநாய அடிகளார் எழுத்திலும் பேச்சிலும் மட்டுமல்லாது நடைமுறையிலும் தமிழ்ப் பண்பாட்டை கடைப்பிடித்தமையையும், வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பண்பாட்டுக் கூறுகளைக் கவனித்து அவதானித்து மதிக்க வேண்டும் என்னும் குணத்தினை வளர்க்க வேண்டும் என்பதனையும் எப்படி அன்றைய உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் வெளிப்படுத்தினார் என்பதையும் அடுத்த கடிதத்தில் எழுதுகின்றேன்.


# யாழ்ப்பாணத்தில் வீடுகள் வாங்க விற்க.....



நீங்கள் யாழ்ப்பாணம், வன்னி மற்றும் இலங்கையில் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் வீடுகள், காணிகள், தொடர்மாடிவீடுகள் வாங்க வேண்டுமா? மேலும் உங்களுடைய சட்டத் தேவைகளுக்கு சட்டத்தரணியை அணுக வேண்டுமா?

நம்பிக்கையான முகவர்களுக்கு அழையுங்கள்

**நவி: 0119477500 2162 / குலகன்: 647.880.1416**

279 நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



விநாயகர் துணை

## புது வருட வாழ்த்துக்கள்



ரொரன்ரோவில் உறைபனியால் மின்சாரம் துண்டிக்கப்பட்ட வேளையில்.. ஓய்வின்றி கடமையே கண்ணாக கடமையில் ஈடுபட்டு மின் வழங்கிய அத்தனை ஊழியர்களையும் வாழ்த்துவோமாக

பவர் தந்த அவர்கள் தான் உண்மையான பவர் ஸ்ரார்ஸ் (Power stars) அவர்களுக்கு கலகலப்பான புதுவருட வாழ்த்துக்கள்.




(நடிகர் பவர் ஸ்ரார் விரும்பினால் மன்னிப்பாராக)



என் செயலால் ஆவது யாதொன்றும் இல்லை இனி தெய்வமேயென்று உணரப்பெற்றேன் …பட்டினத்தார்.

தை பிறந்தால் வழி பிறக்கும். ஆனால் தை பிறப்பதற்கு முதலே பனி பிறந்துவிட்டதே. அதுவும் உறைபனி இயற்கையின் சீற்றம். யாரால் தாங்க முடியும்.



மழை… புயல்… சூறாவளி… நில அதிர்ச்சி.. பூகம்பம்… எரிமலை…. பனிப்புயல்… உறைபனி…

ஐம்பூதங்களும் அன்லிமிரெட்டாக வேலை செய்கின்றன.



குளிக்க, குடிக்க நீரில்லை. வாசலில் முறிந்த மரம் வீதிகளில் தடை. கரன்ற் இல்லை. கடைகளில் சாப்பாடிலை…..



நல்ல தூக்கம் முறித்து செக்கண்ட் புளோர் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் ஜெயலலிதா - சசிகாலா சோடிகள் போல வந்ததை உலகர் கடைக்கண்ணால் பார்த்தபடி…

புதிய கலண்டரில் முக்கிய நாட்களை புள்ளடி போட்டுக் கொண்டிருந்தார். உலகரைப் பொறுத்தமட்டில் எல்லா நாட்களும் முக்கிய தினம் தான்.



உப்பிட்டவரை உள்ளளவும் நினையென்பார்கள் ………



ஆனால் பனிக்குப் போடும் உப்பு உறை பனியால் கூடியளவு விற்பனை நிறுவனங்களில் விற்று முடிந்துவிட்டது. சேல் கண்டவுடன் சாறி நகை களை வாங்கி பாங்க் லொக்கரில் பாதுகாப்பாக வைக்கும் பலர் முக்கிய பொருட்களை வாங்கி வைப்பதில்லை. நண்பர்களுக்கு ரெலிபோன் செய்து உப்பு கேட்டு களைத்து விட்டது. எவ்வளவு படித்திருந்தாலும் சிலர் எதையும் தயார் நிலையில் வைத்திருப்பதில்லை.

பிறிம்லி மீனாவும், மகன் மதனும் உலகர் வீட்டுக்கு வந்தனர். அவர்களுக்கு கறன்ற் இல்லை….



ஹாய் ரூபன் அங்கிள் கவ் ஆர் யு…மேரி.. கிறிஸ்மஸ் ஹப்பி நியூ இயர் ……… என்றபடி உலகர் குழாம் எல்லோருக்கும் ஹாய் எவ்றி பொடி என்றதும்.




செக்கண்ட் புளோர் செல்லம்மா.. மெல்லமாக எடேய்! மதன் உலகப்பு, அன்னம்மா அம்மம்மா, செல்லம்மா அம்மம்மா ராசம்மா பாட்டி என்று கூப்பிட்ட நீ இப்ப என்ன ஹாய்…..எண்டு…

ஜனாதிபதி ஒபாமா மாதிரி தூரத்திலை நிண்டு கை காட்டுறாய் என இழுத்தா….பிறிம்லி மீனா சிரித்தபடி சொன்னா, என்னைக் கூட மா எண்டுதான் கூப்பிடுகிறவன் என பெருமையாகச் சொல்ல......



செக்கண்ட் புளோர் செல்லம்மா சொன்னா…அப்பா எண்டா.. பா, அம்மா எண்டா… மா, அக்கா எண்டா…கா, குடும்பத்துக்கை எல்லாம் சேர்த்துப்பார்த்தால் பா..மா..க… எங்கோ கேட்ட அரசியல் கட்சிபோல கிடக்கு எனச்சொல்லி சிரிச்சா.. (குடும்பத்துக்குள்ளையும் அரசியல்… குடும்ப அரசியல்)



தாமோதரம் வீட்டில் கரன்ற் இருந்தாலும் யார் அடித்தாலும் முந்திக்கொண்டு…ஹலோ… இருட்டுக்குள்ளை நம்பரும் பாக்கேலாமக் கிடக்கு.. என்றவுடன் பக்கத்து லைன் கட்டாகிவிடும்.



இதே விளையாட்டை தாமோதரம் உலகரிடமும் காட்ட நினைத்து ஏமாந்து போனான். உலகருடன் போனில் கதைத்துக் கொண்டிருக்கும்போது உலகர் வீட்டில் ரி.வி.யில் பேசும் வசனங்கள் தாமோதரம் வீட்டிலும் கேட்டது. 2..நாளா…கரன்ற் இல்லையென்று சொல்லும் போதே…உலகர் சொன்னார் கதைக்கிறது கேக்கேல்லை என்றதும் இல்லை உலகண்ணை 2 நாளா கரன்ற் இல்லை இப்பதான் வந்ததென்று சமாளித்துக்கொண்டான்.



31.2013 ஆம் ஆண்டு நிறைவு

01.01.2014 ஆங்கில புதுவருடம்




ஜனவரி 1….15..

1. 2014 புது வருடம்

1. 1866 யாழ்ப்பாணத்தில் முதன்முதல் காவல்துறை (பொலிஸ்) அமைக்கப்பட்டது .

1. (1886) பர்மா விக்டோரியா மகாராணிக்கு பிறந்தநாள் பரிசாக வழங்கப்பட்டது.

2. 1958 - இலங்கையில் வாகன இலக்கத்தகடுகள் சிங்கள மொழியில் சிறீ எழுத்து கட்டாயமாக்கப்பட்டது.



3. யாழ்ப்பாணத்தில் 4வது உலகத்தமிழாராச்சி மாநாடு ஆரம்பமானது.

2. கண்டி கடைசி அரசன் கீர்த்தி சிறீ ராஜசிங்கன். (1782)

3. குமார் பொன்னம்பலம் நினைவுதினம்.



7. 1841 - யாழ்ப்பாணத்தில் உதயதாரகை பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியானது

8. விஞ்ஞானி கலிலியோ (1642) நினைவுதினம்.

9. மார்க்கோ போலோ நினைவுதினம் (1324)



10. 1974 - 4 வது உலகத்தமிழாராச்சி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வில் 11 தமிழ் மக்கள் பொலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

12. எம்.ஜி.ஆர். (கொலை முயற்சி) எம்.ஆர். ராதாவினால் கழுத்தில் சுடப்பட்டார்.
(எம்.ஆர் ராதா. எம்.ஜி.ஆர். படங்களில் வில்லனாக நடிப்பவர்)



14. தைப்பொங்கல்

14. சிறீ சபரிமலை ஐயப்பன் மகர ஜோதி.

15. பட்டிப்பொங்கல்








சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய
கலாச்சார ஒன்றியம் - கனடா

பொங்கல் மாலைப் பொழுது

காலம்: ஜனவரி 14, 2014 (சனிக்கிழமை)

நேரம்: மாலை 5:00மணி

இடம்: Middlefield Collegiate Institute, (Middlefield & Highglen)

- கனடா ஞானபாஸ்கரோதய கலாச்சார ஒன்றியத்தினர்



நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா???
SPOKEN ENGLISH WITH GRAMMAR
Only 50 hours Course
கவலையே வேண்டாம்
100% உத்தரவாதத்துடன் ஓர் அரிய வாய்ப்பு
2 மாதங்களில் இலக்கணப் பிழையின்றி சரளமாக ஆங்கிலம் பேசலாம். Letter writing, listening, Speaking கற்பிக்கப்படும்
சிறந்த வேலைவாய்ப்பை பெற
உயர் கல்வியை தொடர (ELPIP)
Citizen ship பரீட்சைக்கு தயார்ப்படுத்தல்
Bank, Hospital, Office, மற்றய இடங்களில் சிறிதளவும் ஆங்கிலம் பேசத்தெரியாதவர்களும் பேசமுடியும்
100% உத்தரவாதம்
647-606-1009
SPECIAL ADULT ENGLISH COURSES
CONTENTS
(Listening/Speaking/Writing/Reading)
Pronunciation Practice
Tongue Twist Practice
Role Play
Debate
Grammar & Writing
Letter Writing/Essay Writing
Listening
COMPUTER COURSES
Ms.Office
Ms.Word
Ms.Excel
Ms.Powerpoint
Internet & E-mail
Web Designing
Photoshop
MORNING, AFTERNOON, WEEKENDS & WEEKDAYS CLASSES
10am - 12 pm
1pm - 3pm
5.30pm - 7.30pm
RA
Rebanzo Academy
Middlefield & Finch
115 Lansbury Dr.




வாகன MOTOR VEHICLE
விபத்து ACCIDENT
SKT PARALEGAL SERVICE
CRIMINAL MATTERS
SUMMARY
416.803.5296
Kalakalappu Theesan
கலகலப்பு தீசன்
SK THEESAN
TRAFFIC TICKETS
LICENSED PARALEGAL
sktheesan@gmail.com
MOTOR VEHICLE ACCIDENT
SERIOUSLY INJURED ?
ACCIDENT BENEFITS
PERSONAL INJURY
TRAFFIC TICKETS
DON'T
MISS YOUR TRIAL DATE
LOSE YOUR POINTS
CRIMINAL CONVICTION
PERMANENT RESIDENT
CITIZENSHIP
SPONSORSHIP
CRIME
CRIMINAL CHARGES ?
EXPERIENCED LAWYERS AVAILABLE
















***Free Real Estate Class -*** Call: ***416.321.6969***








விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com www.tamilvanakkam.com***


# FREE Real Estate

## Classes start every week

## Call:416.321.6969

